விலை : 20.00
பக்கங்கள்: இருபத்து நான்கு
website : www.valampurii.lk
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION MONEY TRANSFER
உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும் தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக் கொள்ளவும்
ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-021 222 5392

சங்கு 17 வள்ளுவர் ஆண்டு 2047 ஐப்பசி 19 வெள்ளிக்கிழமை (04.11.2016) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 321

# அரசியல் தீர்வு இழுத்தடிப்பு; நாட்டை ஆபத்தில் தள்ளும்

## கிழக்கு முதலமைச்சர் நஸீர் எச்சரிக்கை



(மட்டக்களப்பு)

தருகிறோம் இன்னும் தருகிறோம் எனக் காலந் தாழ்த்தி இந்த நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வு வழங்கப்படாமல் இழுத்தடிப்புச் செய்யப்படுமாயின் அது இந்த நாட்டை ஆபத்தில் தள்ளும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் எச்சரித்துள்ளார்.

23ஆம் பக்கம் பார்க்க....

### 80 சதவீதம் வெளிநாட்டுக்கடன்

(கொழும்பு)

அடுத்த ஆண்டில் மாத்திரம் இலங்கை 4.4 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் செலுத்த வேண்டியுள்ளது. எமக்கு வருமானமாக கிடை

24ஆம் பக்கம் பார்க்க....

### கடனை செலுத்த முடியாமையால் சேயுடன் தாய் உயிர்மாய்ப்பு!



8ஆம் பக்கம் பார்க்க...

### பாடகர் அமரதேவ காலமானார்

## நேற்றிலிருந்து ஒருவார காலம் தேசிய துக்க தினமாக அறிவிப்பு



(கொழும்பு)

இலங்கை இசைத்துறை ஜாம்பவான் என வர்ணிக்கப்படும் டபிள்யூ.டி.அமரதேவ தனது 88ஆவது வயதில் காலமாகியுள்ளார்.


சுகவீனமுற்ற அமரதேவ நேற்றுக் காலை கொழும்பு ஸ்ரீ ஜயவர்

23ஆம் பக்கம் பார்க்க....

### ராஜீவ் கொலை வழக்கு

25 வருடங்களாக சிறையிலிருக்கும் பேரறிவாளன் எழுதும்

## சிறைக்குள் பேரறிவு!



தொடர் உள்ளே...

## கஷ்டத்தில் உதவிய சீனாவை அரசு பழிவாங்குகிறது–பந்துல

(கொழும்பு)

டார். இதன்போது அவர் மேலும்

## குழந்தையின் உயிரைக்காப்பாற்ற தன்னுயிரை தியாகம் செய்த தாய்!

24ஆம் பக்கம் பார்க்க....

23ஆம் பக்கம் பார்க்க....

# கஷ்டத்தில் உதவிய சீனாவை அரசு பழிவாங்குகிறது–பந்துல

(கொழும்பு)

யுத்தத்தை நிறைவு செய்ய உதவிய சீனாவை தற்போதைய அரசாங்கம் பழிவாங்குவதாக, கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன குற்றஞ் சாட்டியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற விஷேட ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனை குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

இலங்கையர்களின் கஷ்டங்களின் போது துணை நின்ற சீனாவை தற்போதைய அரசாங்கம் விரோதியாக்கியுள்ளது. இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையிலான உறவினை, நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க விமர்சித்தமைக்கு, இலங்

23ஆம் பக்கம் பார்க்க....

# 91 இலட்சம் ரூபாய் பெறுமதியான 52 கிலோ கேரள கஞ்சா மீட்பு



23ஆம் பக்கம் பார்க்க....

# குழந்தையின் உயிரைக்காப்பாற்ற தன்னுயிரை தியாகம் செய்த தாய்!

## மனதை உருக்கிய சபாநாயகரது மகளின் மரணம்

(லண்டன்)

மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட தாயொருவர் தனது வயிற்றில் வளர்ந்த குழந்தைக்காக குறித்த நோய்க்கு சிகிச்சைபெறாது உயிர் துறந்த சம்பவமொன்று இங்கிலாந்தில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் இலங்கை பாராளுமன்றின் சபாநாயகரான கரு ஜயசூரியவின் இளைய மகளாவார். சபாநாயகர் கரு ஜயசூரியவின் மகளான சஞ்சீவனி இந்திரா ஜயசூரிய, புற்றுநோயால் பாதிக்கப்

24ஆம் பக்கம் பார்க்க....



# ஆவா குழுவுக்கும் எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை

## ராஜிதவின் குற்றச்சாட்டை கோத்தா நிராகரிப்பு



(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் மக்களிடையே அச்சத்தை தோற்றுவித்துவரும் ஆவா குழுவை தாம் உருவாக்கவில்லை என்று தெரிவித்துள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ, அந்தக் குழு

24ஆம் பக்கம் பார்க்க....


க.பொ.த (சா/த)

பரீட்சை

மாதிரி வினாத்தாள்

கணிதம்- II



உள்ளே...


# நாடு திரும்பினார் அர்ஜூன் மகேந்திரன்

(யாழ்ப்பாணம்)

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக, நேற்று பிற்பகல் 4.10 மணியளவில்

23ஆம் பக்கம் பார்க்க....

# மாணவர்கள் படுகொலை; வழக்கு விசாரணை இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைகழக மாணவர்கள் இருவர் பொலிஸாரின் துப்பாக்கி சூட்டில் உயிரிழந்தமை தொடர்பில் கைதான பொலிஸ் உத்தியோகத்தர்களது வழக்கு விசாரணையானது இன்றைய தினம் யாழ்.நீதிவான் நீதிமன்றில் இடம்பெறவுள்ளது.

கடந்த மாதம் இரு பல்கலைகழக மாணவர்கள் பொலிஸார் நடத்திய துப்பாக்கி சூட்டு சம்பவத்தில் பலி

24ஆம் பக்கம் பார்க்க....

# மத்திய வங்கி விவகாரம் நீதிமன்ற விசாரணை

(கொழும்பு)

மத்திய வங்கி பிணைமுறிகள் விவகாரம் தொடர்பில் அரசியல் வாதிகளால் தீர்வு காணமுடியாது.

இவ்விடயம் தொடர்பில் நாட்டு மக்கள் உண்மையை அறிந்து கொள்ள வேண்டுமாயின் நீதிமன்

24ஆம் பக்கம் பார்க்க....

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இந்திய மீனவர்கள் ஐவர் விடுதலை

(யாழ்ப்பாணம்)


இலங்கை கடற்பரப்பில் அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் ஐவர் சட்டமா அதிபர திணைக்களத்தினால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

இதன்படி கடந்த 4ஆம் திகதி யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டிய அத்துமீறிய மீன்பிடியில் ஈடுபட்ட இந்திய மீனவர்கள் ஐவர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் ஊர்காவற்றுறை நீதிமன்ற உத்தரவுக்கமைய யாழ்.சிறையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர். இந்நிலையிலேயே குறித்த ஐந்து மீனவர்களையும் விடுதலை செய்ய சட்டமா அதிபர் திணைக்களமானது அனுமதி வழங்கிய நிலையில் நேற்றுமுன் தினம் மாலை யாழ்.இந்திய துணைத்தூதரக அதிகாரிகளிடம் இவர்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தனர்.

விடுதலை செய்யப்பட்ட இந்திய மீனவர்களை மீளவும் தமிழ் நாட்டிற்கு அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை இலங்கைக்கான இந்திய தூதரகம் மேற்கொண்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



## செல்வி அர்ச்சனா பாலகுமாரன்

கிளி/கிளிநொச்சி மத்திய ஆரம்ப வித்தியாலயத்தில் கல்வி கற்று 2016 ஆம் ஆண்டு நடைபெற்ற தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் 178 புள்ளிகளைப் பெற்று பாடசாலை மட்டத்தில் முதல் நிலையையும், மாவட்ட மட்டத்தில் 6-வது நிலையையும் பெற்றமையையிட்டு இவரை அகம் மகிழ்ந்து பல்லாண்டு காலம் பல சிறப்புக்கள் பெற்று வாழ்கவென வாழ்த்துவதுடன் இந்நிலைக்கு உயர்த்திய அதிபர், ஆசிரியர்கள், பின்னூட்டல் கல்வியை வழங்கிய ஆசிரியர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

வாழ்த்துவோர் :
அப்பா, அம்மா, அண்ணன் - எழில்வதனன்,
தாத்தா, அம்மம்மா, அப்பம்மா,
பெரியம்மா, அண்ணன்மார், அக்காமார்,
மாமாமார், மாமிமார்.

தகவல் : அப்பா

(சி-6313)

சுவாமியே சரணம் ஐயப்பா

# ஈழத்து சபரிமலை







யாழ்/கோண்டாவில்

## சபரீச ஐயப்பன் தேவஸ்தானம்

Sabareesa Iyappan Thevasthanam
Kondavil Jaffna Sri Lanka

## மகரஜோதி மண்டல பூஜை பெருவிழா

16.11.2016 முதல் 14.01.2017 வரை
சிறப்பு பூஜைகள் மஹோற்சவம் நடைபெறும்.
இவ்விழாவின் போது கனடா நாட்டில் இருந்து
ஆன்மீக செம்மல் குருசாமி : க.தம்பிராசா அவர்கள்
தேவஸ்தான சாமிமார்களுக்கு மாலை அணிவித்து
இவ் நிகழ்வில் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.





*அனைவரும் வருக! ஐயன் அருள் பெறுக!!*

இங்ஙனம் :
ஈழத்து சபரிமலை தேவஸ்தானம்

(சி-6300)

# சந்தேக நபர்கள் 10 பேர் திடீர் சுற்றிவளைப்பில் கைது

(கரணவாய்)

துன்னாலைப் பகுதியில் நேற்றிரவு பொலிஸார் மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பில் சந்தேகத்திற்குள்ளான பத்துப் பேர் கைது செய்யப்பட்டதாக காங்கேசன்துறை பிராந்திய உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஜெயசுந்தர தெரிவித்தார்.

அண்மையில் துன்னாலைப் பகுதியில் வாள்வெட்டு சம்பவம் இடம்பெற்றமையை அடுத்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டவர்களை மீளவும் தாக்குவதற்கு வாள்களுடன் வைத்தியசாலைக்குள் ஒரு குழு புகுந்தது.

இது சம்பந்தமாக விசாரணை மேற்கொண்டு வந்த பொலிஸார் பொதுமக்களின் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதற்காக துன்னாலைப் பகுதியை நேற்றிரவு திடீர் சுற்றிவளைப்பிற்குள்ளாக்கினர்.

நெல்லியடி,பருத்தித்துறை, வல்வெட்டித்துறை பொலிஸார் இணைந்து உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் தலைமையில் திடீர் இச்சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

இதன்போது சந்தேகத்தின் பேரில் பத்துப் பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் எனவும் மற்றையவர்கள் விடுவிக்கப்படு வார்கள் எனவும் உதவிப்பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார். (செ -60)

# மதுபான விலையை உயர்த்த நடவடிக்கை

(கொழும்பு)

வற் வரி அதிகரிப்பு காரணமாக மதுபானத்தின் விலையினை உயர்த்துவதற்கு மதுபான நிறுவனங்கள் நடவடிக்கை எடுத்துள்ளன.

கடந்த முதலாம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும் வகையில் குறித்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலங்கை வடிசாலைகள் நிறுவனம் தெரிவித்துள்ளன.

இதற்கமைய மதுசார போத்தல் ஒன்றின் விலை 200 ரூபாய்க்கும் 240 ரூபாவுக்கும் இடைப்பட்ட விலையில் அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிவிசேட மதுபானபோத்தல் ஒன்றின் விலை ஆயிரத்து 400 ரூபாயாகவும்பழைய சாராயம் போத்தல் ஒன்றின் விலை ஆயிரம் 600 ரூபாயினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.(செ-11)

# இலங்கை வருகின்றார் பரோனஸ்

பிரித்தானியாவின் வெளிவிவகார மற்றும் கொமன்வெல்த் பணியக இராஜாங்க அமைச்சர் பரோனஸ் அனெலி அடுத்த வாரம் இலங்கைக்கு உத்தியோகபூர்வவிஜயம்ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த தகவலை,கொழும்பில் உள்ள பிரித்தானிய உயர்ஸ்தானிகராலயம் நேற்று அறிவித்துள்ளது.

இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள பரோனஸ் அனெலி, பிரதமர் ரணில் விக்ரமசிங்க, வெளிவிவகார அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் எதிர்க்கட்சி தலைவர் இரா.சம்பந்தன் ஆகியோரை சந்திக்கவுள்ளார் என குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த விஜயத்தின் போது, இலங்கையின் ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை வலுப்படுத்தும் நோக்கில் கலந்துரையாடப்பட உள்ளதாக தெரிவிககப்பட்டுள்ளது.(செ-11)

**காணி விற்பனைக்கு**

A9 வீதி, நுணாவில் சந்தி, மட்டுவில் தெற்கு, துர்க்கை அம்மன் ஆலய வீதி ஆரம்பத்தில் 3 1/4 பரப்பு வெறும் காணியும்,
நுணாவில் சந்திக்கு அப்பால் ராசா கடை முன் வீதியில் (150m தூரத்தில்) 3 அறை கொண்ட புதிய வீடும் விற்பனைக்கு உண்டு.

**077 8730 129**

(6510)

# 7-ம் ஆண்டின் ஆறாத நினைவலைகள்

அமரர்

## காசிப்பிள்ளை செல்லத்துரை



மலர்வு : 03.02.1939
உதிர்வு : 23.10.2009

ஞாலத்தில் எங்கள் நல்வாழ்விற்கு வழிகாட்டிய
அன்புத் தந்தையே!
காலங்கள் கடந்தாலும் எம் உயிர் உள்ளவரை
உங்கள் அன்பான நினைவுகளை
எம் மனதில் சுமந்திருப்போம்
ஆண்டவன் சந்நிதியில் சாந்தியுடன் வாழ்வீர்களாக!

டச்சு வீதி,
உடுவில்,
சுன்னாகம்.

உங்கள் நினைவுகளுடன்...
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(6509)

# உலகில் நான்கு நாட்களுக்கு ஒரு பத்திரிகையாளர் கொலை

## யுனெஸ்கோ அதிர்ச்சித் தகவல் வெளியீடு




(பாரீஸ்)

**உலகளவில் ஒவ்வொரு நான்கு நாளுக்கு ஒரு பத்திரிகையாளர் கொல்லப்படுவதாக யுனெஸ்கோ அமைப்பு நேற்று முன்தினம் அதிர்ச்சிகர தகவலை வெளியிட்டுள்ளது.**

ஐக்கிய நாடுகள் சபையின் முக்கிய துணை நிறுவனங்களில் ஒன்று யுனெஸ்கோ (UNESCO). இந்நிறுவனமானது, உறுப்பு நாடுகளிடையே கல்வி, அறிவியல் பண்பாடு மற்றும் தொடர்புத்துறைகளில் ஒத்துழைப்பை ஊக்குவித்து வருகிறது.

இந்நிறுவனம் உலகம் முழுவதும் பத்திரிகையாளர்கள் கொலை செய்யப்படுவது குறித்த கணக்கீட்டை நேற்று முன்தினம் புதன்கிழமை வெளியிட்டு அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

பத்திரிகையாளர் கொலை குறித்து யுனெஸ்கோ வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது.

கடந்த 10 ஆண்டுகளில் சுமார் 827 பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதில் சிரியா, ஈராக், ஏமன் மற்றும் லிபியா உள்ளிட்ட அரபு நாடுகளில் தான் பெரும்பாலான கொலைச் சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. அதற்கு அடுத்தாக லத்தீன் அமெரிக்காவில் அதிக கொலைகள் நடைபெற்றுள்ளன.

கடந்த 2006-2015 காலகட்டங்களில் கடந்த 2 ஆண்டுகளில் மட்டும் 59 சதவீதம் கொலைகள் நடைபெற்றுள்ளன. அதுவும் போர்ச் சூழல் உருவான இடங்களில் கொல்லப்பட்டுள்ளனர்.

அந்த காலகட்டங்களில் மட்டும் கொல்லப்பட்ட சுமார் 213 பத்திரிகையாளர்களில் 78 பேர் அரபு நாடுகளைச் சேர்ந்தவர்கள். அதவாது சுமார் 36.5 சதவீதம். அதே சமயம், மேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க நாடுகளில் கடந்த 2014 ஆம் ஆண்டில் பூஜ்ஜியம் என்றிருந்த நிலை மாறி, கடந்த ஆண்டில் மட்டும் மேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவைச் சேர்ந்த பத்திரிகையாளர்கள் 11 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

வெளிநாடுகளைச் சேர்ந்த பத்திரிகையாளர்களை விட, உள்ளூர் பத்திரிகையாளர்களுக்கே ஆபத்து அதிகம் நிகழ்ந்துள்ளது. ஆனாலும் கடந்த 2013ஆம் ஆண்டில் நான்கு பேர் என்றிருந்த நிலை மாறி 2014ஆம் ஆண்டில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்கள் 17 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

அதேபோல், இணையத்தள பத்திரிகையாளர்கள் கடந்த 2014ஆம் ஆண்டில் 2 பேர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் அந்த நிலைமையும் மாறி, கடந்த ஆண்டில் மட்டும் இணையத்தள பத்திரிகையாளர்கள் 21 பேர் கொல்லப்பட்டுள்ளனர். இதில் பெண் செய்தியாளர்களை விட ஆண்கள் 10 மடங்கு அதிக அளவில் கொல்லப்பட்டுள்ளனர்.

2014-15 ஆண்டுகளில் 194 ஆண் பத்திரிக்கையாளர்களுக்கு 18 பெண்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் தொலைக்காட்சிகளில் பணிபுரிபவர்களே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர் என்றும் அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. அதில், பாதிப் பேர் சிரிய நாட்டை சேர்ந்த பிளாக் எனும் வலை பக்கத்தில் எழுதும் பத்திரிகையாளர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

பத்திரிக்கையாளர் கொலை குறித்து அதிக அளவில் விழிப்புணர்வு இருந்ததால் மேற்கு ஐரோப்பா மற்றும் வட அமெரிக்காவில் குறிப்பிடும்படியாக கொலைகள் ஏதும் நிகழவில்லை. பத்து ஆண்டுகளுக்கு மேலாக பத்திரிகையாளர்கள் எதிர்கொள்ளும் ஆபத்துக்களை யுனெஸ்கோ அறிக்கை மூலம் நிரூபணமாக்கியுள்ளது. (இ-10)

# யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இருவருக்கு கானாவில் ஜனாதிபதி விருது வழங்கல்




மேற்கு ஆபிரிக்கா நாடாகிய கானாவில் ஏற்றுமதிக்கான ஜனாதிபதி உயர் விருது வழங்கி ஈழத்தமிழர் இருவர் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் வடமராட்சி கரணவாய் பகுதியைச் சேர்ந்த கந்தசாமி குகதாசன், அல்வாய் கிழக்கு பகுதியைச் சேர்ந்த கணேசராசா சதீசன் ஆகிய இருவரும் இணைந்து 2000 ஆம் ஆண்டு முதல் கானா நாட்டில் விவசாய மற்றும் ஏற்றுமதி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதுடன் ஐரோப்பா நாடுகளுக்கும் மற்றும் ஏனைய சில நாடுகளுக்கும் ஏற்றுமதியை மேற்கொண்டு வருகின்றனர்.

அந்த நாட்டில் இந்த வருடம் அதிக ஏற்றுமதி செய்யும் வர்த்தகர்களில் ஈழத்தமிழர்கள் இருவர் முன்னிலையில் இருப்பது தமிழர் அனைவருக்கும்பெருமையான விடயம்

அத்துடன் கடந்த முறை 2ஆவது இடத்தைப்பெற்று வெள்ளிப்பதக்கம் பெற்றவர்கள் இந்தமுறை 1 ஆவது இடத்தைப்பெற்று தங்கப்பதக்கம் பெற்று பெருமை சேர்த்துள்ளனர்.

நேற்று கானா தலை நகரான அக்ராவில் ஜனாதிபதி ஜோன் டமனி மகாமா முன்னிலையில் இவ்விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

ஆபிரிக்கா நாடுகளில் ஏற்றுமதிக்கான ஜனாதிபதி விருது ஈழத்தமிழர்களுக்கு வழங்கப்படுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# 2017; பாடசாலைத் தவணைகள் குறித்து கல்வியமைச்சு அறிவிப்பு

2017ஆம் ஆண்டுக்கான பாடசாலைத் தவணைகள் விபரத்தை கல்வியமைச்சு வெளியிட்டுள்ளது. நாட்டிலுள்ள அரச, தனியார் கல்வியமைச்சின் கீழ்வரும் சகல கல்வி நிறுவனங்களுக்குமான தவணை விபரம் கல்வியமைச்சின் செயலாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி நாட்டிலுள்ள சகல தமிழ், சிங்கள மற்றும் முஸ்லிம் பாடசாலைகள் அனைத்தும் ஜனவரி மாதம் 02ஆம்திகதிமுதலாம்தவணை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிற்காக திறக்கப்படும்.

எனினும் முதலாம் தவணைக்கான விடுமுறை தமிழ், சிங்களப் பாடசாலைகளுக்கு ஏப்ரல் மாதம் 5 ஆம் திகதியும் முஸ்லிம் பாடசாலைகளுக்கு ஏப்ரல் மாதம் 6ஆம் திகதியும் வழங்கப்படும். அதாவது விடுமுறைக்காக பாடசாலைகள் மூடப்படும்.

இரண்டாம் தவணைக்காக சகல தமிழ், சிங்களப் பாடசாலைகள் ஏப்ரல் 26 ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 4ஆம் திகதி வரைக்கும் முஸ்லிம் பாடசாலைகள் முதற்கட்டமாக ஏப்ரல் மாதம் 19ஆம் திகதி முதல் மே மாதம் 26ஆம் திகதிவரைக்கும் பின்னர் ஜூன் மாதம் 28ஆம் திகதி முதல் ஓகஸ்ட் 18வரைக்கும் திறந்திருக்கும்.

மூன்றாம் தவணைக்காக சகல தமிழ், சிங்களப் பாடசாலைகள் செப்டெம்பர் 6ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 8ஆம் திகதி வரைக்கும் முஸ்லிம் பாடசாலைகள் ஓகஸ்ட் மாதம் 28ஆம் திகதி முதல் டிசெம்பர் மாதம் 8ஆம் திகதிவரைக்கும் திறந்திருக்கும்.

முஸ்லிம் பாடசாலைகளுக்கான ரமழான் நோன்பு விடுமுறை மே 27 முதல் ஜூன் 27 வரையும் வழங்கப்படும் என அவர் மேலும் அறிவித்தார். (இ-7-10)

# பௌத்தர்கள் இல்லாத இடத்தில் புத்தர் சிலையால் என்ன பயன்?

## அமைச்சர் ராஜித கேள்வி



பௌத்தர்கள் வாழும் இடத்திலேயே புத்தர் சிலை அமைக்கப்பட வேண்டும். பௌத்தர்கள் இல்லாத இடத்தில் புத்தர் சிலை அமைப்பதில் என்ன பயன் என்று அமைச்சரவை பேச்சாளரும் அமைச்சருமான ராஜித சேனாரட்ன கேள்வியெழுப்பினார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ராஜித சேனாரத்ன மேற்கண்டவாறு பதில் கேள்வியெழுப்பினார்.

கேள்வி:- அண்மையில் கிளிநொச்சியில் அமைக்கப்பட்ட புத்தர் சிலை அகற்றப்பட்ட விவகாரம் குறித்து ?

பதில்- பௌத்தர்கள் வாழும் இடத்திலேயே புத்தர் சிலை அமைக்கப்படவேண்டும். பௌத்தர்கள் இல்லாத இடத்தில் புத்தர் சிலை அமைப்பதில் என்ன பயன். பௌத்த மதமும் புத்தரும் இதனை அனுமதிக்கவில்லை. அடுத்தவன் தோட்டத்தில் சென்று எனது சிலையை அமைக்க முடியுமா? அதனால் இது தவறாகும் எனத் தெரிவித்தார். (இ-7-10)

# உரிமைகள் சட்டமூலம் கலந்தாலோசனை நாளை

(யாழ்ப்பாணம்)

அரசியலமைப்பு கற்கைகளுக்கான நிறுவகத்தினால் இலங்கைக்கான ஒரு புதிய உரிமைகள் சட்டமூலம் தொடர்பான கலந்தாலோசனை நாளை 5 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும். அரசியல் அமைப்பு மாற்றத்திற்கான குழுவின் முக்கிய உறுப்பினர்களான கலாநிதி ஜயம்பதி விக்கிரமரட்ன மற்றும் லால் விஜயநாயக்க ஆகியோரின் வழிநடத்தலில் இக்கலந்துரையாடல் நடைபெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(இ-3)

# மேற்கிந்தியதீவுகள் ஆறுதல் வெற்றி தொடர் பாகிஸ்தான் வசமானது

பாகிஸ்தானுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இதன் மூலம் இத் தொடரை பாகிஸ்தான் 2:1 என கைப்பற்றியுள்ளது.

பாகிஸ்தான்- மேற்கிந்திய தீவுகள் அணிகள் இடையேயான மூன்று போட்டிகள் கொண்ட் டெஸ்ட் தொடர் ஐக்கிய அரபு நாட்டில் உள்ள சார்ஜாவில் நடைபெற்றது.

இதில் முதல் இரண்டு போட்டிகளில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்று தொடரை கைப்பற்றிவிட்டது.




இந்த நிலையில் ஆறுதல் வெற்றிகாக மூன்றாவது போட்டியில் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி பாகிஸ்தானை முதல் இன்னிங்ஸில் 281 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் வீழ்த்தியது. பின்னர் அந்த அணி 337 ஓட்டங்கள் குவித்தது.

இரண்டாவது இன்னிங்ஸில் மேற்கிந்திய தீவுகள் பந்துவீச்சை சமாளிக்க முடியாமல் தடுமாறிய பாகிஸ்தான் அணி நான்காம் நாள் ஆட்டத்தின்போது 208 ஓட்டங்களை மட்டுமே எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பின்னர் 153 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற எளிமையான இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி முதலில் சிறிது தடுமாறி விக்கெட்டுகளை பறிகொடுத்தாலும் பின்னர் பிராத்வெயிட் 44 ஓட்டங்களும், டோரிச் 36 ஓட்டங்ளும் எடுக்க ஐந்து விக்கெட் வித்தியாசத்தில் வெற்றியை சுவைத்தது.

மேற்கிந்திய தீவுகள், 2007ஆம் ஆண்டிலிருந்து அவர்கள் நாட்டுக்கு வெளியே பங்களாதேஷை தவிர்த்து வேறு எங்கும் நடந்த போட்டியில் வென்றதில்லை என்ற மோசமான சாதனையை இந்த வெற்றியின் மூலம் முடிவுக்கு கொண்டு வந்துள்ளது.

போட்டியின் ஆட்ட நாயகனாக மேற் கிந்தியதீவுகளின் பிராத் வெயிட்டும் தொடர் நாயகனாக பாகிஸ்தானின் யசின்சாவும் தெரிவாகினார்கள். (க)

## பாரிஸ் டெனிஸ் 3-வது சுற்றில் அன்டி முர்ரே

பாரிஸ் மாஸ்டர்ஸ் டென்னிஸ் போட்டியில் ஆன்டி முர்ரே (இங்கிலாந்து) 3-வது சுற்றுக்கு தகுதி பெற்று உள்ளார்.

29 வயதான அவர் 2-வது சுற்றில் 6-3, 6-7 (5-7), 7-5 என்ற கணக்கில் சிறப்பாக விளையாடி ஸ்பெயின் வீரர் பெர்னாண்டோ வெர்டஸ் சோவை தோற்கடித்தார்.

இந்த வெற்றியை பெற முர்ரேக்கு 2 மணி 29 நிமிட நேரம் தேவைப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (க)

# மரண அறிவித்தல்



## திருமதி சிவசம்பு புவனேஸ்வரி

நல்லூர் மூத்தவிநாயகர் கோவிலடியைப் பிறப்பிடமாகவும், கெருடாவில் வடக்கு, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவசம்பு புவனேஸ்வரி நேற்று (03.11.2016) வியாழக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் சிவசம்பு அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற நல்லையா - அன்னம்மா தம்பதியினரின் அன்பு மகளும், இரத்தினசிங்கம், இரத்தினபாலு, காலஞ்சென்ற சுதாகரன், சண்முகரத்தினம், பிரபாகரன், பத்மகலா, சயந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், வசந்தி, யசோநிதி, மாலினி, விஜயகீதா, றஜிதகுமாரி, தயாளன், கேதீஸ்வரி ஆகியோரின் அன்பு மாமியும், ஐந்தூரி, கம்ஷத்வனி, கௌதம், பானுஜா, அபினயா, கேதுசன், மிதுசன், பானுஜா, நிவியா, கயலினி, கதுஷன், கயானி, சுகிர்தன், நஷானா, சர்மிகா, சர்மிகன், அபிநயா, தவின்ஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.11.2016) வெள்ளிக்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாப்பிட்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்

(சி-6314)

# வடக்கு அமைச்சர்கள் மீதான ஊழல் மோசடி விசாரணைகள் இதுவரை ஆரம்பிக்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அமைச்சர்கள் மீதான ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்குரிய ஆதாரங்கள் மற்றும் காணொலிகளை சமர்ப்பிக்க வந்த போது அங்கு விசாரணைக்காக ஏற்பாடுகள் எதுவும் இடம்பெறவில்லை. இது பொது மக்களை ஏமாற்றும் செயல் என என வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி.லிங்கநாதன் குற்றஞ்சாட்டியுள்ளார்.

வடமாகாண அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டினை விசாரிப்பதற்காக நியமிக்கப்பட்ட 3 பேர் கொண்ட குழுவின் விசாரணை நேற்று வியாழக்கிழமை நடைபெறுவதாக கூறியிருந்த நிலையில், இன்று (நேற்று) ஆதாரங்களை சமர்ப்பிக்க வந்தேன் ஆனால், அங்கு விசாரணைகள் இடம்பெறவில்லை என்றார். இந்த விசாரணைக்குழு குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வட மாகாண அமைச்சுகளுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் விசாரணை செய்யப்பட வேண்டுமென கடந்த பெப்ரவரி மாதம் 09 ஆம் திகதி அன்று வடமாகாண சபையில் பிரேரணை முன்மொழியப்பட்டு, வடமாகாண சபை உறுப்பினர் சயந்தனினால் வழிமொழியப்பட்டது. அன்று 8 பேர் கையெழுத்திட்டு முதலமைச்சரினால் பிரேரணை கொண்டு வரப்பட்டது.

முதன் முதலில் கொண்டு வரப்பட்ட பிரேரணை தோற்கடிக்கப்பட்டு, இறுதியில் தானே விசாரணை மேற்கொள்வதாக முதலமைச்சர் கூறியிருந்தார்.கிட்டத்தட்ட 8 மாதங்கள் விசாரணைகள் நடைபெறாத நிலையில், நேற்றிலிருந்து விசாரணைகள் ஆரம்பிக்கப்படுவதாக முதலமைச்சரினால் அறிவிக்கப்பட்டதாக அவைத்தலைவர் சீ.வீ. கே.சிவஞானத்தினால் சபையில் அறிவிக்கப்பட்டது.

இதன்படி 2 ஓய்வுபெற்ற நீதியரசர்களும், ஓய்வுபெற்ற அரசாங்க அதிபர் மற்றும் 3 பேர் கொண்ட விசாரணைக்குழு அமைக்கப்பட்டுள்ளதென்றும் 3 மாதங்கள் இயங்கும் என்றும் அந்த விசாரணைக்குழு பிரதம செயலாளர் அலுவலகத்தில் நேற்றிலிருந்து முதல் 3 மாதங்கள் இயங்குமென மாகாண சபையில் அறிவிக்கப்பட்டது.

அதனடிப்படையில் சரியாக ஒரு மாதம் கழித்து இன்று (நேற்று) ஆதாரங்களை கையளிப்பதற்காக வந்தேன். ஆனால் விசாரணைக் குழுவினரோ, அதற்கான அலுவலகமோ பிரதம செயலாளர் அலுவலகத்தில் இல்லை. என்னிடம் ஆதாரம் இல்லை இந்நிலையில் என அவதூறான செய்திகளையும் காழ்ப்புணர்ச்சியின் அடிப்படையில் இவ்வாறு செயற்படுகின்றார் என்றும் சிலர் தகவல் பரப்பி வருகின்றனர்.

எனினும் நான் அமைச்சுக்கள் தொடர்பில், 10 குற்றச்சாட்டுக்களுக்கான எழுத்து மூல ஆதாரங்களும், அதற்கு மேலாக இரண்டு காணொலிகளையும் வைத்திருக்கின்றேன்.ஏற்கெனவே, 8 மாதங்கள் கடத்தப்பட்டு விட்டன. விசாரணையை கடந்த மாதம் 3-ம் திகதி ஆரம்பிப்பதாக கூறி பின்னர் ஒரு மாதமும் கடத்தப்பட்டு விட்டன. இதை வைத்துப் பார்க்கும் போதுஅமைச்சர்கள் மீதான விசாரணை வடமாகாண சபையினால முன்னெடுக்கப்படவில்லை என்பது உறுதி யாகின்றது என உறுப்பினர் லிங்கநாதன், ஊடகவியலாளர்களுக்கு தெரிவித்தார். (செ-4)

# பாதுகாப்பை உறுதிப்படுத்த அனுமதி

யாழ்.மாவட்டத்தில் பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களில் சிறுவருக்கு பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தி அனுமதி (ஸ்ரிகர்) வழங்கும் நிகழ்வு யாழ். மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் கடந்த திங்கட்கிழமை யாழ் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்றது.

வாகன ஓட்டுநரிடையே சிறுவர் பாதுகாப்பு தொடர்பான எண்ணம் அதிகரிக்கப்பட வேண்டும். பிள்ளைகளை அன்புடனும் அக்கறையுடனும் அவதானத்துடனும் கையாளும் சாரதிகளை உருவாக்க வேண்டும், சிறுவர் துஷ்பிரயோகம் அற்ற சூழலை உருவாக்க வேண்டும். விபத்துக்கள் அற்ற சூழலை உருவாக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் மேற்குறித்த நிகழ்ச்சித் திட்டம் யாழ். மாவட்டச் செயலகத்தால் நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.






உரிமையாக்கப்பட்ட வாகனத்தை வைத்திருக்க வேண்டும். வாகனத்தின் பௌதீக நிலை சட்டத்தின் அடிப்படையில் கடைப்பிடிக்கப்பட்டிருக்க வேண்டும். பயணம் செய்யும் மாணவர்களுக்கு உடல், உள பாதிப்பு ஏற்படாத வகையில் வாகனம் அமைந்திருக்க வேண்டும் என்ற தகுதிகளின் அடிப்படையில் பாடசாலை சேவையில் ஈடுபட்டுள்ள சிற்றூர்தி. ஆட்டோ, மற்றும் ஹயஸ் வாகனங்கள் உட்பட 108 வாகனங்கள் முதல் தடவையாக தெரிவு செய்யப்பட்டு பாடசாலை சேவையில் ஈடுபடும் வாகனங்களில் சிறுவருக்கு பாதுகாப்பான சூழலை உறுதிப்படுத்தி அனுமதி (ஸ்ரிகர்) வழங்கப்பட்டது.

இந்த அனுமதி 6 மாதங்கள் வரை செல்லுபடியாகும் என்பதுடன் அதன் பின்னர் வாகனங்கள் மீள் பரிசோதனை செய்யப்பட்டு அனுமதி புதுப்பிக்கப்படும்.

இனி வரும் காலங்களில் இச் செயற்பாடு தொடர்ச்சியான முறையில் இடம்பெறவுள்ளதுடன் எதிர்காலத்தில் இந்த நடைமுறைகளில் இருந்து தவறும் உரிமையாளர்கள் சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவர்களது சேவை நிறுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்கள வாகன பரிசோதகர்கள், பொலிஸார், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை அதிகாரிகள் இணைந்து பரிசோதனை செய்யும் நடவடிக்கைகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-9)


## கல்யாண மாலை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: சதயம்<br>உயரம்: 6'<br>தகைமை/தொழில்: A/L/அரச தொழில்<br>தொ.இ: B/6387 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 6 1/2 செவ் 2 இல்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:O/L<br>தொ.இ: G/2071 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 64 செவ் 12 இல்<br>உயரம்: 180cm<br>தகைமை/தொழில்:O/Lகனடா PR<br>தொ.இ: B/6390 | பிறப்பு: 1988 இந்து<br>நட்சத்திரம்: ரோகினி<br>கி.பா: 56 செவ் 8 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/2072 |
| பிறப்பு: 1984 இந்து<br>நட்சத்திரம்: அனுசம்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA/வங்கியாளர்<br>தொ.இ: B/6391 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: அத்தம்<br>கி.பா: 51செவ் 2 இல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்:BA<br>லண்டன் NOT PR<br>தொ.இ: G/2087 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மகம்<br>கி.பா: 3 3/4<br>உயரம்: 5'7"<br>தகைமை/தொழில்:A/L/<br>அரசதொழில்<br>தொ.இ: B/6393 | பிறப்பு: 1982 இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா: 14 செவ் 2 இல்<br>உயரம்: 5'4"<br>தகைமை/தொழில்:A/L<br>தொ.இ: G/2097 |

**கல்யாண மாலை**

**(சர்வதேச திருமண சேவை)**

**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**

**பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே**

**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**

**E-mail:- kalyanamail. jaffna@ gmail.com**

**குறிப்பு:- எமது காரியாலயம் காலை 9.00-5.00 மணிவரை திறக்கப்படும்.**

**ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமை கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம்.**

**இனிவரும் நாட்களில் கல்யாணமாலை ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை தினமாகும்.**


## யாழ்.மாநகர சபை
## வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கல்-2017

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வியாபார நிலையங்கள் 2017 ஆம் ஆண்டிற்கான வியாபார அனுமதிப்பத்திரத்தினை 31.03.2017 ஆம் திகதிக்கு முன் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதனால் தற்போது அதற்கான பின் வரும் ஆவணங்களுடன் விண்ணப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

01.பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவம்

02. உரிமையாண்மையை உறுதிப்படுத்த விண்ணப்பதாரியின் பெயரில் ஆதனம் காணப்படல், வாடகைக் கட்டடமாயின் வாடகை ஒப்பந்தம்

03. வியாபார நிலையக் கட்டடத்தின் கட்டட அனுமதியும் குடிபுகு சான்றிதழும்

04. உபயோக மாற்ற அனுமதிப்பத்திரம்

05. சுற்றுச்சூழல் பிரிவின் சிபார்சு அறிக்கை

உரிய காலத்தில் அனுமதிகளைப் பெற்றுக்கொள்வதன் மூலம் தேவையற்ற அசௌகரியங்களையும் வியாபாரம் மற்றும் சேவை முயற்சிகள் தடைப்படுதலையும் தவிர்த்துக்கொள்ள முடியும்.

தேநீர்ச்சாலைகள், உணவகங்கள், குளிர்பான நிலையங்கள் போன்ற உணவுற்பத்தி நிலையங்கள் பொதுமக்களுக்கு சிறந்த சுகாதாரமான முறையில் தங்கள் உற்பத்திகளை வழங்க வேண்டும். இது தொடர்பில் மாநகர பொதுச் சுகாதார உத்தியோகத்தர்களால் குறைபாடுகள் நிவர்த்தி செய்யப்பட வேண்டுமென அறிவித்தல் வழங்கப்பட்ட வியாபார நிலையங்கள் உடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு அவை குறித்து அறியத்தந்து தங்களது அனுமதிகளை பெற்றுக்கொள்ள வேண்டும். தவறும்பட்சத்தில் அவ்வாறானவர்களுக்கெதிராக மாநகர சபையின் நியமத்துணை விதிகளின் பிரகாரம் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இத்தால் அறியத் தருகின்றேன்.

**ஆணையாளர்,**

(சி-6307) **யாழ்ப்பாணம் மாநகர சபை.**

## இராசி பலன்

04.11.2016

(ஐப்பசி 19, வெள்ளிக்கிழமை)

சூரிய உதயம் காலை 5.59 மணிக்கு

சதுர்த்தி காலை 6.44 மணிவரை

மூலம் முன்னிரவு 9.30 மணிவரை

சுபநேரம் 6.04-7.34 மணிவரை

இராகுகாலம் 10.34-12.04 மணிவரை

ஐப்பசி வெள்ளி, அமிர்தசித்தம்

வளவன்

**கிரகநிலை**

| | | | |
|---|---|---|---|
| | | | |
| கேது | **சந்திராஷ்டமம்**<br>ரோகினி, மிருகசீரிடம் | | |
| செவ் | | | ராகு |
| சந் | சனி<br>புத<br>சுக் | சூரி | குரு |

**மேடம்:** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், வீட்டை அழகாக வைத்திருப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், சேமிப்பை அதிகரிக்க முற்படுவீர்கள்.

**இடபம்:** வழிபாட்டால் ஆனந்தம் காண வேண்டிய நாள், உடல்நலனில் கவனம் தேவை, குடும்ப பெரியவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பது நல்லது.

**மிதுனம்:** நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், குடும்பத்தில் அந்நியோன்னியம் அதிகரிக்கும், ஆசைப்பட்ட பொருளொன்றை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்:** பொதுநல ஈடுபாட்டால் புகழ்பெறுவீர்கள், பழைய கடன்களை அடைக்க புதிய வழியைக் கையாள்வீர்கள், தெய்வீக சிந்தனை மேலோங்கும் நாள்.

**சிம்மம்:** எண்ணங்கள் எளிதில் ஈடேறும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், பிள்ளைகள் வழியில் பெருமைக்குரிய சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** வழிபாடுகளில் நம்பிக்கை கூடும், இல்லத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், வாகன சுகமுண்டு, முயற்சிகளில் நம்பிக்கை கூடும்.

**துலாம்:** இளைய சகோதர வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், பாராட்டும் புகழும் கூடும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்:** சுபகாரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்கள் வீடு தேடி வரலாம், பணத் தேவைகள் பூர்த்தியாகும்.

**தனுசு:** வெளியூர்ப் பயணங்கள் ஏற்படலாம், விருப்பங்கள் நிறைவேற விநாயகரை வழிபட வேண்டிய நாள், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மகரம்:** மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சுப விரயங்கள் கூடும், சுபகாரியங்களில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு.

**கும்பம்:** சமயோசித புத்தியால் பலரையும் கவர்வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், தொலைபேசி வழியில் சுபசெய்திகள் வந்து சேரலாம்.

**மீனம்:** நம்பிக்கைகள் நடைபெறும் நாள், தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், போசன சுகமுண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

# வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் mlearning platform ஊடாகக் கற்றல்

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் வடக்கின் கல்வி முறைமை மீளாய்வு பரிந்துரைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் செயற்றிட்டங்களில் ஒன்றான mlearning platform(mlearning.mobitel.lk) இன் ஊடாக க.பொ.த. உயர்தர கணித, விஞ்ஞான பிரிவில் 2017 பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான பாடங்கள் மாலை 6 தொடக்கம் 8 வரை வார நாட்களில் (திங்கள்-வெள்ளி) கற்பிக்கப்படுகின்றன. மாணவர்கள் தங்கள் வீட்டில் இருந்து தங்களதுகணனி,மடிக்கணனி, tab/ipad,smartphone ஆகியவற்றின் ஊடாகக் கற்க முடியும்.

2017இல் பரீட்சையில் தோற்றவுள்ள 1000 மாணவர்களுக்கான பயனர் பெயர், (user name) கடவுச்சொல் (password) பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.user name மற்றும் password கிடைக்காத மாணவர்கள் தங்கள் பாடசாலை அதிபர் ஊடாக விண்ணப்பத்தினை பணிப்பாளர்,கற்றல் உபகரண அபிவிருத்திப்பிரிவு, கல்வி அமைச்சு, வடமாகாணம்,நல்லூர்,யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

இது தொடர்பான மேலதிக விபரங்களைக் கற்றல் உபகரண அபிவிருத்திப் பிரிவின் தொலைபேசி இலக்கம்- 021 464 6445 மற்றும் மின் அஞ்சல் முகவரி- **Lmdmunit@gmail.com** ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

மேலும் இதற்கான வழிகாட்டல் கைநூலினை கல்வி அமைச்சின் இணையத்தளமான **www.edumin.np.gov.lk** இல் பெற்றுக்கொள்ளலாம் என வடமாகாணக் கல்வி அமைச்சின்செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.(இ)




# 200வது ஆண்டு நிறைவை முன்னிட்டு விசேட புலமைப்பரிசில் திட்டம் - 2016

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு கல்விக் காப்பு அறக்கட்டளை எனும் விசேட புலமைப்பரிசில் திட்டம்-2016 ஒன்றை வழங்கவுள்ளது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் கல்விக்காப்பு அறக்கட்டளையானது எமது பிரதேசத்தில் இருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்களுக்கு அவர்களின் கல்வி மற்றும் ஆளுமை வளர்ச்சிக்காக புலமைப்பரிசில் திட்டமொன்றை வழங்கவுள்ளது.

இத்திட்டத்திற்கு 2016 ஆம் ஆண்டு தரம்- 05 புலமைப் பரிசில் பரீட்சையில் 140 புள்ளிகள் அல்லது அதற்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் (ஆண்கள்) விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பிக்கும் மாணவர்கள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் பெறப்பட்ட அல்லது தரம் 06 அனுமதிக்கான பொது விண்ணப்பப் படிவும் ஒன்றினை பூரணமாக நிரப்பி விண்ணப்பப்படிவம் மற்றும் கடித உறை என்பவற்றின் இடதுமேல் மூலையில் ''புலமைப்பரிசில் திட்டம்- 2016)'' எனக் குறிப்பிட்டு, அதிபர், யாழ். மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால்மூலமாகவோ அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்ளப்படும் என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (இ-3)

# தேசிய வாசிப்பு மாதமும் நூலக தினமும் 7ம் திகதி

(யாழ்ப்பாணம்)

யாழ்.கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாலயத்தின் தேசிய வாசிப்பு மாதமும் நூலக தினமும் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒருமணிக்கு பாடசாலையின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

பாடசாலை அதிபர் சி.சிவராஜன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய திட்டமிடல் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு.தேவமனோகரன், சிறப்பு விருந்தினராக யாழ்.இராமநாதன் கல்லூரி அதிபர் திருமதி க.கிருஷ்ணபிள்ளை,கௌரவ விருந்தினராக ஓய்வுபெற்ற சிரேஷ்ட பாராளுமன்ற சமகால உரை பெயர்ப்பாளர் க.தாமோதரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-3)

# மூத்த பிரஜைகளுக்கான தேசிய கொள்கை தயாரித்து வலுவூட்டல்,நலநோம்புகை அமைச்சுக்கு அனுப்பி வைப்பு

## யாழ்.மாவட்ட செயலகம் நடவடிக்கை

.யாழ்.மாவட்டத்திலுள்ள முதியவர்களின் கருத்துக்களை உள்வாங்கி "மூத்த பிரஜைகளுக்கான தேசிய கொள்கை" தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட்டு சமூக வலுவூட்டல் மற்றும் நலநோம்புகை அமைச்சுக்கு யாழ். மாவட்ட செயலகத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

மூத்த பிரஜைகளுக்கான தேசிய கொள்கையினை தயாரிப்பதற்கான முன்னாயத்த கலந்துரையாடல் கடந்த ஒக்டோபர் மாதம் 18 ஆம் திகதி யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அதில் யாழ். மாவட்டத்தில் உள்ள முதியவர்களின் கருத்துக்களை உள்வாங்கி அறிக்கை ஒன்றைத் தயாரிப்பதற்காக 10 பேர் கொண்ட குழு அமைக்கப்பட்டது. அக்குழு தேசிய கொள்கை செயற்பாடுகளை உள்ளடக்கி அறிக்கை ஒன்றை தயாரித்து அனுப்பியுள்ளது.

குறித்த அறிக்கையில் தேசிய கொள்கைக்கான செயற்பாடுகளில் முதியோருக்கு தேவையான சுகாதார சேவைகள், போக்குவரத்து சேவைகள், முதியோர் சங்கங்களுக்கான சேவைகள், கலாசாரம், பொழுதுபோக்கு சேவைகள், பொருளாதார பாதுகாப்பு சேவைகள், 2 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு சேவைகள், சட்ட பாதுகாப்பு சேவைகள் போன்ற 5 பிரிவுகளை உள்ளடக்கி தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் சுகாதார சேவைகள் தொடர்பாக வைத்தியசாலையில் கர்ப்பவதிகள், குழந்தைகளுக்கென தனியான கிளினிக்குகள் இருப்பது போல் மூத்த பிரஜைகளுக்கும் தனியான கருமபீடங்கள் அமைத்தல் வேண்டும்.

வைத்தியசாலை செல்வதற்காக குறிப்பிட்ட நாளில் மூத்த பிரஜைகளுக்கென தனியான பேருந்து சேவையை நடத்துதல், இயலாமை காரணமாக மூத்த பிரஜைகள் வைத்தியசாலையை நோக்கி செல்வதைத் தவிர்த்து வைத்தியர்கள் மூத்த பிரஜைகளின் வீட்டை நோக்கி வருதல் வேண்டும்.

போக்குவரத்து சேவைகள் தொடர்பாக இயலாமை காரணமாக குறிக்கப்பட்ட நேரத்தில் மூத்த பிரஜைகளுக்கென தனியான பேருந்து சேவையை நடத்துதல், 60 வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு போக்குவரத்து செலவில் 50 வீதம் குறைக்கப்படல் வேண்டும். முதியோர் செயற்பாடுகளுக்காக ஒவ்வொரு மாவட்ட செயலகத்திற்கும் தனியான பேருந்து வழங்குதல் வேண்டும்.

முதியோர் சங்கங்களுக்கான சேவைகள் தொடர்பாக எமது நாட்டின் முதியோர் தொடர்பான சேவைகள் வெற்றியடைய வேண்டுமாயின் கிராம மட்ட முதியோர் சங்கங்களை வலுப்படுத்த வேண்டும்.

அதற்கு பின்வரும் செயற்பாட்டுக்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். அதாவது முதியோர்களுக்கான 2 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு, சுயதொழில் கொடுப்பனவு, கண்வில்லை பெறல்.... போன்ற விண்ணப்பப்படிவங்களில் முதியோர் சங்கத் தலைவர், செயலாளரின் கையொப்பங்களை முக்கியப்படுத்தல்,

மேற்படி கொடுப்பனவை ஒரு மூத்த பிரஜை பெற வேண்டுமாயின் அவர் கிராம மட்ட முதியோர் சங்கத்தில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும் என்பது கட்டாயமாக்கப்படல் வேண்டும்,

முதியோர் சங்க ஒன்றிணைப்புக்காக ஒவ்வொரு மாவட்டத்துக்குமென முதியோர் செயலகம் உருவாக்கப்படல் வேண்டும்,

முதியேர் சங்க செயற்பாட்டுக்கான தளபாட வசதிகளை ஏற்படுத்தல், முதியோர் தொடர்பான சேவைகளை முன்னெடுக்க ஒவ்வொரு பிரதேச செயலகத்துக்கும் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் நியமனம் செய்யப்படல் வேண்டும்.

கலாசாரம் பொழுது போக்கு சேவைகள் தொடர்பாக வருடத்துக்கு ஒருமுறை மூத்த பிரஜைகளுக்கான ஆன்மீக, தனிமைபோக்கும் சுற்றுலாப் பயணத்துக்கு ஒழுங்கு செய்தல் வேண்டும். இதற்கு ஒவ்வொரு பிரதேச செயலக ரீதியில் நிதி ஒதுக்குதல் வேண்டும்.

முதியோர் தினத்துக்கான போட்டி நிகழ்ச்சிகள் (வினா விடை போட்டி, பாட்டு, சித்திரம், நடனம், நாடகம்...), விளையாட்டு போட்டிகள் போன்றவற்றை அதிகம் உருவாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

பொருளாதார பாதுகாப்பு சேவைகள் தொடர்பாக நாட்டில் அரச உத்தியோகத்தர்களுக்கு சம்பளம் அதிகரிக்கும் போது ஓய்வூதியர்களுக்கும் அதே அளவில் அதிகரிக்க வேண்டும்.

60 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான பொருத்தமான காப்புறுதித் திட்டம் ஒன்றை உருவாக்குதல், பாடசாலைகளில், தனியார் கல்வி நிறுவனங்களில் ஆங்கில மற்றும் முக்கிய பாடங்களை கற்பிக்க அறிவுரை வழங்குவதற்கு ஓய்வுபெற்ற மூத்த பிரஜைகளின் சேவைகளை பெற்றுக் கொள்ளல்.

மூத்த பிரஜைகளுக்காக அரசாங்கம் வழங்கும் அனைத்துத் திட்டங்களும் எல்லா மக்களுக்கும் சென்றடைவதில்லை என்பதுடன் அது தொடர்பான செய்திகளும் மக்களுக்கு சென்றடைவதில்லை. எனவே இது தொடர்பில் வானொலி, தொலைக்காட்சி போன்ற தொலைத்தொடர்பு சாதனங்கள் ஊடாக அனைத்து மூத்த பிரஜைகளுக்கும் முதியோர்களுக்கான அரசு வழங்கும் சேவைகள் தொடர்பான செய்திகளை சென்றடையச் செய்தல் வேண்டும்.

முதியோர்களுக்கான சுய தொழில் திட்டத்துக்கான 60 தொடக்கம் 70 வரையான முதியோர்களை தெரிவு செய்தல் வேண்டும் என்பதுடன் அனைத்து மாவட்டங்களிலும் இக்கொடுப்பனவை நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

முதியோர் சுயதொழில் திட்டத்தில் முதியோர் சங்கங்கள் ஊடாக அதாவது குழுவாக சுயதொழில் செய்வதற்கு கொடுப்பனவை வழங்குதல்.

நடைமுறையில் உள்ள முதியோர்களுக்கான விசேட அடையாள அட்டை மூலம் எவ்விதமான முன்னுரிமையும் யாழ். மாவட்டத்தில் வழங்கப்படுவதில்லை. இவ் அடையாள அட்டைக்கு எல்லா இடத்திலும் முன்னுரிமை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்படும் முதியோர், பிள்ளைகள் அற்ற முதியோர்களின் வாழ்வாதாரத்துக்கு உதவி செய்தல்,

மாற்றாற்றல் உள்ள முதியோர், சிறுநீரக புற்றுநோயால் பாதிப்புற்ற முதியோர்களுக்கு மாதாந்த கொடுப்பனவு திட்டத்தினை நடைமுறைப்படுத்தல்,

இரண்டாயிரம் ரூபா கொடுப்பனவு சேவை தொடர்பாக 60 வயதுக்கு மேற்பட்ட, வறுமைக்குட்பட்ட அனைத்து மூத்த பிரஜைகளுக்கும் 2 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு மாதாந்தம் வழங்கப்பட வேண்டும்.

மாவட்டத்தில் தற்போது 2 ஆயிரம் கொடுப்பனவில் கழித்து அனுப்பப்படும் 100 ரூபாய் நிதியானது மீண்டும் அதே மாவட்டத்தின் அபிவிருத்தி நலத்திட்டத்துக்கே வழங்கப்படவேண்டும்.

தற்போது 2 ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு பெற்றுக் கொள்ளும் மூத்த பிரஜைகள் கௌரவத்துடனும் மன ஆறுதலையும் பெறுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். எனவே இக் கொடுப்பனவு கணவன்-மனைவி இருவருக்குமே வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சட்டப்பாதுகாப்பு சேவைகள் தொடர்பாக மூத்த பிரஜைகளுக்கான சட்ட உதவிகளை பெற்றுக்கொள்ள முதியோருக்கான சிறப்புப் பிரிவு நிறுவப்பட்டு இலவச சட்ட உதவி வழங்கப்பட வேண்டும் என யாழ். மாவட்டத்தில் உள்ள மூத்த பிரஜைகளின் பல்வேறு கோரிக்கைகள் உள்வாங்கப்பட்டு இந்த அறிக்கை அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. (இ-9)




யாழ்ப்பாணம் உயரப்புலம் மெதடிஸ் மிசன் பாடசாலையில் சுகாதார வாரத்தினை ஒட்டி பாடசாலையின் வெளியக சுற்றுப்புறங்கள் மாணவர்களால் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டது. இந்த நிகழ்வினை பாடசாலையின் சுகாதாரக் கழகம் முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

# வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை, கரவெட்டி

## சந்தைகள், இறைச்சிக்கடைகளுக்கான 01.01.2017-31.12.2017 வரையுள்ள காலப்பகுதிக்கான குத்தகை

## கேள்வி அறிவித்தல்-2017

01. கேள்விப் பத்திரம் வழங்கும் இறுதி திகதி :-17/11/2016 பி.ப. 3.00 மணிவரை
02. கேள்விப் பத்திரம் ஏற்கும் இறுதித் திகதி :-18/11/2016 மு.ப. 10.00 மணிவரை
03. கேள்விகள் திறக்கப்படும் திகதி :-18/11/2016 மு.ப. 10.30 மணி
04. கேள்வித் தொகை, கேள்விப் பத்திரக் கட்டணம், மாத வாடகை மற்றும் காலத்திற்கு காலம் அரசாங்கத்தினால் விதிக்கப்படும் வரி ஆகியவையும் சேர்த்து அறவிடப்படும்.
05. கேள்விப் படிவங்கள் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு, மூலப்பிரதி அரக்கு முத்திரையிடப்பட்ட கடித உறையில் இடது பக்க மேல்மூலையில் கேள்வியின் தன்மை குறிப்பிட்டு, உரிய தினத்திற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால் மூலமாகவோ, அல்லது தலைமை அலுவலகத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்தில் சேர்ப்பிப்பதன் மூலமாகவோ கிடைக்கச் செய்தல் வேண்டும். அதன் இரண்டாவது பிரதி பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.
06. கேள்விப் பத்திரங்கள் பெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையை கொண்டு வருவதுடன், அதன் நிழற்படப் பிரதியையும், கிராம அலுவலரால் வழங்கப்பட்ட வதிவிடச் சான்றிதழையும் சமர்ப்பிக்க வேண்டும்.
07. ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த கேள்விகள் நிராகரிக்கப்படுவதுடன், கேள்வி வைப்புப் பணம் மீளளிக்கப்படவும் மாட்டாது.
08. தவறுநராக கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப் பத்திரம் வழங்கப்பட மாட்டாது. படிவம் வழங்கப்பட்டிருப்பின், அது அறியவருமிடத்து அவரது கேள்விப்பத்திரம் நிராகரிக்கப்படும்.
09. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களுக்கு அமையாத கேள்விக் கோரிக்கை களை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ கேள்விச் சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.
10. கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
11. சந்தையிலிருந்து 01 கி.மீற்றர் சுற்றாடலில் மீன், மரக்கறி விற்பது தடை செய்யப்பட்டுள்ளது.
12. மரக்கறிச் சந்தையினை குத்தகைக்கு பெற்றுக்கொள்பவர் கீழ்வரும் நிபந்தனை களை கடைப்பிடிக்க வேண்டும்.,

   1.குத்தகைதாரரால் பாவிக்கப்படும் நியமத் தராசு தெளிவாக பார்க்கக் கூடியதாக வைக்கப்படல் வேண்டும்.
   தராசுகள் நிறுவை திணைக்களத்தினால் முத்திரையிடப்பட்டிருத்தல் வேண்டும்.
   2.விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கான இடமொன்றை விவசாயிகளுக்கு குத்தகைதாரரால் ஒதுக்கிக் கொடுக்கப்படல் வேண்டும், ஒதுக்கிக்கொடுக்கப்பட்ட இடத்திற்கு விவசாயிகளிடம் இருந்து சட்ட ஏற்பாடுகளுக்கமைவாக இடவாடகை அறவிடுதல்.
   3.வியாபாரிகளிற்கான இடவரி தொடர்பில் மாவட்ட ரீதியில் ஒரு சதுர அடிக்கு ரூபா 10.00 என்ற நடைமுறைக்கமைய பற்றுச்சீட்டுக்கள் வழங்கப்படுவதை உறுதி செய்தல் .
   4.குத்தகையாளரினால் வரி அறவீட்டின் போது, பற்றுச்சீட்டில் பொதுச் சந்தையின் பெயர்,திகதி,பொருளின் வகை, பொருளின் நிறை, மொத்தத் தொகை, அறவிடப்படும் வரித்தொகை என்பன குறிக்கப்படல் வேண்டும்.
   5.உற்பத்திப் பொருட்கள் நிறுவைப்பகுதியில் வைத்தே தரத்திற்கேற்பவும், விலை கூறி விற்றல் மூலமும் விலை தீர்மானிக்கப்படல் வேண்டும்.
   6.விவசாய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு சந்தைக்கு வரும் உற்பத்தியாளர்களிடம் இருந்து தரகுப் பணம் பெறுவதை நிறுத்துதல்.
   7.நிலக்கீழ் விவசாய உற்பத்தி பொருட்களில் சில தவிர்ந்த ஏனைய விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு கழிவு விதிக்கக்கூடாது.
   8.வாழைப்பழக்குலைக்கும்,வாழைக் காய்களுக்கும் மட்டும் தண்டுக்கு கழிவுகளை விதிக்கலாம்.
   9.விவசாய உற்பத்திப் பொருட்களுக்கு 4% வரி அறவிடப்படுதல் வேண்டும்.
   10.அனுமதி பெற்ற வியாபாரி வேறு சந்தையில் இருந்து கொண்டு வரப்படும் பொருட்களுக்கு அதற்குரிய பற்றுச்சீட்டினை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் குத்தகையாளரினால் வரி அறவிடக் கூடாது, நேரடியாக உற்பத்தியாளரிடமிருந்து கொள்வனவு செய்து கொண்டு வந்து விற்கும் பொருட்களுக்கு வரி அறவிடலாம் .
   11.சந்தைக்கு வருகை தருகின்ற பாவனையாளர்களினதும், பொருட்களை ஏற்றி இறக்குபவர்களதும் துவிச்சக்கரவண்டிகளையும் மோட்டார் சைக்கிளையும் மோட்டார் வாகனங்களையும் நிறுத்தி வைப்பதற்கு போதுமான அளவில் இடவசதி ஒதுக்கப்பட்டிருப்பதுடன் பாதுகாப்பும் வழங்கப்படவேண்டும். இதற்கு மட்டும் பற்றுச்சீட்டை வழங்கி கட்டணம் அறவிடமுடியும்
   12.இடவசதி ஒதுக்கப்படாது பாவனையாளர்களினாலும் பொருட்களை ஏற்றி இறக்குபவர்களினாலும் நிறுத்தப்படும் சைக்கிள், மோட்டார் சைக்கிள், வாகனங்களுக்கு கட்டண அறவீடுகள் எதுவும் மேற்கொள்ளக் கூடாது.

13. இறைச்சிக் கடைக்கு விண்ணப்பப் படிவங்கள் பெறுபவர்கள் தங்களது முன் அனுபவத்தை நிரூபிக்கும் கடிதமும், கடை நடத்திய பிரதேச சபையிடமிருந்து எதுவித நிலுவையும் இல்லை என உறுதிப்படுத்திய கடிதமும் சமர்ப்பித்தல் வேண்டும்.
14. இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு எடுப்பவராலேயே நடத்தப்படவேண்டும். குத்தகை க்கு எடுத்தவர் இன்றி அவர் சார்பாக வேறு ஒருவரால் நடத்தப்படின் குத்தகை ஒப்பந்தம் இரத்துச் செய்யப்படும்.
15. ஏம்மால் அமைக்கப்பட்டுள்ள கொல்களத்திலேயே இறைச்சிக்கான மாடுகள் வெட்டப்பட வேண்டும்.
16. இறைச்சிக்கான மாடுகள் வெட்டப்பட முன்னர் எம்மால் குறித்துரைக்கப்படும் சட்டதிட்டங்களிற்கமைவாக நடந்து கொள்ள வேண்டும்.
17. மேலதிக விபரங்களை அந்தந்த உப அலுவலகங்களிலும், தலைமை அலுவலகத்திலும் அறிந்து கொள்ளலாம்.

## கேள்வி அறிவித்தல் அட்டவணை

| தொ.இல | குத்தகை விபரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வரிகள் நீங்கலாக) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்பு பணம் | மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரக் கட்டணம்(வரிகள் நீங்கலாக) | மாத வாடகை (வரிகள் நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| | நெல்லியடி உப அலுவலகம் | | | | |
| 01 | நெல்லியடி மரக்கறிச் சந்தை-துவிச்சக்கரவண்டி பா.நி.உட்பட (அங்காடி நீங்கலாக) | 7034060.00 | 70350.00 | 1000.00 | - |
| 02 | கோயிற் சந்தை (துவிச்சக்கரவண்டி பா.நி.உட்பட) | 89300.00 | 1000.00 | 500.00 | - |
| 03 | கொட்டடிச்சந்தை | 5650.00 | 500.00 | 500.00 | 100.00 |
| 04 | நெல்லியடி மாட்டிறைச்சிக்கடை | 865700.00 | 8700.00 | 500.00 | 100.00 |
| 05 | கோயிற்சந்தை மாட்டிறைச்சிக்கடை | 415700.00 | 4200.00 | 500.00 | 100.00 |
| 06 | நெல்லியடி ஆட்டிறைச்சிக்கடை | 66800.00 | 700.00 | 500.00 | 100.00 |
| 07 | கோயிற் சந்தை கோழியிறைச்சிக்கடை | 275550.00 | 2760.00 | 500.00 | 100.00 |
| 08 | கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | 59500.00 | 600.00 | 500.00 | 100.00 |
| 09 | நெல்லியடிச் சந்தை கோழிக்கடை | 504200.00 | 5050.00 | 500.00 | 100.00 |
| 10 | நெல்லியடி மீன் சந்தை | 737550.00 | 7400.00 | 500.00 | - |
| | உடுப்பிட்டி உப அலுவலகம் | | | | |
| 11 | உடுப்பிட்டி சந்தை | 936250.00 | 9400.00 | 500.00 | - |
| 12 | அந்திரான் சந்தை | 79350.00 | 800.00 | 500.00 | - |
| 13 | நவிண்டில் சந்தை | 9500.00 | 500.00 | 500.00 | - |
| 14 | மண்டான் சந்தை | 28000.00 | 500.00 | 500.00 | - |
| 15 | உடுப்பிட்டி சந்தை மாட்டிறைச்சிக்கடை | 579700.00 | 5800.00 | 500.00 | 100.00 |
| 16 | உடுப்பிட்டி சந்தை கோழி இறைச்சிக்கடை | 270600.00 | 2800.00 | 500.00 | 100.00 |
| 17 | உடுப்பிட்டி சந்தை துவிச்சக்கரவண்டி பாதுகாப்பு நிலையம் | 118000.00 | 1200.00 | 500.00 | - 100.00 |
| 18 | அந்திரான் சந்தை மாட்டிறைச்சிக்கடை | 769200.00 | 7700.00 | 500.00 | 100.00 |
| 19 | சாண்டா சந்தை மாட்டிறைச்சிக்கடை | 397100.00 | 4000.00 | 500.00 | 100.00 |
| 20 | சாண்டா சந்தை கோழிக்கடை | 72600.00 | 750.00 | 500.00 | - |
| | கட்டைவேனி உப அலுவலகம் | | | | |
| 21 | துன்னாலை வடக்கு ஆட்டிறைச்சிக் கடை | 44400.00 | 500.00 | 500.00 | 100.00 |
| 22 | துன்னாலை வடக்குச் சந்தை | 36450.00 | 500.00 | 500.00 | - |

அ.வினோராஜ்
செயலாளர் வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
கரவெட்டி. 04/11/2016

(சி-6307)

# கழுத்தில் கத்தி வைத்து மிரட்டி 10 பவுண் நகைகள் கொள்ளை




(குருமன்காடு)

வீட்டினுள் உள் நுழைந்த இருவர் அங்கிருந்தவர்களின் கழுத்தில் கத்தி வைத்து மிரட்டி 10 பவுண் நகைகளை கொள்ளையிட்டுச் சென்ற சம்பவம் வவுனியாவில் இடம்பெற்றுள்ளது.

இச் சம்பவம் வவுனியா பழைய வாடி வீதி, புளியங்குளம் பகுதியில் நேற்று அதிகாலை நடைபெற்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

திடீரென வீட்டிற்குள் நுழைந்த இருவர் வீட்டிலிருந்தவர்களின் கழுத்தில் கத்தியை வைத்து மிரட்டி, வீட்டிலிருந்த 10 பவுண் நகைகளை கொள்ளையிட்டுச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புளியங்குளம் பொலிஸார் மோப்ப நாயின் உதவியுடன் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். (2-250 )




# நுண்நிதி கடனை மீள செலுத்த முடியாமையால் சேயுடன் தாய் கிணற்றில் குதித்து தற்கொலை

(குருமன்காடு)

நுண்நிதி நிறுவனம் ஒன்றினால் வழங்கப்பட்ட சிறு தொகைகடனுக்குரியதவணைக் கட்டுப்பணத்தை செலுத்த முடியாமையால் இளம் சேயுடன் தாய்கிணறொன்றினுள்வீழ்ந்து தற்கொலை செய்த நிலையில் நேற்றுக்காலை சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் வவுனியா, ஓமந்தை, புதிய வேலர் சின்னக்குளம் பகுதியில் இடம் பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மீள்குடியேற்ற கிராமமான புதிய வேலர் சின்னக்குளம் பகுதியில் வசிக்கும் குடும்பங்கள் சிலவற்றுக்கு குழுமுறையில் நுண்நிதி நிறுவனங்களால் கடன் வழங்கப்பட்டிருந்தன.

குறித்த கடனை உரிய தவணைக்குள் உடனடியாக செலுத்த முடியாத நிலையில்



அப்பகுதியைச் சேர்ந்த குடும்பம் ஒன்றின் கணவன், மனைவி ஆகியோருக்கு இடையில்ஏற்பட்ட குடும்பத்தகராறையடுத்து வீட்டை விட்டு தனது சேயுடன் நேற்றுமுன்தினம் சென்றிருந்த இளம்தாய்நேற்று காலையில் கைவிடப்பட்ட காணி ஒன்றில் உள்ள கிணற்றில் இருந்து இருவரும் சடலமாக மீட்கப்பட்டனர்.

குறித்த தாயும் சேயும் காணாமற்போயிருந்த நிலையில் தேடிய கணவன் மற்றும் உறவினர்கள் இருவரும் கிணறொன்றில் இருந்து சடலமாக இருப்பதை கண்டு ஓமந்தை பொலிஸாருக்கு தகவல் வழங்கினர்.

அவ்விடத்திற்கு விரைந்த பொலிஸார் குறித்த சடலங்களை கிணற்றில் இருந்து மீட்டனர்.

இது தொடர்பான விசாரணைகளை ஓமந்தைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டவர்கள் அப்பகுதியைச் சேர்ந்த நாகநாதன் சுகந்தினி (வயது - 23), நாகநாதன் ஜிந்துஜன் (வயது-2) என்பவர்களாவர்.

சம்பவ இடத்திற்குச் சென்ற வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், மாகாண சபை உறுப்பினர் செ.மயூரன் ஆகியோர் இது தொடர்பில் கேட்டறிந்ததுடன் அப்பகுதி மக்களுடனும் கலந்துரையாடியிருந்தனர்.

இதேவேளை கணவன் கடந்த சில நாட்களாக நோய் காரணமாக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (2-250)

# மரக்கடத்தல் குற்றச்சாட்டின் பேரில் இரு பொலிஸார் பணி இடைநிறுத்தம்

(பனிக்கன்குளம்)

கிளிநொச்சியில் சட்டவிரோத மரம் கடத்தலுக்கு உடந்தையாக இருந்த குற்றச்சாட்டில் பொலிஸ் உத்தியோகத்தர்கள் இருவர் கிளிநொச்சி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் வெலிகன்னவின் உத்தரவுக்கமைய பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி - அக்கராயன் காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் புதன்கிழமை அதிகாலை ஒரு மணியளவில், சட்டவிரோதமாக வெட்டப்பட்ட பதினாறு முதிரை மரக்குற்றிகளை கிளிநொச்சி நகர்ப்பகுதிக்கு கொண்டு செல்வதற்கு உடந்தையாக செயற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்களே இவ்வாறு பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று உதவிபொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதேவேளை சட்டவிரோதமாக மரங்களை வெட்டி கடத்தியவர்கள் கைது செய்யப்பட்டு கிளிநொச்சி நீதவான் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முல்லைத்தீவு - கிளிநொச்சி மாவட்டங்களில் சட்டவிரோத செயற்பாடுகளுக்கு பொலிஸார் உடந்தையாக செயற்படுகின்றார்கள் என்று ஏற்கனவே பொது மக்கள் சுட்டிக்காட்டியுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது.

கிளிநொச்சி பிராந்திய பிரதி பொலிஸ்மா அதிபர் வெலிகன்னவின் வழி நடத்தலில் உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் றொசான் ராஜபக்ஷவினால் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2-281-312)

# பதிவுகளை மேற்கொள்க

(பரந்தன்)

தேசிய கல்வி நிறுவகத்தின் கிளிநொச்சி பிராந்திய நிலையத்தில் நடைபெறும் 2013/2015 கல்வியாண்டு கல்விமாணிக் கற்கை நெறியின் 3 வருடத்திற்கான பதிவுகள் நடைபெறுகின்றன.

விண்ணப்பப்படிவத்தை கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலயத்தின் அமைந்துள்ள பிராந்திய நிலைய அலுவலகத்தில் பெற்றுப் பூரணப்படுத்தி உரிய பதிவுக் கட்டணத்தை வங்கியில் வைப்புச் செய்தமைக்கான பற்றுச் சீட்டினையும் இணைத்துச் சமர்ப்பித்து எதிர்வரும் 5 ஆம் திகதிக்கு முன் பதிவு செய்து கொள்ளுமாறு இணைப்பாளர் மா. கணபதிப்பிள்ளை அறிவித்துள்ளார். (2-312)

# பாடசாலை வளாகத்தில் சிரமதானப் பணி



(மல்லாவி)

நெடுங்கேணி ஒலுமடு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை வளாகம் அண்மையில் துப்புரவு செய்யப்பட்டுள்ளது.

ஒலுமடு கிராம மக்கள், நெடுங்கேணி பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஆகியோர் இணைந்து பாடசாலை வளாகத்திலுள்ள கழிவுப் பொருட்கள், நீர் நிற்கும் நிலைகள், பற்றைகள், புற்கள் போன்றவற்றை துப்புரவு செய்து பாடசாலை மாணவர்களை டெங்கு நுளம்பின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கும் நோக்கோடு இச்செயற்றிட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (2-15)

# வாள்வெட்டு, குழு மோதல்களில் ஈடுபட்ட 7 பேர் விளக்கமறியலில்

(குருமன்காடு)

வவுனியாவில் தீபாவளி தினத்தன்று இடம்பெற்ற வாள்வெட்டு, மோதல்கள் தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 7 பேரை எதிர்வரும் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை விளக்கமறியலில் வைக்க வவுனியா நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கடந்த தீபாவளி தினத்தில் வவுனியாவின் பல இடங்களிலும் வாள்வெட்டு, குழு மோதல்கள் இடம் பெற்று பலர் காயமடைந் திருந்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட வவுனியா பொலிஸார் மதீனா நகர் பகுதியில் தமிழ், முஸ்லிம் இளைஞர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதல் தொடர்பில் ஐந்து பேரையும், கற்குழி பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டு தொடர்பில் இரண்டு பேரையும் கைது செய்து வவுனியா நீதிமன்றில் முற்படுத் தியிருந்தனர்.

இதனை விசாரித்த வவுனியா நீதிமன்றம் குறித்த ஏழுபேரையும் எதிர் வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளது. இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (2-250)

# ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களுக்கு பாரவூர்திகள் பெற்றுக்கொடுக்கத்திட்டம்

## தீர்வை விலக்களிக்கப்பட்டு இரண்டு வருடங்களுக்கு தொடர்ச்சியாக நடவடிக்கை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் பணிப்புரைக்கு அமைய கைத்தொழில் மற்றும் வணிக விவகார அமைச்சினால் வடக்கு மாகாணம் உட்பட நாடு தழுவிய ரீதியில் உள்ள ப. நோ.கூட்டுறவு சங்கங்களுக்கு தீர்வை விலக்களிக்கப்பட்டு பாரவூர்திகளைப் பெற்றுக் கொடுக்கும் திட்டம் (2017 - 2018) இரண்டு வருடங்களுக்கு தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் தீர்வை விலக்களிக்கப்பட்ட பாரவூர்திகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் ப.நோ.கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் பகுதி மாவட்ட கூட்டுறவு ஆணையாளருடன் தொடர்பு கொள்ளுமாறு கைத்தொழில் மற்றும் வணிக விவகார அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கைத்தொழில் மற்றும் வணிக விவகார அமைச்சினால் தீர்வை அற்ற பாரவூர்தி பெற்றுக் கொள்வது தொடர்பாக கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக வழங்கப்பட்ட தகவல்களுக்கு அமைய இதுவரை 158 ப.நோ.கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே பாரவூர்தியைப் பெற்றுக்கொள்வதற்கான வேண்டுகோளை முன்வைத்துள்ளன.

இதுவரை 2017 ஆம் ஆண்டு 83 சங்கங்களுக்கு தீர்வையற்ற பாரவூர்திகள் கையளிக்கப்பட்டுள்ளதாக அத் தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# வவுனிக்குளத்தின் பெரும்போகத்திற்கான நீர் விநியோகத்திட்டம் நேற்று ஆரம்பம்




முல்லைத்தீவு வவுனிக்குளத்தின் பெரும்போகத்திற்கான நீர்விநியோகத்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வவுனிக்குள நீர்ப்பாசனப்பொறியியலாளர் பாக்கியநாதன் விகர்ணனின் தலைமையில் நேற்று இடம்பெற்ற நிகழ்வில் 65 ஆவது மல்லாவி ஆலங்குளம் படைப்பிரிவின் உதவியுடன் 20 கிலோ மீற்றர் பிரதான வாய்க்கால் இராணுவத்தினரால் துப்புரவு செய்யப்பட்டும் 7.5 மில்லியன் ரூபா செலவில் புதிதாக ஓரடிக்கலிங்கு உயர்த்தப்பட்டும் தற்போது 25 அடிநீர் கொள்ளளவுள்ள குளம் 26 அடியாக நீர்மட்டம் உயர்த்தப்பட்டு 6060 ஏக்கரில் பெரும்போகம் இவ்வாண்டு செய்கை பண்ணப்படும்.

அந்தவகையில் பெரும்போகத்திற்கான நீர் விநியோகத் திட்டத்தினை 65 ஆவது படைப்பிரிவின் இராணுவத் தளபதி பிரிகேடியர் ஈஸ்வரன் ஆரம்பித்து வைத்தார்.

இராணுவ வீரர்கள், விவசாயிகள் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர். (2-15)

# முதிரை மரத்தைத் தறித்து பலகைகளாக்கிய நபர் கைது



மாங்குளம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொல்லவிளான் குளத்தில் அரச காட்டுப் பகுதியில் அனுமதிப் பத்திரமின்றி முதிரை மரத்தைத் தறித்து அதனைப் பலகைகள். ஆக்கி வீட்டில் மறைத்து வைத்திருந்த சந்தேக நபர் ஒருவர் தடயப் பொருட்களுடன் கைது செய்யப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இச் சம்பவம் நேற்று முன்தினம் புதன்கிழமை இரவு 8 மணியளவில் நடைபெற்றுள்ளது. இது தொடர்பில் தெரிய வருவதாவது,

மாங்குளம் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற தகவலை அடுத்து மாங்குளம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மாலின் பெரேராவின் உத்தரவிற்கமைய, மாங்குளம் பொலிஸ் நிலைய உப-பொலிஸ் பரிசோதகர் அ. சியாஎன் தலைமையிலான பொலிஸ் கொஸ்தா பல்களான ரெட்நாயக்கா (48040), ஞானவர்த்தன (41696), ரூவான் (71524) ஆகியோர் அடங்கிய பொலிஸ் அணியினரின் சுற்றிவளைப்பின் போதே முதிரைப் பலகைகளுடன் சந்தேக நபர் கைதானார்.

கைது செய்யப்பட்டுள்ள சந்தேக நபர் மாங்குளம் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதுடன் விசாரணைகளின் பின்னர் தடயப் பொருளுடன் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றில் முற்படுத்தப்படவுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (2-15)

# 32 பெண் தலைமைத்துவ குடும்பங்களுக்கு துவிச்சக்கரவண்டிகள் வழங்கப்படவுள்ளன

(மல்லாவி)

பிரித்தானியாவில் உள்ள தமிழர் எதிர்காலத்திற்கான பாதை நிறுவனத்தின் 5 இலட்சம் ரூபா நிதி அனுசரணையுடன் வட்டு இந்து வாலிபர் சங்கத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட வாழ்க்கைத் துணையை இழந்து பெண் தலைமை தாங்கும் அமரா அமைப்பின் கீழுள்ள தெரிவு செய்யப்பட்ட 32 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நாளை சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு வள்ளிபுனம் இனிய வாழ்வு இல்லத்தில் வைத்து 32 துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்படவுள்ளன. (2-15)

வன்னி வலம்

# 'பல்கலைக்கழக நண்பர்கள்' அமைப்பினால் மாணவர்களுக்கு இலவசக் கருத்தரங்குகள்

கொழும்பு பல்கலைக்கழகத்தின் "பல்கலைக்கழக நண்பர்கள்" அமைப்பின் ஏற்பாட்டில் கல்வியில் பின்தங்கியுள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தரங்கு நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் முல்லைத்தீவு கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் இருந்து நடப்பாண்டில் க.பொ.த. (சா/த) பரீட்சை எழுதவுள்ள மாணவர்களின் சித்தி வீதத்தை அதிகரிக்கும் நோக்குடன் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்கான இலவச கருத்தரங்குகள் நடைபெறவுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழக மாணவர்கள் அறிவித்துள்ளனர்.

இக்கருத்தரங்குகள் நாளை சனிக்கிழமையும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமையும் காலை 9 மணி தொடக்கம் மு/வித்தியானந்தா கல்லூரி, மு/புதுக்குடியிருப்பு மத்திய கல்லூரி ஆகிய இரண்டு பாடசாலைகளில் நடைபெறும்.

எனவே மாணவர்கள் தமக்கு வசதியான இரு பாடசாலைகளில் ஏதாவது ஒரு பாடசாலையில் கருத்தரங்கில் பங்கேற்று பயன் பெற்றுக் கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (2-15)

### மன்னார் மாவட்டத்தில் தொழில் வாய்ப்பின்றியுள்ள

# இளைஞர், யுவதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த தொழில் பயிற்சிகள் ஆரம்பம்

(மல்லாவி)

கைத்தொழில் மற்றும் வணிக விவகார அமைச்சின் 10 இலட்சம் ரூபா நிதியனுசரணையில் மன்னார் மாவட்டத்தின் தேசிய இளைஞர் சேவை கூட்டுறவு சங்கத்தின் ஒழுங்குபடுத்தலில் தொழில் வாய்ப்பின்றி இருக்கும் இளைஞர், யுவதிகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்கில் பல்வேறு வகையான தொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் தெரிய வருவதாவது,

தொழில்வாய்ப்பின்றி காணப்படும் மன்னார் மாவட்டத்திற்குட்பட்ட இளைஞர், யுவதிகளுக்கும் ஆடை வடிவமைத்தல், மின்சார இணைப்பு பயிற்சிகள், மீன்பிடி மற்றும் தச்சு ஆகியவற்றின் தொழில் பயிற்சிகள், விலங்கு வேளாண்மை, கைத்தொழில் உற்பத்திகள் போன்ற பல்வேறு வகையான சுயதொழில் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

பயிற்சி நெறியை முழுமையாக நிறைவு செய்பவர்களுக்கு அவர்கள் தொழில்துறையை ஆரம்பிப்பதற்கு ஆரம்பகட்ட உதவியாக 25 ஆயிரம் ரூபா பணம் வழங்கப்படவுள்ளதாக அத்தகவலில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (2-15)

# மோ.சைக்கிளை திருடியவர் சீசீரிவி கமராவில் சிக்கினார்

வவுனியாவில் பட்டப்பகலில் மோட்டார் சைக்கிள் திருடியவர் சீசீரிவி கமரா காணொலியில் சிக்கியுள்ளார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது குறித்து மேலும் தெரியவருவதாவது.

வவுனியா. குருமன்காடு பகுதியில் உள்ள பல்பொருள் விற்பனை நிலையம் ஒன்றுக்குச் சென்ற பெண் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளை கடைக்கு முன்னால் நிறுத்தி விட்டு. கடைக்குள் சென்று பொருட்கள் கொள்வனவில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது அப்பகுதிக்கு வந்த இளைஞர் ஒருவர் மோட்டார் சைக்கிளில் அமர்ந்து இருந்து விட்டு அதனை திருடிச் சென்றுள்ளார்.

இத் திருட்டுச் சம்பவம் அப்பகுதியில் பொருத்தப்பட்டிருந்த சீசீரிவி கமரா காணொலியில் பதிவாகியுள்ளது. இது தொடர்பான விசாரணைகளை வவுனியா பொலிஸார் ஆரம்பித்துள்ளனர். (2-250)

# பழைமைவாய்ந்த இத்திமரம் பாறி வீழ்ந்து போக்குவரத்திற்குத் தடை



கிளிநொச்சியில் பழைமை வாய்ந்த மரம் முழுமையாக சரிந்து விழுந்ததில் பலமணி நேரம் ஏ-9 வீதி போக்குவரத்து தாமதமடைந்தது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சுமார் நூறு வருடங்கள் பழைமைவாய்ந்த மரம் நேற்று முன்தினம் இரவு முழுமையாக ஏ-9 வீதியில் சரிந்து விழுந்ததில் பலமணி நேரம் போக்குவரத்து தாமதமடைந்தது.

கிளிநொச்சி கந்தசுவாமி கோவில் அருகிலுள்ள இத்தி மரம் ஏ-9 வீதியின் குறுக்கே மழை காரணமாக பாறி விழுந்ததில் போக்குவரத்து முற்றிலும் தடைப்பட்டதையடுத்து கிளிநொச்சி மாவட்ட அனர்த்த முகாமைத்தினரும் இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரும் இணைந்து செயற்பட்டதால் நேற்று முன்தினம் இரவு போக்குவரத்தை விரைவுபடுத்த முடிந்தது.

இருப்பினும் குறித்த மரம் முற்றாக இன்னமும் அகற்றப்படாமல் இருப்பது குறிப்பிடத்தக்கது. (2-312-307-281)

## சமுர்த்தி பயனாளிகளின் குடும்பங்களில் பிறக்கும்

# இரட்டை குழந்தைகளுக்கு உதவித்தொகை

## சமூக வலுவூட்டல் நலன்புரி அமைச்சின் சுற்றுநிருபப்படி

(மல்லாவி)

சமூக வலுவூட்டல் மற்றும் சமூக நலனோம்பு அமைச்சினால் சமுர்த்தி பயனாளிகள் குடும்பத்தில் பிறக்கும் ஒரு குழந்தைக்காக வழங்கப்பட்டு வரும் 7 ஆயிரத்து 500 ரூபா பணம் 2 ஆவது 3 ஆவ்து ஆகிய குழந்தைகளுக்கு வழங்கப்படவுள்ளதுடன் மேலதிகமாக இரட்டைக் குழந்தைகள் பிறக்கும் பட்சத்தில் மாதம் ஒன்றிற்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் ஒரு வருடத்திற்கு 60 ஆயிரம் ரூபா வழங்கப்படவுள்ளது.

அத்துடன் ஒரே தடவையில் மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட குழந்தைகளை பிரசவிக்கும் போது மாதம் ஒன்றிற்கு 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்படவுள்ளதாகவும் சமூக வலுவூட்டல் நலன்புரி அமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க சுற்றுநிருபங்கள் ஊடாக சமுர்த்தி நிர்வாக அலுவலர்களுக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் தெரிய வருதாவது,

சமுர்த்தி நிவாரணம் பெறுகின்ற குடும்பங்களில் குழந்தையை பிரசவிக்கும் தாய்மாருக்கு இதுவரை காலமும் ஒரு குழந்தைக்கு சுமார் 7 ஆயிரத்து 500 ரூபா வழங்கப்பட்டு வந்தது.

கடந்த உலக சிறுவர்தினம் கொண்டாடப்பட்ட ஒகஸ்ட் மாதத்தில் இருந்து நடைமுறைக்கு வரும் வகையில் சமுர்த்திப் பயனாளிகள் குடும்பங்கள், பயனாளிகள் அல்லாத குடும்பங்கள் என்பவற்றில் பிறக்கும் குழந்தைகள் அனைத்திற்கும் மேற்கூறப்பட்ட கொடுப்பனவுத் தொகை வாழ்வின் எழுச்சி பாதுகாப்பு நிலையத்தினால் வழங்கப்படவுள்ளதாக சமூக வலுவூட்டல் நலன்புரி அமைச்சர் சுற்றுநிருபங்கள் ஊடாக அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலதிக தகவல் பெற விரும்புவோர் 011 286 4398 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாகவோ அல்லது 011 286 4398 என்ற தொலைநகல் ஊடாகவோ தொடர்பு கொண்டு தகவல்களைப் பெற முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (2-15)





வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் கலாசார அலுவல்கள் திணைக்களம் ஆகியவற்றின் அனுசரணையுடன் வவுனியா மாவட்ட கலாசார பேரவை. வவுனியா மாவட்ட செயலகம் ஆகியன ஏற்பாடு செய்த வவுனியா மாவட்ட கலை இலக்கிய கருத்தமர்வும் பண்பாட்டு பெருவிழாவும் அண்மையில் வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகியது. அதன் இரண்டாம் நாள் நிகழ்வுகள் கடந்த முதலாம் திகதி இடம்பெற்ற போது... (படங்கள்:-குருமன்காடு செய்தியாளர்)

# ஹெரோயின் மீது அதிக மோகம் சிறுநீரகத்தை விற்ற நபர் கைது

(கொழும்பு)

ஹெரோயின் கொள்வனவு செய்வதற்காக, தனது சிறுநீரகத்தை 500,000 ரூபாய்க்கு விற்பனை செய்த போதைக்கு அடிமையான நபரொருவரை, 100 மில்லிகிராம் ஹெரோயினுடன், காலி பொலிஸார் கைது செய்துள்ளனர்.

காலி, தன்கெதர பகுதியில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சுற்றிவளைப்பின் போதே, குறித்த நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர், தனது சிறுநீரகத்தை விற்பனை செய்த பின்னர், கொழும்புக்குச் சென்றுள்ளதாகவும் அங்கு ஒரு இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய்க்கு ஹெரோயினை கொள்வனவு செய்து விட்டு, மிகுதியிருந்த பணம் செலவழிந்த பின்னர், காலிக்குத் திரும்பியுள்ளதாகவும் விசாரணைகளின் மூலம் தெரிய வந்துள்ளது.


36 வயதுடைய திருமணமாகாத குறித்த நபர், நாளாந்த கூலித் தொழிலாளியாக கடமையாற்றுபவர் என்றும் ஹெரோயின் பாவிப்பதற்காக தனது அனைத்து வருமானத்தையும் இழக்கக்கூடியவர் என்றும் தெரிய வந்துள்ளது.

அண்மையில் தனது வீட்டுக்கும் அருகிலுள்ளவர் சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்டுள்ளமை, சந்தேகநபருக்கு தெரியவந்துள்ளது.

இதற்கு உதவுவதாகத் தெரிவித்த சந்தேகநபர், தனது சிறுநீரகத்தை விலைக்கு கொடுத்து, 5 இலட்சம் ரூபாயைப் பெற்றுக்கொண்டுள்ளார்.

எனினும், சிறுநீரக மாற்று சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நோயாளி, இரண்டு கிழமைகளிலேயே உயிரிழந்து விட்டார் என்று தெரிய வருகின்றது.

இது தொடர்புடைய மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-7)




# விசேட தேவையுடைய இராணுவத்தினரின் போராட்டம் நான்காவது நாளாக தொடர்ந்தது



விசேட தேவையுடைய இராணுவ வீரர்களின் ஓய்வூதியத்தில் காணப்படும் முரண்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பு ஒல்கோட் மாவத்தையில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் நான்காவது நாளாக நேற்றும் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டது.

12 வருடங்கள் இராணுவ சேவையாற்றாத விசேட தேவை உடையோருக்கும் ஓய்வூதிய கொடுப்பனவை வழங்கக் கோரி இந்த போராட்டம் முன்னெடுக்கப்படுகிறது. (இ-7)

# ஆவா குழுவிற்கும் மகிந்தவுக்கும் தொடர்பிருக்கலாம்

## புரவெசி பலய அமைப்பு சந்தேகம்

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் புதிதாக தலைதூக்கியுள்ள ஆவா குழுவிற்கும், மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவதற்கு தருணம் பார்த்துக்கொண்டிருக்கும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தலைமையிலான அணியினருக்கும் தொடர்பிருக்கலாம் என புரவெசி பலய என்ற மக்கள் சக்தி அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் சமன் இரத்தனப்பிரிய எச்சரித்துள்ளார்.

இதனால் இந்த ஆவா கும்பலின் பின்னணி குறித்து ஆராய்ந்து கடும் நடவடிக்கை எடுப்பது ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் கடமை என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

ஊழலுக்கு எதிரான சமூகத்தைக் கட்டியெழுப்புவோம் என்ற தலைப்பில் நேற்று முன்தினம் மாலை கொழும்பில் நடைபெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே சமன் இரத்தனப்பிரிய இவ்வாறு தெரிவித்தார்.

தற்போது அனைவராலும் பேசப்படும் முக்கியமான ஒரு விடயமாக ஆவா குழு இருந்து வருகின்றது.

ஆவா குழு என்பது யார்? இது தமிழ் சமூகத்தின் வேலையா? அல்லது யாராவது உருவாக்கியிருக்கிறார்களா? இது தொடர்பில் ஆராய வேண்டியது அவசியம்.

பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய சந்தர்ப்பத்தில் நாங்கள் ஆவா குழு, இந்த தாக்குதலை நாங்களே மேற்கொண்டோம் என துண்டுப் பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டிருந்தன.

அது சாதாரண மக்களுக்கு விநியோகிக்கப்பட்டிருக்கவில்லை. இராணுவ அதிகாரிகளுக்கும், பொலிஸ் அதிகாரிகளுக்கும் அச்சுறுத்தி ஊடகங்கள் ஊடாக விநியோகிக்கப்பட்டிருந்தன. நாங்கள் இது தொடர்பில் விசாரித்தோம். கொள்ளைக் கூட்டமாக இருக்கலாம் தெற்கிலும் அவ்வாறான குழுக்கள் இருக்கின்றன.

கொழும்பிலும் இருக்கின்றார்கள். எனினும் அவ்வாறு யாரும் இல்லையென வடக்கு மக்கள் தெரிவிக் கின்றனர்.

இது திட்டமிட்டு உருவாக்கப்பட்டதா என்ற சந்தேகம் எமக்கும் எழுகின்றது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# நம்பிக்கையில்லாப் பிரேரணை வந்தாலும் ரணிலுக்கே ஆதரவு

(கொழும்பு)

"கோப் குழுவின் அறிக்கையில் எந்த இடத்திலும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் பெயர் குறிப்பிடப்படவில்லை.

மத்திய வங்கி பிரதமரின் கீழுள்ள அமைச்சின் கீழே உள்ளது.

அதற்காக அவரையும் இதில் தொடர்புபடுத்துவது சரியானதாக இருக்காது" என அமைச்சரவையின் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்தச் செய்தியாளர் மாநாடு, அரசாங்கத் தகவல் திணைக்களத்தில், நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

அதில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் அரசாங்கத்தின் ஆட்சியில் ராடா நிறுவனத்துக்கு மகிந்த ராஜபக்ஷ நேரடியாகவே பணம் வழங்கினார். சுமார் 600 மில்லியன் ரூபாய் பணம் கைமாறியுள்ளது.

அதேபோல கிரிக் பிணைமுறை விவகாரத்திலும் முறைகேடுகள் இடம்பெற்றிருந்தன. அதில் 200 மில்லியன் டொலர் அளவிலான முறைகேடுகள் இடம் பெற்றிருந்தன. அதனைப் போல பல நிதி முறைகேடுகள் இடம்பெற்றபோதும் அன்றைய அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை.

அன்றைய நாட்களில் அது தொடர்பில் ஊடகவியலாளர்களான நீங்கள் செய்தி எழுதியிருந்தால் லசந்த விக்ரமதுங்கவின் இடத்தில் தான் இருந்திருக்க நேரிட்டிருக்கும். ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை.

இது குறித்தெல்லாம் பேசாத ஒருங்கிணைந்த எதிர்க்கட்சியின் உறுப்பினர்கள் தற்போது பிரதமருக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையைக் கொண்டுவரவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

ஒரு விரல் எமக்கு எதிராக நீட்டப்படும்போது ஏனைய அனைத்து விரல்களும் அவர்களுக்கு எதிராகவே செயற்படும். பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக ஒருங்கிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்களால் நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப்படுமாக இருந்தால் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்ட அரசிலுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் அனைவரும் பிரதமருக்கு சார்பாகவே செயற்படுவோம்.

மத்திய வங்கியின் பிணைமுறி விவகாரம் தொடர்பிலான கோப் குழுவின் அறிக்கையானது, தற்போது சட்டமா அதிபர் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனினும், ஊடகங்களில் வெளியிடப்படுவதைப் போல இந்த விவகாரத்துக்கும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக் கும் எந்தவொரு தொடர்பும் கிடையாது.

இதனைக் கோப் குழுவின் தலைவரான சுனில் ஹந்துன்நெத்தியும் ஏற்றுக் கொண்டுள்ளார்.

கோப் குழுவின் முன்னாள் தலைவரான டியு. குணசேகரவினால் வெளியிடப்பட்ட மத்திய வங்கி விவகாரம் தொடர்பிலான இடைக்கால அறிக்கையில் கூட பிரதமருக்கு எதிராக எந்தவொரு குற்றச்சாட்டும் முன்வைக்கப்படவில்லை" என்றார். (இ-7-10)

# ஹொங்கொங்கிற்கு பிரதமர் விஜயம்



(கொழும்பு)

15 ஆவது ஆசிய பசுபிக் மாநாட்டில் கலந்து கொள்ளும் முகமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று காலை ஹொங்கொங் சென்றடைந்தார்.

பிரதமரை சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கருணாசேன கொடித்துவக்கு மற்றும் இலங்கைத்தூதரகத்தின் அதிகாரிகள் விமான நிலையத்தில் வரவேற்றுள்ளனர்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க புதிய அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னர் ஹொங்கொங் பயணிப்பது இதுவே முதற்தடவையாகும்.

ஆசிய பசுபிக் மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட உரையொன்றை நிகழ்த்தவுள்ளார்.

அத்துடன் ஆசிய பசுபிக் மாநாட்டிற்கு வருகை தரும் ஏனைய உலக நாடுகளின் தலைவர்களுடன் பிரதமர் விசேட பேச்சுவார்த்தைகளை நடத்த திட்டமிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# சீனத் தூதுவர் கருத்துக்கு நிதியமைச்சர் ரவி பதிலடி

சீன தூதரகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் சீன தூதுவர் வெளியிட்ட கருத்துக்கு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க நேற்று பதிலடி கொடுத்துள்ளார்.

சீன தூதுவரின் கருத்தை நான் புறக்கணிக்கின்றேன், நான் இலங்கையின் நிதி அமைச்சரே தவிர சீனாவின் நிதி அமைச்சர் அல்ல என நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

சீனாவிடம் இருந்து பெறும் கடனுக்கான வட்டி அதிகம் எனில் ஏன் தொடர்ந்தும் சீனாவிடம் கடன் கேட்கின்றீர்கள் என சீன தூதுவர் நேற்று முன்தினம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இலங்கைக்கு மட்டுமன்றி அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு எக்சிம் வங்கி 2 சத வீத வட்டியில் கடனை வழங்கிவருகின்றது என சீன தூதுவர் கூறியிருந்தார்.

மிக நீண்டகாலமாக சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் தொடர்புகள் இருந்து வருகின்றன என்றும், இலங்கையில் உள்ள சில ஊடகங்கள் நியாயமான காரணம் இன்றி சீனாவை விமர்சித்து வருவதாக சீனத்தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

அண்மையில் சீனாவிடம் பெறும் கடனுக்கான வட்டி அதிகம் என நிதியமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# லசந்தவின் தொலைபேசியை ஒட்டுக்கேட்க கோத்தா உத்தரவு

## அம்பலமான இரகசிய ஆவணம்

(கொழும்பு)

**சண்டே லீடர் ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க படுகொலை செய்யப்படுவதற்கு சில மாதங்கள் முன்னதாக, அவரது கைத் தொலைபேசி உரையாடல்களைக் கண்காணிக்குமாறு முன்னாள் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டிருந்தார் என்பது அரச புலனாய்வுச் சேவை இரகசிய ஆவணம் ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.**




இது தொடர்பாக, அரச புலனாய்வுச் சேவை தலைவராக இருந்த, கீர்த்தி கஜநாயக்கவின் கையொப்பத்துடன் எழுதப்பட்ட கடிதம் ஒன்றை கொழும்பு ரெலிகிராப் வெளியிட்டுள்ளது.

இந்த ஆவணத்தில், லசந்த விக்கிரமதுங்கவின் கைத்தொலைபேசி இலக்கம் உள்ளிட்ட சில கைத்தொலைபேசி உரையாடல்களைக் கண்காணிக்குமாறு, இலங்கை பாதுகாப்புச் செயலரின் அறிவுறுத்தலுக்கு அமைய, கீர்த்தி கஜநாயக்க, தமது அதிகாரிகளைப் பணித்துள்ளார்.

இந்த கண்காணிப்பு தேசிய பாதுகாப்புடன் தொடர்புடையது என்ற குறிப்பையும் அதில் அவர் எழுதியுள்ளார்.

2009 ஜனவரி 9ஆம் திகதி லசந்த விக்கிரமதுங்க கொலை செய்யப்பட்டிருந்தார். அதற்கு முன்னதாக, 2008 செப்டெம்பர் 10ஆம் திகதி இந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.


රාජ්‍ය බුද්ධි සේවය
அரச வேவுச் சேவை
State Intelligence Service
Ministry of Defence Sri Lanka [redacted]

Telephone 2694324-6 Fax 2694327 Your No. [redacted]

[redacted] Colombo Telegraph SIS/655/08

[redacted] OF TELEPHONE [redacted]

As directed by the Secretary, Ministry of Defense please be good enough to [redacted] the following telephone numbers along with their [redacted] :-

[redacted] 07773 / 07773 / 07732 / 07775 / 07775 / 0777 Lasanth[redacted]'s / 07774 / 07775 / 07774 Ra[redacted]il's / 07791 / 07730 / 07739 [redacted] 07776 / 07777 / 07777 / 07776 / 07777 / 0777309672 [redacted] / 077

This [redacted] carry out intelligence operations related to National Security.

Your co-operation in this regard is very much appreciated.

(Keerthi Gajanayake)
Senior Deputy Inspector General of police
State Intelligence Service

10th September 2008

இந்த ஆவணத்தில் கண்காணிக்கப்பட வேண்டிய தொலைபேசி இலக்கங்கள் என்று வரிசைப்படுத்தப்பட்டுள்ளவற்றில், முன்னாள் எதிர்க்கட்சித் தலைவரும், தற்போதைய பிரதமருமான ரணில் விக்கிரமசிங்கவின் கைத்தொலைபேசி இலக்கமும் அடங்கியுள்ளது.

ஏனைய தொலைபேசி இலக்கங்கள் பல அரசியல் பிரமுகர்களுடையவை என்றும் தெரியவருகிறது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக தொலைபேசி இலக்கங்களை மறைத்து குறித்த ஆவணம் வெளியிடப்பட்டுள்ளது. (இ-7-10)

# சிவனொளிபாத மலையில் ஹோட்டல் எதுவும் நிர்மாணிக்கப்படவில்லையாம்

## ஊடகத்துறை அமைச்சு விளக்கம்

சிவனொளிபாதமலை புனித தல வளாகத்தில் எவ்விதமான கட்டடங்களும் நிர்மாணிக்கப்படவில்லை. அங்கு எந்த ஹோட்டலும் நிர்மாணிக்கப்படவில்லை என்பதனை பொறுப்புடன் தெரிவிக்கின்றோம் என்று ஊடகத்துறை பிரதியமைச்சர் கரு பரணவிதாரண தெரிவித்தார்.

சிவனொளிபாதமலைக்கு செல்லும் வழியில் 88 ஏக்கர்களில் அமைந்துள்ள ஒரு தனியார் நிலத்தில் ஏற்கனவே இருந்த ஒரு கட்டடத்தை தற்போது விடுமுறை விடுதியாக மாற்றப்பட்டு வருகின்றது.

இதனை வைத்து பௌத்தர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்துவதற்கு பொய் பிரசாரம் செய்யப்படுகின்றது என்றும் பிரதியமைச்சர் தெரிவித்தார்.

அரசாங்க தவகவல் திணைக்களத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஊடகத்துறை பிரதியமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சிவனொளிபாதமலை புனித தல வளாகத்தில் எவ்விதமான கட்டடங்களும் நிர்மாணிக்கப்படவில்லை. அங்கு எந்த ஹோட்டலும் நிர்மாணிக்கப்படவில்லை. பௌத்தர்கள் மற்றும் முஸ்லிம்களுக்கிடையில் விரிசலை ஏற்படுத்துவதற்கு பொய் பிரசாரம் செய்யப்படுகின்றது.

கேள்வி:- அப்படியானால் இந்த சர்ச்சைக்கு என்ன காரணம்?

பதில்:- .சிவனொளிபாதமலை புனிததலம் 99 ஏக்கர்களைக் கொண்ட பிரதேசமாகும். அந்தப் பகுதிக்கு செல்லும் வழியில் 88 ஏக்கர்களில் ஒரு தனியார் நிலம் இருக்கிறது.

அதில் ஏற்கனவே இருந்த ஒரு கட்டடத்தை தற்போது விடுமுறை விடுதியாக மாற்றுவதற்கு அனுமதி கோரப்பட்டுள்ளது.

அதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அந்தக் கட்டட வேலைகள் நடைபெறுகின்றன. அதிலும் சுற்றாடல் சம்பந்தமான ஒரு பிரச்சினை எழுப்பப்பட்டுள்ளது. அது தொடர்பாக விசாரணை நடத்தி வருகின்றோம்.

மாறாக சிவனொளிபாத புனிததல வளாகத்தில் எவ்விதமான கட்டடமோ ஹோட்டலோ அமைக்கப்படவில்லை.

எனினும் ஒருசில தரப்பினர் நாட்டில் மத விரிசலை ஏற்படுத்துவதற்கு சிலர் முயற்சித்து வருகின்றனர்.

கடந்த அமைச்சரவையில் பிரபல அமைச்சர் ஒருவர் இங்கு ஒரு ஹோட்டலை நிறுவ முயற்சித்தார். அந்த முயற்சி தோல்வியில் முடிவடைந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)

# புகையிரதக் கடவைகளில் கடமையாற்ற பாதுகாப்பு தரப்பு தீர்மானத்திற்கு எதிர்ப்பு

(கொழும்பு)

பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளில் வாயிற்காப்போராக கடமையாற்ற, பாதுகாப்பு தரப்பினரை நியமிக்கும் போக்குவரத்து அமைச்சரின் தீர்மானத்திற்கு பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளில் கடமையாற்றும் வாயிற்காப்போர் சங்கம் எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

புகையிரத வாயிற்காப்போருக்கு தீர்வு வழங்குவதற்காக அமைச்சர் புதிய பிரச்சினையை தோற்றுவிக்க முயற்சி மேற்கொள்ளப்படுவதாக, அந்த சங்கத்தின் செயலாளர் நிமல் சந்திரசிறி தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பற்ற புகையிரத கடவைகளில் கடமையாற்றும் வாயிற்காப்போர், மேற்கொண்டுள்ள தொடர் வேலை நிறுத்தம் காரணமாக, அந்தக் கடமைகளில் பாதுகாப்பு தரப்பினரை ஈடுபடுத்த நடவடிக்கை எடுப்பதாக நேற்று முன்தினம் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# யாழ்.இந்துக் கல்லூரி வீதியில் வெள்ளத்தால் அசௌகரியம்





(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக்கல்லூரி வீதியில் மழை வெள்ளம் அதிகளவில் தேங்கி நிற்பதன் காரணமாக அவ்வீதியால் போக்குவரத்து செய்பவர்கள் பாரிய சிரமத்தினை எதிர்நோக்கியுள்ளதாக முறையிட்டுள்ளனர்.

குறித்த வீதிக்கு அருகில் பாடசாலை அமைந்திருப்பதனால் அவ்வீதி ஊடாக பயணிக்கும் மாணவர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

இவ் விடயம் தொடர்பாக யாழ். மாநகரசபை ஆணையாளர் பொ.வாகீசனை தொடர்பு கொண்டு கேட்டபோது,

குறித்த பகுதிக்கு மாநகர சபை ஊழியர்கள் சென்று பார்வையிட்டுள்ளனர். தற்காலிக ஏற்பாடாக அந்த வீதியில் தேங்கியுள்ள நீரினை வெளியேற்றும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்போது மழை காலமாக இருப்பதனால் குறித்த வீதியினை புனரமைப்பு செய்வது சாத்தியமற்றது.

அத்துடன் இந்த வீதியினை புனரமைப்பு செய்வதற்கு அதிகளவான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ள வேண்டியிருப்பதால் அடுத்த வருடமளவில் வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் அதுவரை தற்காலிக ஏற்பாடு மேற்கொள்ளப்படும் என அவர் தெரிவித்தார். (இ-9)

## சான்றிதழ், விருது வழங்கும் விழா

யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியில் இயங்கிவரும் ஈ-சிற்றி ஆங்கிலக் கல்லூரியில் ஆங்கில டிப்ளோமாப் பாடநெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ் மற்றும் விருது வழங்கும் வைபவம் கல்லூரியின் அதிபர் சாமசிறி தேசகீர்த்தி லயன். ஜெயச்சந்திரமூர்த்தி றஜீவன் தலைமையில் யாழ்ப்பாணம் சரஸ்வதி மண்டபத்தில் நாளை 5 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு வெகு சிறப்பாக இடம்பெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் வாழ்நாள் பேராசிரியருமான கலாநிதி பொ. பாலசுந்தரம்பிள்ளை, திருமதி ராஜலக்ஸ்மி பால சுந்தரம்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (இ-10)

## நீரிழிவை வெற்றிகொள்வோம்

உலக நீரிழிவு தினத்தை முன்னிட்டு எதிர்வரும் 14 ஆம் திகதி நீரிழிவை வெற்றி கொள்வோம் எனும் தொனிப்பொருளில் மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு உலக சுகாதார ஸ்தாபனம் கேட்டுள்ளதாக யாழ். நீரிழிவு அஷோசியேஷன் அறிவித்துள்ளது. (இ-3)

## யோகாப் பயிற்சிகள் அறிமுகவுரை

யாழ். அறிவுத் திருக்கோவில் மனவளக் கலை யோகாப் பயிற்சிகள் பற்றிய அறிமுகவுரை நாளை 5 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு இல. 81, பிறவுண் வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அறிவுத்திருக்கோவிலில் இடம்பெறும். இந்நிகழ்வில் அறிமுகவுரையினை தமிழ் நாட்டைச் சேர்ந்த பேராசிரியர் அருள்நிதி எஸ். இந்திரா நிகழ்வுத்துவார். அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

# புகையிரதங்கள் மோதி விபத்து

## 20 பேர் உயிரிழப்பு





**(இஸ்லாமாபாத்)**

**பாகிஸ்தானின் கராச்சி நகரில் நேற்று வியாழக்கிழமை காலை இடம்பெற்ற புகையிரத விபத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.**

குறித்த பகுதியில் தேடுதல் பணிகள் முழுவீச்சில் இடம்பெற்று வருகின்ற நிலையில் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் என அஞ்சப்படுகின்றது.

விபத்தில் காயமடைந்த 40 பேர் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கராச்சி நகரில் உள்ள லன்டி புகையிரத நிலையத்திற்கு அருகில் நேற்றுக் காலை ஸகாரியா எக்ஸ்பிரஸ் புகையிரதம் மற்றும் பரீட் எக்ஸ்பிரஸ் புகையிரதம் ஆகியவை ஒன்றோடொன்று மோதி விபத்திற்குள்ளாயின.

புகையிரத விபத்தை அடுத்து கராச்சி மற்றும் ஏனைய நகரங்களுக்கான புகையிரத சேவைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அதிகாரிகள் அறிவித்துள்ளனர். (இ-7)

## அரசியலமைப்பு சட்ட உருவாக்கத்தில்

# இந்தியாவின் அனுபவத்தை நேபாளம் பார்க்க முடியும்

## பிரணாப் வலியுறுத்தல்



(காத்மண்டு)

அரசியலமைப்பு சட்ட உருவாக்கத்தில் இந்தியாவின் அனுபவத்தை நேபாளம் கணக்கில் எடுத்துக் கொள்ளலாம் என்று ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வலியுறுத்தியுள்ளார்.

இந்தியாவுக்கும் அண்டை நாடான நேபாளத்துக்கும் இடையே அண்மைக்காலமாக விரிசல்கள் இருந்து வரும் நிலையில் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி 3 நாட்கள் அரசு முறைப் பயணமாக நேற்று முன்தினம் நேபாள தலைநகரான காத்மண்டு சென்றடைந்தார்.

கடந்த 18 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய ஜனாதிபதி தற்போது முதல்முறையாக நேபாளம் செல்வதால் பிரணாப் முகர்ஜியின் இந்தப் பயணம் முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

நேபாளம் சென்ற பிரணாப் முகர்ஜிக்கு அந்நாட்டு ஜனாதிபதி பித்யா தேவி பந்தாரி தலைமையில் சிவப்பு கம்பளம் விரித்து, முப்படையினரின் அணிவகுப்பு மரியாதையுடன் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது.

பின்னர் நேபாள ஜனாதிபதி அலுவலகத்தில் பித்யா தேவியுடன் பிரணாப் முகர்ஜி சந்தித்து ஆலோசனை நடத்தினார். அப்போது, அரசியலமைப்பு சட்ட உருவாக்கத்தில் இந்தியாவின் அனுபவத்தை நேபாளம் கணக்கில் கொள்ளலாம் என பிரணாப் வலியுறுத்தினார். (இ-7-10)

## மொசூலுக்கு வெளியே ஈராக் படை காத்திருப்பு



மேற்காசிய நாடான ஈராக்கின் மொசூல் நகரை, ஐ. எஸ். பயங்கரவாத அமைப்பின் கட்டுப்பாட்டில் இருந்து மீட்கும் நடவடிக்கை, மோசமான வானிலையால் தடைப்பட்டுள்ளது.

**ஈராக் படைகள் முன்னேற்றம்**

ஈராக் மற்றும் சிரியாவின் சில பகுதிகளை கைப்பற்றியுள்ள, ஐ.எஸ். பயங்கரவாத அமைப்பு, உலகெங்கும் பல்வேறு பகுதிகளில், பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. ஐ.எஸ். அமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை மீட்டெடுக்கும் முயற்சியில், ஈராக் படைகள் ஈடுபட்டுள்ளன. அதன்படி, மிகவும் முக்கியமான மொசூல் நகரை நோக்கி, ஈராக் படைகள் முன்னேறி வந்தன.

**சற்றுக் கடினம்**

இந்நிலையில், மோசமான வானிலை காரணமாக, மொசூலின் புறநகர் பகுதியில், ஈராக் படைகள் காத்திருக்கின்றன. மொசூலை முழுவதுமாக மீட்பதற்கு சில வாரங்கள் ஆகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த நகரில் வசிக்கும் பொது மக்களை, ஐ.எஸ்.பயங்கரவாதிகள் கேடயமாக பயன்படுத்துவதால், ஈராக் படைகளால் முன்னேறுவது சற்றுக் கடினமாகவே இருக்கும் என அங்குள்ள சர்வதேச தொண்டு அமைப்புகள் தெரிவித்துள்ளன. (இ-7)

# 3 விநாடிகளில் மௌலிவாக்கம் 11 மாடிக் கட்டடம் தகர்க்கப்பட்டது





சென்னை போரூர் அருகே மௌலிவாக்கத்தில் ஆபத்தான நிலையிலிருந்த 11 அடுக்குமாடிக் கட்டடம் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை வெடிபொருள் வைத்து 3 விநாடிகளில் தகர்க்கப்பட்டது.

மௌலிவாக்கத்தில் கட்டப்பட்டு வந்த இரண்டு 11 அடுக்குமாடி கட்டடங்களில் ஒன்று, கடந்த 2014 ஆம் ஆண்டு ஜூன் 28 ஆம் திகதி சரிந்து தரைமட்டமானது. இதில் கட்டுமான ஊழியர்கள் 61 பேர் உயிரிழந்தனர்.

இதையடுத்து சரிந்த கட்டடத்துக்கு அருகில் இருந்த மற்றொரு 11 மாடிக் கட்டடம் பலவீனமாக இருந்ததால், அதை இடிக்க காஞ்சிபுரம் மாவட்ட நிர்வாகம் உத்தரவு பிறப்பித்தது. இந்த உத்தரவுக்கு கட்டுமான உரிமையாளர் உயர்நீதிமன்றத்தில் இடைக்கால தடை பெற்றார்.

இதையடுத்து, தமிழக அரசு உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. இதில் கட்டடத்தை ஜூன் முதல் வாரத்துக்குள் இடிக்க வேண்டும் என நீதிமன்றம் உத்தரவிட்டது. இதையடுத்து, உள்வெடிப்பு முறை (இன்ப்ளோஷன்) மூலம் வெடிக்க செய்து கட்டடத்தை இடிக்க, திருப்பூரில் உள்ள "மேக்லிங்க்" கட்டுமான நிறுவனத்துடன் சி.எம்.டி.ஏ. ஒப்பந்தம் மேற்கொண்டது. இதன்படி, நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை கட்டடத்தை இடிக்க முடிவு செய்யப்பட்டது.

கட்டடம் இடிப்பதையொட்டி, மௌலிவாக்கம் ராஜராஜன் நகர் தெரு, ராஜலட்சுமி நகர், தாமரை நகர் பகுதியில் உள்ள 500இற்கும் மேற்பட்ட குடியிருப்புவாசிகள், மதனந்தபுரத்தில் ஒதுக்கப்பட்டிருந்த இடத்தில் தங்கவைக்கப்பட்டனர். அதையடுத்து, 100 மீற்றருக்குள் யாரும் நுழையாதவாறு அந்தப் பகுதியை முழுவதுமாக கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இதற்காக, 500இற்கும் மேற்பட்ட பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். அத்துடன் அம்புலன்ஸ், தீயணைப்பு வாகனங்கள் தயார்நிலையில் நிறுத்தப்பட்டன.


அதன்பிறகு, கட்டடத்தளங்களில் வெடிமருந்து வைக்கப்பட்ட இடங்களை வயர்கள் மூலம் இணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. அதையடுத்து, வெடிமருந்து இணைப்புகள் சரியாக இணைக்கப்பட்டுள்ளனவா என பலமுறை ஆய்வு செய்யப்பட்டது.

கட்டடம் முதலில் பிற்பகல் 2 மணியளவில் வெடிக்க வைக்கப்படுவதாக இருந்த நிலையில், 5 முறை ஒத்தி வைக்கப்பட்டு மாலை 5.30 மணியளவில் வெடிக்க வைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், 2 மற்றும் 6 ஆவது தளத்தில் வெடிபொருட்கள் நிரப்பும் பணி நடைபெற்றதால் மேலும் தாமதம் ஆனது.

அதன்பிறகு, சரியாக 6.50 மணியளவில் கவுன்டவுன் தொடக்கப்பட்டது. பின்னர், ரிமோட் மூலம் வெடிபொருட்களை வெடிக்கச் செய்து 11 அடுக்குமாடி கட்டடம் முழுவதுமாக 3 விநாடிகளில் உள்நோக்கி இடிந்து தரைமட்டமானது.

கட்டடம் தரைமட்டமானதும் அந்த இடமே புகை மண்டலமாக காட்சி அளித்தது. அருகில் உள்ள கட்டடங்களுக்கு பாதிப்பு இல்லாமல் பாதுகாப்பாக வெடித்து தகர்க்கப்பட்டது. கட்டடம் இடிந்து விழுந்ததும் அந்தப் பகுதியில் இருந்து கடும் புகை மூட்டம் வெளியானது. 10 நிமிடங்களில் இந்த புகை மூட்டம் படிப்படியாக விலகியது. (இ-7)

# இறுதி நேரத்தில் ட்ரம்ப் முன்னிலை



(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் இறுதிக் கட்டத்தை அடைந்துள்ள நிலையில் திடீர் திருப்பமாக ஹிலாரியை விட ட்ரம்ப் முன்னிலை வகிக்கிறார்.

இந்நிலையில் ட்ரம்ப் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பவர் என்று ஹிலாரி கிளின்டன் குற்றம் சாட்டியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை நடக்கிறது.

இதில் ஜனநாயகக் கட்சி சார்பில் ஹிலாரி கிளின்டனும், குடியரசுக் கட்சி சார்பில் டொனால்டு ட்ரம்பும் போட்டியிடுகின்றனர்.

தேர்தலுக்கு இன்னும் சில நாட்களே இருக்கும் நிலையில் இருவரும் உச்சக் கட்ட பிரசாரத்தில் ஈடுபட்டு உள்ளனர்.

ஹிலாரி கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை அமெரிக்க வெளியுறவு அமைச்சராக பதவி வகித்தார்.

அப்போது அவரது தனிப்பட்ட ஈ-மெயில் முகவரியை அரசு பணிக்கு பயன்படுத்தியது கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் ஊழல் மற்றும் வரி ஏய்ப்பு ஆதாரங்கள் அடங்கிய 33 ஆயிரம் ஈ-மெயில்களை அவர் நீக்கி விட்டதாகவும் குற்றம் சாட்டப்பட்டது.

இது தொடர்பாக அமெரிக்க புலனாய்வு அமைப்பு (எப்.பி.ஐ.) ஏற்கனவே விசாரணை நடத்தியது.

இதில் ஹிலாரி மீதான புகாருக்கு ஆதாரம் இல்லை எனக்கூறி வழக்கை முடித்து விட்டது.

இந்த விவகாரம் தற்போதைய ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திலும் எதிரொலித்து வந்தது.

அதாவது ஹிலாரியின் தனிப்பட்ட ஈ-மெயில்களை எப்.பி.ஐ. அமைப்பு மீண்டும் ஆய்வு செய்ய முடிவு செய்து உள்ளது.

இதற்கான அனுமதியையும் பெற்று உள்ளது ஈ-மெயில் விவகாரம் தற்போது மீண்டும் விஸ்வரூபம் எடுத்துள்ளது.

பாலியல் விவகாரம் என பல்வேறு பிரச்சினை காரணமாக ட்ரம்ப் மீதான மக்கள் செல்வாக்கு சரிந்தது.

ஹிலாரிக்கும், ட்ரம்புக்கும் இடையே 3 தடவை நேரடி விவாதம் நடந்தது.

அதில் ஹிலாரி கிளின்டனே முன்னிலை வகித்தார்.

இந்நிலையில் எப்.பி.ஐ. யின் முடிவு ஹிலாரி கிளின்டனுக்கு பெரும் பின்னடைவை ஏற்படுத்தியுள்ளது.

இதுவரை நடந்த கருத்துக் கணிப்பில் 6 முதல் 8 புள்ளிகள் வரை முன்னிலை வகித்த ஹிலாரி கிளின்டன் திடீரென பின்னடைவை சந்தித்தார்.

ஏபிசி நியூஸ், மற்றும் வோஷிங்டன் போஸ்ட் நிறுவனங்கள் சார்பில் மற்றொரு கருத்து கணிப்பு முடிவு வெளியிடப்பட்டது.

அதில் முதன் முறையாக ஹிலாரியை விட ட்ரம்ப் ஒரு புள்ளி கூடுதலாக பெற்று முன்னிலையில் உள்ளார்.

ட்ரம்புக்கு 46 சதவீதம் பேரும், ஹிலாரிக்கு 45 சதவீதம் பேரும் ஆதரவு தெரிவித்துள்ளனர். இதனால் அமெரிக்க தேர்தலில் கடும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் டிரம்ப் அமெரிக்காவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பவர் என்று ஹிலாரி குற்றம் சாட்டியுள்ளார். (இ-7)

# பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு நாடுகள் ஒன்றிணைய வேண்டும்

## நேபாளத்தில் இந்திய ஜனாதிபதி அழைப்பு

(காத்மண்டு)

பயங்கரவாதத்தை ஒழிப்பதற்கு சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து பாடுபட வேண்டியது அவசியம் என்று இந்தியாவின் ஜனாதிபதி பிரணாப் முகர்ஜி வலியுறுத்தியுள்ளார்.



நேபாளத்தில் அந்நாட்டு அரசு சார்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை அளிக்கப்பட்ட விருந்தில் பங்கேற்ற பிரணாப் முகர்ஜி, இவ்வாறு தெரிவித்தார்.

பிரணாப் முகர்ஜி, 3 நாள் அரசு முறைப் பயணமாக நேற்று முன்தினம் நேபாளம் சென்றார். தலைநகர் காத்மண்டில் உள்ள சர்வதேச விமான நிலையத்தில் அவரை, நேபாள ஜனாதிபதி வித்யா தேவி பண்டாரி வரவேற்றார்.

பின்னர், ஜனாதிபதி மாளிகையில் இருவரும் சந்தித்து ஆலோசனை நடத்தினர்.

அப்போது, நேபாளத்தில் நாடாளுமன்றம் மூலம் புதிய அரசமைப்புச் சட்டம் கொண்டு வந்ததற்கு வித்யா தேவிக்கும், நேபாள மக்களுக்கும் பிரணாப் முகர்ஜி வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அதைத் தொடர்ந்து, நேபாள துணை ஜனாதிபதி நானா பகதூர் புன்னையும் பிரணாப் முகர்ஜி சந்தித்துப் பேசினார்.

மாலையில், பிரணாப் முகர்ஜிக்கு நேபாள அரசு சார்பில் சிறப்பு விருந்து அளிக்கப்பட்டது. அந்த விருந்தில் அவர் பேசுகையில், இந்தப் பிராந்தியத்தில் அமைதியான சூழலுக்கும், பாதுகாப்புக்கும் முக்கியத்துவம் அளிப்பதே 21ஆம் நூற்றாண்டில் இந்தியாவுக்கும், நேபாளத்துக்கும் இருக்கும் பொதுவான சவாலாகும்.

உலகின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் மிகப்பெரிய அச்சுறுத்தலாக பயங்கரவாதம் உள்ளது. அதை ஒழிப்பதற்கு சர்வதேச நாடுகள் ஒன்றிணைந்து போராட வேண்டியது அவசியமாகும் என்றார்.

அதன் பின்னர் நேபாள பிரதமர் புஷ்பா கமால் டஹாலையும் பிரணாப் முகர்ஜி சந்தித்துப் பேசினார். இந்தியக் குடியரசுத் தலைவர் ஒருவர், 18 ஆண்டுகளுக்குப் பிறகு நேபாளம் செல்வது இதுவே முதல் முறையாகும். பிரணாபின் நேபாள வருகையையொட்டி, நேற்று முன்தினம் அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (இ-7-10)

# சவுதி இளவரசருக்கு சாட்டையால் அடித்து தண்டனை நிறைவேற்றம்

## சிறையிலும் அடைப்பு



(றியால்)

சவுதி அரேபிய இளவரசர் ஒருவருக்கு சாட்டையால் அடித்து தண்டனை நிறைவேற்றப்பட்டதுடன், அவர் பின்னர் சிறையில் அடைக்கப்பட்டதாக செய்தி வெளியாகியுள்ளது.


இது தொடர்பில் உள்நாட்டு பத்திரிகையொன்று நேற்று முன்தினம் வெளியிட்டுள்ள செய்தியில், பெயர் வெளியிடப்படாத சவுதி அரச குடும்பத்தின் இளவரசர் மற்றும் ஏனைய கைதிகள் சிலருக்கு கடந்த திங்கட் கிழமை செங்கடல் நகரமான ஜெட்டாவில் வைத்து சாட்டையால் அடித்து தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயினும் இளவரசருக்கு எத்தனை சாட்டை அடி தண்டனையாக வழங்கப்பட்டது என்பது தொடர்பான தகவல் அந்த செய்தியில் வெளியிடப்படவில்லை.

இதேவேளை கடந்த மாதம் கொலைக் குற்றம் நிரூபிக்கப்பட்ட சவுதி இளவரசர் ஒருவருக்கு தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது. சவுதியில் அரச குடும்பத்தவர்களுக்கு பாரபட்சம் காட்டாமல் தண்டனை வழங்கும் நடைமுறை, நாட்டிற்குள் சட்டம் ஒழுங்கு நிலைநாட்டப்படுகின்றது என்பதை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. (இ-7)

# ட்ரம்ப் ஜனாதிபதியானால் உலகத்துக்கே ஆபத்து

## ஜனாதிபதி ஒபாமா தெரிவிப்பு



(வோஷிங்டன்)

டொனால்டு டிரம்ப் ஜனாதிபதியானால் இந்த நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே அச்சுறுத்தலாக இருப்பார் என்று ஜனாதிபதி பராக் ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிடும் ஹிலாரி கிளின்டனை ஆதரித்து ஜனாதிபதி ஒபாமா வட கரோலினாவில் நேற்று முன்தினம் பிரசாரம் செய்தார்.

அப்போது அவர் பேசியதாவது,

அமெரிக்க ஜனாதிபதியாக ஹிலாரி கிளின்டன் தேர்ந்து எடுக்கப்படாவிட்டால், நான் ஜனாதிபதியாக இருந்த 8 ஆண்டு காலத்தில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் எல்லாம் பின் தள்ளப்பட்டுவிடும்.

டொனால்டு ட்ரம்ப் இந்த நாட்டுக்கு மட்டுமல்ல, உலகத்துக்கே அச்சுறுத்தலாக இருப்பார். அவர் சரியான நபர் அல்ல.

சிறுபான்மை மக்களின் உரிமைகளை ட்ரம்ப் பறித்து விடுவார். அமெரிக்க இராணுவத்தின் தலைமை தளபதி பொறுப்பை ஏற்க ட்ரம்ப் தகுதி இல்லாத நபர். இவ்வாறு அவர் தெரிவித்தார். (இ-7)

# கின்னஸ் சாதனையைக் கொண்டாடிய அமெரிக்காவின் விமான சேவை

உலகிலேயே மிகவும் குறுகிய நேர விமான பறத் தல் சேவையின் 10 இலட் சம் பறத்தல்களை பூர்த்தி செய்திருக்கும் பயணியு டன் தனது குறுகிய நேர சேவை என்ற கின்னஸ் சாதனையை கொண்டாடும் அமெரிக்க விமான சேவை.



ஸ்கொட்லாந்தின் வட கிழக்குக் கரையோரத்தில் இருக்கும் ஒக்னி தீவுகளின் வெஸ்றே மற்றும் பப்பா வெஸ்றே தீவுகளுக் கிடையிலான 1.7 மைல் (2.7 கி.மீ) இடைவெளியில்உலகின் குறுந்தூர விமானம் பறத்தல் சேவையை ஒரு தொடர் கின்னஸ் சாதனையாக நடத்தி வருகிறது ஸ்கொட்லாந்தின் பிராந்திய போகன் விமான சேவை. வழமையாகவே இரண்டு நிமிட நேரம் பிடிக்கும் இப் பறத்தல்கள் சாதகமான சூழ்நிலைகளில் 47 செக்கன் பிடிக்கிறது. எட்டு இருக்கைகளையே கொண்ட இந்த பிரிட்டன் நோர்மன் ஜலாண்டர் விமானங்களே இந்தச் சேவையில் பயன்படுத்தப்படுகிறது. 1967 ஆம் ஆண்டில் தனது சேவையை ஆரம்பித்த இந்நிறுவனம் கடந்த திங்கட்கிழமை தனது 10 இலட்சம் பறத்தல்களை பூர்த்தி செய்திருக்கிறது. ஆன் றெண்டல் என்பவருக்கு பூச்செண்டு கொடுத்து கௌரவப்படுத்தியது.

உலகிலேயேமுதற்போன்ற ஒரு குறுஞ்சேவையாக நடைபெற்றுவரும் இந்தச் சேவையை ஆசிரியர்கள், வைத்தியர்கள், பொலிஸார் மற்றும் பாடசாலை மாணவர் கள் போன்றவர்களே தமது நாளாந்த பயணங்களுக்காக மிகவும் எளிதாக கவர்ச்சிகரமானதும் சந் தோசமானதாகவும் பயன்படுத்தி வருவதாக அதன் இயக்குநர் ஜொனாதன் கிங்கில்ஸ் கூறுகிறார்.

# கிளர்ச்சியாளர்கள் இடையே மோதல்

(அலெப்போ)

சிரியாவின் அலெப்போ நகரில் இரண்டு கிளர்ச்சிக் குழுக்களுக்கு இடையே ஏற்பட்ட மோதலில் 25 கிளர்ச்சியாளர்கள் கொல்லப்பட்டதோடு, காயங்களுக்கும் இலக்காகியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் நேற்று முன்தினம் புதன்கிழமை பிரித்தானியாவை மையமாகக் கொண்டு இயங்கும் சிரிய மனித உரிமைகள் கண்காணிப்பகம் விடுத்துள்ள அறிக்கையிலேயே, இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில், தீவிரவாதிகளின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட அலெப்போவின் கிழக்கு பகுதியில் Fastaqim ஒன்றிய கிளர்ச்சிக் குழு மற்றும் Nour al-Dinal-Zenki Movement கிளர்ச்சிக்குழுவுக்கும் இடையிலேயே மோதல் ஏற்பட்டதாகக் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# முஸ்லிம்களை அரேபியாவுக்கு விரட்ட வேண்டும்; பொதுபலசேனா அமைப்பு மீண்டும் எச்சரிக்கை

## சிங்களவர்களையும் தூண்டிவிடுகிறது

ஷரியாச் சட்டம் தொடர்பாகப் பேசும் முஸ்லிம்களை சவுதி அரேபியாவுக்கு அனுப்ப வேண்டும் என்று பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்துள்ளார். கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்து தெரிவித்த அவர்.

எதிர்வரும் சில தினங்களில் ஷரியா சட்டம் தொடர்பில் போராட்டம் ஒன்றைக் தௌஃபிக் ஜமாத் என்ற அமைப்பு முன்னெடுக்கவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. எனினும், இதற்கு எதிராக நாட்டில் உள்ள சிங்கள இளைஞர்கள் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும். முஸ்லிம்கள் ஷரியாச் சட்டம் தொடர்பாகப் பேச வேண்டுமானால் சவுதி அரேபியாவுக்குச் செல்லுங்கள். ஷரியாச் சட்டம் பற்றி இங்கு பேசவேண்டாம். இந்த நாட்டில் பைத்திய சட்டம் உள்ளது



போல தெரிகின்றது. பொலிஸார் வடக்கில் அடிவாங்குகின்றனர். ஆனால் சிங்கள இளைஞர்களிடம் சட்டம் பேசுகின்றனர் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7-10)

# சட்டத்தை தங்களுக்கு ஏற்றவகையில் நல்லாட்சி தரப்பினர் வளைக்கின்றனர்

## மகிந்த ராஜபக்ஷ குற்றச்சாட்டு

(கொழும்பு)

**நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் சட்டத்தை தங்களுக்கு ஏற்ற வகையில் வளைத்துக் கொள்வதாக குற்றம் சாட்டியுள்ள முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, மத்திய வங்கியில் கொள்ளையிட்ட பிரிவினர் இன்னும் சுதந்திரமாகவே திரிகின்றனர் என்றும் தெரிவித்தார்.**

(கொழும்பு)

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜி.எல். பீரிஸினால் ஆரம்பிக்கப் பட்டுள்ள ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணி ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் பேச்சு நடத்த கோரியிருப்பதாகவும் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

வடமாகாணத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக வீடுகளை நிர்மாணித்துக் கொடுப்பதற்கு அரசாங்கத்தினால் ஒதுக்கப்பட்ட பெருந் தொகை பணத்தை ராடா நிதி நிறுவனத்தின் ஊடாக மோசடி செய்த குற்றச்சாட்டில் அந்த நிறுவனத்தின் பிரதானியாக செயற்பட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் டிரான் அலஸ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

டிரான் அலஸை சந்திப்பதற்கான கொழும்பு - வெலிக்கடை சிறைச்சாலைக்கு விஜயம் செய்த முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, அங்கிருந்து திரும்பியபோது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்தார்.

"தங்களுக்கு ஏற்ற வகையில் சட்டத்தை வளைத்துக் கொள்ள முடியும். இன்று அப்படியே இடம்பெறுகின்றது. மத்திய வங்கியில் இடம்பெற்ற கொள்ளையை விடவும் இது பெரிய விடயமல்ல.



அந்த கொள்ளையை மேற்கொண்டவர்கள் இன்றும் சுதந்திரமாகவே திரிகின்றனர். எனக்குத் தெரிந்த வகையில் எமது ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் பேச்சு நடத்த வேண்டுகோள் விடுத்துள்ளனர். ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் இணைந்து செயற்பட அவர்கள் விருப்பம் தெரிவிக்கும் பட்சத்தில் அவர்களுடன் இணைந்து செயற்பட நாங்களும் தயார். கட்சியை ஆரம்பிக்கவும் அதில் தவிசாளராக இருக்கவும் உரிமை உள்ளது.

அவ்வாறே எனக்கும் கட்சியை ஆரம்பிக்க முடியும். ஆனாலும் நான் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர்தானே என்றார். (இ-7-10)

# குற்றவியல் தவறொன்றின் பொறுப்பை ஏற்கும் வயதெல்லை உயரும்-ராஜித

குற்றவியல் தவறொன்றின் பொறுப்பை ஏற்கும் ஆகக் குறைந்த வயதெல்லையை உயர்த்துவது போன்ற சில அடிப்படை அம்சங்கள் சிலவற்றில் மாற்றங்களை ஏற்படுத்த, அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக, அமைச்சரவையின் பேச்சாளரும் சுகாதார அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

"12 வயதுக்கு கீழ்ப்பட்ட சிறுவரொருவரால் குற்றமொன்று புரியப்பட்டால், அதற்குத் தண்டனை வழங்கப்படக் கூடாது என்றும் 12 வயதுக்கும் 14 வயதுக்கும் இடைப்பட்ட சிறுவர்கள், குற்றச்செயல்களைப் புரியக்கூடிய கடினமான மனநிலையைக் கொண்டிருந்தால், அது தொடர்பில் நீதவான் அவதானித்திருக்கும் பட்சத்தில் தண்டனை வழங்கும் வகையிலான உறுப்புரைகளை உள்ளடக்கியதாகத் தயாரிக்கப்பட்டுள்ள தண்டனைச் சட்டக் கோவைச் திருத்தச் சட்டமூலத்தை, அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும் பின்னர் நாடாளுமன்ற அங்கீகாரத்துக்காக முன்வைப்பதற்கும் அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்தது" என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (இ-7-10)



## இன்று ஒரு தகவல்

# சிந்திக்க அவகாசம்

எடுத்தோம் கவிழ்த்தோம் என்று சிலர் பட்பட்டென்று பேசிவிடுகிறார்கள். இயந்திரத் துப்பாக்கியாய் வெடிக்கிறார்கள்.

சிந்திக்காமல் எதையும் ஒரு நொடியில் பேசி விடுகிறவர்களின் கதி பரிதாபகரமானது. நொடிப் பொழுதை மிச்சம் பிடிக்கிறோம் என்று பேசியவர்கள் பிறகு அதற்காக மணிக் கணக்கில் நாள் கணக்கில் வருந்துகிறார்கள்.

சட்டென்று ஒருவர் ஐந்நூறு ரூபாய் கடனாகத் தாருங்கள் என்று கேட்கிறார் என்று வைத்துக் கொள்வோம். நமக்கு ஒன்றும் விளங்காது. உடனே ஒரு முடிவுக்கும் வர முடியாது. அதை அவர் திருப்பித் தருவாரா, நட்பை இப்படித் தவறாகப் பயன்படுத்திக் கொள்கிறாரே இத்தகைய ஒரு தொகையைக் கொடுத்துவிட்டால் நாம் அடுத்த செலவை எப்படிச் சமாளிப்பது என்றெல்லாம் சிந்திக்க நமக்குச் சிறிது அவகாசம் தேவை. நாமே உடனே பதில் சொல்லி ஆக வேண்டும் என அவர் எதிர்பார்க்கிறார். நாம் அவசரப்பட்டுச் சரி என்றாலோ பணம் போய்விடும். நாம் அவசரப்பட்டு மறுத்து விட்டாலோ அவர் வருந்துவார். சமயங்களில் நல்லுறவு கெட்டுப் போகும். யோசித்து விட்டுக் கொடுத்தாலோ உடனேயா கொடுத்தார்? ரொம்பவும் தயங்கி விட்டு அப்புறம் தான் கொடுத்தார் என்று அவர் வெளியில் போய் விமர்சனம் செய்வார். கொடுத்தும் புண்ணியம் இல்லை.

நாம் எதிர்பாராத கேள்வி , நம்மை மடக்கும்; கேள்வி, இக்கட்டான கேள்வி ஆகிய நேரங்களில் நாம் திணறித்தான் போய் விடுகிறோம். இத்தகைய சூழ்நிலைகளைச் சமாளிக்க ஒரு வழி இருக்கிறது.

அது உரையாடலை இலேசாக வளர்ப்பது. மேற்கண்ட பாணியில் ஒருவர் கடன் கேட்டால் சும்மா ஜோக்கடிக்காதீங்க , நிஜமாவா கேட்கிறீங்க ? நீங்க எல்லோருக்கும் உதவநினைக்கிறவரு எங்கிட்டப்போயி.. என்று உரையாடலை வளர்க்க வேண்டும். அப்படி வளர்க்கும் நேரத்தில் நம் சூழ் நிலை அவரது நாணயம், கொடுப்பதா வேண்டாமா என்பது பற்றியெல்லாம் சிந்திக்கத் தொடங்கிவிடலாம். இப்படிச் செய்தால் நீங்கள் எடுக்கும் முடிவு பெரும் பகுதி சரியானதாக இருக்கும்.

அப்படியா சொல்றீங்க? அதாவது சார் என்னன்னு சொல்லிக் கேட்டா ஏன் அப்படீன்னு சொல்லிக் கேட்டீங்கன்னா என்கிற பாணியிலும் தொடங்கி, எதிர்பாராத கேள்விகளையும் நம்மால் சமாளிக்க முடியும்.

இப்படிப் பேசும் போது ஒரு சௌகரியம். பதிலில் சற்று பண்பு கலந்திருக்கும். பதில் நெருப்புத் துண்டங்களாக இராது. முடியாது என்று சொல்வதை, மேலும் சில வார்த்தைகளைக் கலந்து சொல்லும் போது பதிலில் வீரியம் குறைந்து இளகுகிறது. எதிராளியின் மனம் புண்படுவதில்லை.

அவர்கள் விரும்பாத பதிலை நீங்கள் சொல்ல நேர்ந்தாலும் பாவம், நம் மனம் புண்படக் கூடாது என்பதற்காக இப்படித் தயங்கித் தயங்கி சொல்லுகிறார் என்பதாகப் பிறர் எடுத்துக் கொள்வார்கள். இது நமக்கு மிகவும் நல்லது. மனித மனம் கணனியை விட வேகமானது. ஆனால் அதற்குக் கூடச் சற்று அவகாசம் தந்தால் நிலைமைகளை அருமையாகச் சமாளிக்கும். அந்த அவகாசத்தைத் தராததால் தான் பலர் அவதிப்படுகிறார்கள்.

**லேனாதமிழ்வாணன்**

வலம்புரி கல்விப்பிரிவு

# க.பொ.த. (சா/த) பரீட்சை- 2016
# மாதிரி வினாத்தாள்

கணிதம்
பகுதி-II

நேரம்:-
3 மணித்தியாலம்

- பகுதி A இலிருந்து ஐந்து வினாக்களையும் பகுதி B இலிருந்து ஐந்து வினாக்களையும் தெரிந்தெடுத்துப் பத்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- ஒவ்வொரு வினாவுக்கும் 10 புள்ளிகள் வீதம் வழங்கப்படும்.
- அடியின் ஆரை r ஆகவும் உயரம் h ஆகவும் உள்ள ஒரு செவ்வட்டக் கூம்பின் கனவளவு $1/3\pi r^2 h$ ஆகும்.

## பகுதி A

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

1) A , B என்னும் இரு நிதி நிறுவகங்கள் பணத்தைக் கடனாகக் கொடுக்கும் இரு விதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**நிறுவகம் A**
- ஆண்டுதோறும் 18% வட்டி அறவிடப்படுகின்றது.
- குறையும் மீதி முறைக்கு வட்டி கணிக்கப்படுகின்றது.
- கடனையும் வட்டியையும் சம மாதத் தவணைத்தொகைகளாகச் செலுத்த வேண்டும்.

**நிறுவகம் B**
- ஆண்டுதோறும் 10% வட்டி அறவிடப்படுகின்ற அதே வேளை கூட்டு வட்டி முறைக்கு வட்டி கணிக்கப்படுகின்றது.
- கடனையும் வட்டியையும் குறித்த காலத்தின் இறுதியில் ஒன்றாகச் செலுத்த வேண்டும்.

2) சமந்த ரூ. 300 000 கடனைப் பெறவேண்டி உள்ளது. அவர் அக்கடனை வட்டியுடன் இரு ஆண்டுகளில் செலுத்தி முடிப்பதற்கு எதிர்பார்க்கின்றார். நிறுவகம் A இலிருந்து கடனைப் பெறும்போது கூடுதலான வட்டியைச் செலுத்த வேண்டுமெனச் சமந்தவின் ஒரு நண்பர் கூறுகின்றார். இரு நிறுவகங்களிலிருந்தும் கடனைப் பெறும்போது செலுத்த வேண்டிய மொத்த வட்டியைக் கண்டு, நண்பனின் கூற்று உண்மை / பொய் எனக் காரணங்களுடன் விளக்குக.

சார்பு $y = (x+1)(x-3)$ இல் x இன் சில பெறுமானங்களை ஒத்த y இன் பெறுமானம் இடம்பெறும் ஓர் அட்டவணை கீழே காணப்படுகின்றது.

| $x$ | −1 | 0 | 1 | 2 | 3 | 4 | 5 |
|---|---|---|---|---|---|---|---|
| $y$ | 0 | −3 | −4 | −3 | 0 | .... | 12 |

(a) (i) $x = 4$ ஆக இருக்கும்போது y இன் பெறுமானத்தைக் காண்க.
(ii) ஓர் உகந்த அளவிடையைத் தெரிந்தெடுத்து, மேற்குறித்த சார்பின் வரைபை வரைக.
(b) வரைபைப் பயன்படுத்தி,
(i) சார்பின் இழிவுப் பெறுமானத்தைக் காண்க.
(ii) ஆயிடை $-1 < x < 1$ இல் சார்பு நேர் அல்லது மறை எனவும் குறையும் அல்லது கூடும் எனவும் குறிப்பிட்டு அதன் நடத்தையை விளக்குக.
(c) ஓர் உகந்த நேர்கோட்டு வரைபை மேற்குறித்த ஆள்கூற்றுத் தளத்தின் மீது வரைவதன் மூலம் $\sqrt{3}$ இன் பெறுமானத்தைக் கிட்டிய முதல் தசமதானத்திற்குப் பெறுக.

3) ஒரு அதிவேக வீதி அமைக்கப்படும் வேலை அமைவிடத்தில் ஒரு நாளில் ஒரே வகையான 40 வாகனங்களில் மண் ஏற்றிவரப்பட்ட தடவைகளின் எண்ணிக்கை இடம்பெறும் ஒரு மீடிறன் பரம்பல் கீழே தரப்பட்டுள்ளது.


| வகுப்பாயிடை (பயணத் தடவை) | 4 -8 | 9 - 13 | 14 - 18 | 19 - 23 | 24 - 28 | 29 - 33 | 34 - 38 |
|---|---|---|---|---|---|---|---|
| மீடிறன் (வாகன எண்ணிக்கை) | 2 | 3 | 5 | 8 | 15 | 5 | 2 |

(i) 33 இலும் கூடிய தடவைகளில் மண்ணை ஏற்றிவந்த வாகன எண்ணிக்கை யாது?
(ii) ஒரு வாகனம் ஒரு நாளுக்கு மண்ணை ஏற்றிவந்த தடவைகளின் இடை எண்ணிக்கையைக் கிட்டிய முழு எண்ணிற்குக் காண்க.
(iii) ஒரு வாகனத்தில் 4 கியூப் மண் அடங்கலாம். ஒரு கியூப் மண்ணின் விலை ரூ. 2000 எனின், ஒரு நாளில் ஒரு வாகனத்தில் ஏற்றிவரப்படும் மண்ணுக்காகச் செலவிடப்படுவதாக எதிர்பார்க்கப்படும் பணம் எவ்வளவு?
(iv) வீதியின் 100 m ஐ அமைப்பதற்கு மேற்குறித்த எல்லா வாகனங்களையும் ஈடுபடுத்தி 2 நாட்களுக்குமண்ணை ஏற்றி வருதல் அவசியம் ஆகையால் அம்மண்ணுக்காகச் செலவிடப்படுவதாக எதிர்பார்க்கப்படும் பணம் 14 மில்லியன் ரூபாவுக்கு மேற்படுமெனப் பொறியியலாளர் கூறுகின்றார். அவருடைய கூற்று உண்மையாக இருக்கலாம் என்பதற்குக் காரணங்களைக் காட்டுக.

4) வெள்ளம் காரணமாக இடம்பெயர்ந்த அகதிகள் இருக்கும் ஒரு முகாமிற்கு அரசாங்கம் ஒரு நாளுக்கு ஒரு பிள்ளைக்கு ரூ. 100 , ஒரு வயது வந்தவருக்கு ரூ. 150 என்றவாறு நிதியுதவி அளிக்கின்றது. ஒரு நாளில் அக்குழுவுக்கு விநியோகிப்பதற்கு ஒரு பழம் 6 சம துண்டுகளாக வெட்டப்பட்ட 31 அப்பிள் பழங்களும் ஒரு பழம் 4 சம துண்டுகளாக வெட்டப்பட்ட 29 கொய்யாப் பழங்களும் மாணவர் குழு ஒன்றினால் கொண்டு வரப்பட்டன. அப்பிள் பழத் துண்டுகள் ஒரு பிள்ளைக்கு 3 வீதமும் ஒரு வயது வந்தவருக்கு 2 வீதமும் கொய்யாப்பழத் துண்டுகள் ஒரு பிள்ளைக்கு 2 வீதமும் ஒரு வயது வந்தவருக்கு 1 வீதமும் விநி யோகிக்கப்பட்டபோது இரு கொய்யாப் பழத் துண்டுகள் மாத்திரம் எஞ்சியிருந்தன. அகதிக் குழுவில் இருந்த பிள்ளைகளின் எண்ணிக்கையையும் வயது வந்தவர்களின் எண்ணி க்கையையும் தனித்தனியாகக் கண்டு, அதிலிருந்து, ஒரு வாரத்திற்காக அவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படவுள்ள மொத்தப் பணத்தைக் காண்க.

5) ஒரு செங்கோண முக்கோணியின் செம்பக்கத்தின் நீளம் அதன் சிறிய பக்கத்தின் நீளத்தின் இரு மடங்கிலும் பார்க்க 1 cm இனால் குறைவாகும்.
(i) சிறிய பக்கம் x cm எனின், செம்பக்கத்தின் நீளத்தை x இன் சார்பில் காண்க.
(ii) எஞ்சிய பக்கத்தின் நீளம் சிறிய பக்கத்திலும் பார்க்க 3 cm இனால் கூடியதெனின், பைதகரசின் தேற்றத்தைக் கொண்டு பக்கங்களின் நீளங்களின்வர்க்கங்களுக்கிடையே உள்ள தொடர்பை எழுதுக.
(iii) மேற்குறித்த தொடர்பைச் சுருக்குவதன் மூலம் சமன்பாடு $x^2 - 5x = 4$ கிடைக்குமெனக் காட்டுக.
(iv) வர்க்க நிறைவாக்கலினால் அல்லது சூத்திரத்தைப் பயன்படுத்துவதனால் சமன்பாட்டைத் தீர்த்துச் செம்பக்கத்தின் நீளத்தைக் காண்க. ($\sqrt{41} = 6.4$ எனக் கொள்க)

6) உருவில் காணப்படுகின்றவாறு கமல் இடம் A இலிருந் பட்டு வடக்கு நோக்கி 12 மீற்றர் சென்று இடம் B இற்கு வருகின்றார். அவர் Bஇலிருந்து 040° திசைகோளில் 20மீற்றர் சென்று இடம் C இற்கும் அவ்விடத்திலிருந்து25 மீற்றர் கிழக்கு நோக்கிச் சென்று இடம் D இற்கும்வருகின்றார்.




(i) மேற்குறித்த உருவைப் பிரதிசெய்து தரப்பட்டுள்ள தகவல்களை அதில் சேர்க்க.
(ii) திரிகோணகணித அட்டவணைகளைப் பயன்படுத்தி தூரம் CE ஐக் கிட்டிய மீற்றருக்குக் காண்க.
(iii) தூரம் BE கிட்டிய மீற்றருக்கு மட்டந்தட்டப்படும்போது 15 m ஆகும். அதற்கேற்ப $E\hat{A}D$ ஐயும் தூரம் AD ஐயும் கணிக்க.


## பகுதி B

ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

7) ஒரு குறித்த தொலைக்காட்சி அலைவரிசையில் நடைபெறும் "அதிர்ஷ்டசாலி" என்னும் நிகழ்ச்சியில் பங்குபற்றும் ஒவ்வொரு போட்டியாளரும் 15 வினாக்களுக்குச் சரியாக விடையளிப்பதன் மூலம் அதில் வெற்றிபெறலாம்.சரியாக விடையளிக்கும்போது முதல் வினாவுக்கு ரூ. 50 , இரண்டாம் வினாவுக்கு ரூ. 75, மூன்றாம் வினாவுக்கு ரூ. 100 என்றவாறு கிடைக்கும் பரிசுப் பணம் ஒரு கூட்டல் விருத்தியில் இருக்குமெனின்,
(i) 12 ஆம் வினாவுக்காக ஒதுக்கப்பட்டுள்ள பரிசுப் பணத்தைக் காண்க.
(ii) அடுத்துவரும் 2 வினாக்களுக்கு ரூ. 425 பரிசுப்பணமாக ஒதுக்கப்பட்டிருக்குமெனின், அவ்வினாக்களின் எண்கள் யாவை?
(iii) போட்டியாளர் ஒரு வினாவுக்குப் பிழையான விடையை அளிக்கும்போது போட்டியிலிருந்து விலகநேரிடும் அதேவேளை அப்போது அவருக்குரிய பரிசுப் பணம் அதுவரைக்கும் அவர் பெற்ற பணத்தில் அரைவாசியாகும். ஒரு போட்டியாளர் ஒரு குறித்த வினாவுக்குச் சரியாக விடையளிக்காமையால் ரூ. 1300 பரிசுப் பணத்தைப் பெற்றுக்கொண்டு போட்டியிலிருந்து விலக நேரிட்டால், அவருக்குக் கிடைத்த வினாக்களின் எண்ணிக்கை 14 எனக் காட்டுக.


8) cm/mm அளவிடை உள்ள ஒரு நேர் விளிம்பையும் கவராயத்தையும் மாத்திரம் பயன்படுத்தி, அமைப்புக் கோடுகளைத் தெளிவாகக் காட்டி பின்வருவனவற்றை அமைக்க.
(i) 8 cm நீளமுள்ள ஒரு கோட்டுத் துண்டம் PQ ஐ அமைக்க.
(ii) $Q\hat{P}R = 45°$, PR = QR ஆக இருக்குமாறு புள்ளி R ஐக் குறித்து முக்கோணி $P\hat{Q}R$ ஐப் பூரணப்படுத்துக.
(iii) P, Q, R ஆகிய புள்ளிகளினூடாகச் செல்லும் வட்டத்தை அமைத்து அதன் மையத்தை O எனப் பெயரிடுக.
(iv) PR = RS ஆக இருக்குமாறு கோடு PR ஐ நீட்டி புள்ளி S ஐக் குறிக்க.
(v) SQ = ST ஆக இருக்குமாறு வட்டத்தின் மீது புள்ளி T ஐக் குறித்து, ST, SQ ஆகியன வட்டத்திற்கு வரையப்பட்டுள்ள இரு தொடலிகளெனக் காட்டுக.

9)




மேற்குறித்த உருவில் செங்கோண முக்கோணக் குறுக்குவெட்டு உள்ள ஒரு திண்ம உலோகச் செவ்வரியமும் ஒரு திண்மச் செவ்வட்டக் கூம்பும் உள்ளன. அவற்றின் அளவீடுகள் ஒரே அலகில் உருவில் காட்டப்பட்டுள்ளன.அரியத்தை உருக்கி உலோகம் வீணாகாதவாறு அடியின் ஆரை 2r ஆகவும் உயரம் h ஆகவும் உள்ள கூம்பு செய்யப்பட்டுள்ளது. கூம்பின் உயரம் 15 cm ஆக இருக்கும்போது $r^2 = 6a^3 / 5\pi$ எனக் காட்டி, $\pi = 3.14$ எனக் கொண்டு, a = 4.55 cm ஆக இருக்கும்போது மடக்கை அட்டவணைகளைப் பயன்படுத்தி $r^2$ ஐக் கண்டு அதனைக் கொண்டு கூம்பின் ஆரையைக் காண்க.

10) வள்ளுவர் நகரில் 120 வீடுகள் உள்ளன. அவற்றில் 113 வீடுகளில் தொலைக்காட்சிப் பொறிகள் உள்ளன.அவற்றில் 78 இல் வானொலிப் பொறிகள் இல்லை. வானொலிப் பொறி உள்ள ஒவ்வொரு வீட்டிலும் ஒருதொலைக்காட்சிப் பொறியும் உள்ளது.




(i) A,B என்னும் தொடைகளை இனங்கண்டு, தரப்பட்டுள்ள தரவுகளுக்கேற்ப வென் வரிப்படத்தைப் பூரணப்படுத்துக.
(ii) தொலைக்காட்சிப் பொறி, வானொலிப் பொறி ஆகிய இரண்டும் உள்ள வீடுகளின் எண்ணிக்கை யாது?
(iii) வள்ளுவர் நகரில் எழுமாற்றாகத் தெரிந்தெடுத்த ஒரு வீடு வானொலிப் பொறி இராத வீடாக இருப்பதற்கான நிகழ்தகவு யாது?


(16 ஆம் பக்கம் பார்க்க)

(15 ஆம் பக்க தொடர்ச்சி)

(iv) வள்ளுவர் நகரில் எந்தவொரு வீட்டிலும் கணனிகள் இராத அதேவேளை ஒரு தனியார் நிறுவகத்தினால் தெரிந்தெடுக்கப்பட்ட 25 வீடுகளுக்குக் கணனிகளை விநியோகிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதற்காகத் தொலைக்காட்சிப் பொறி இல்லாத 4 வீடுகளையும் வானொலிப்பொறி உள்ள 9 வீடுகளையும் தெரிந்தெடுத்தால் அப்போது கணனி உள்ள வீட்டுத் தொடை C எனக் கொண்டு அத்தகவல்களும் இடம்பெறுமாறு வென் வரிப்படத்தை மறுபடியும் வரைக.

(v) இப்போது வானொலிப் பொறி இல்லாத ஆனால் தொலைக்காட்சிப் பொறியும் கணனியும் உள்ள வீட்டுத் தொடையைக் காட்டும் பிரதேசத்தை வென் வரிப்படத்தில் நிழற்றுக.

11) உருவில் காணப்படும் O ஐ மையமாகக் கொண்ட வட்டத்தில் PQ , QR என்னும் இரு நாண்கள் உள்ளன. நீட்டப்பட்ட PO ஆனது RQ ஐ T இல் இருகூறிடுகின்றது. வட்டத்திற்கு X இல் வரையப்பட்டுள்ள தொடலி XY ஆக இருக்கும் அதேவேளை RQ ஆனது Z இற்கு நீட்டப்பட்டுள்ளது. $P\hat{O}X = 40°$.




(i) காரணங்களைக் காட்டி $P\hat{Q}X$ இன் பெறுமானத்தை எழுதுக.

(ii) OTYX ஒரு வட்ட நாற்பக்கலெனக் காட்டுக.


(iii) $X\hat{Y}Z$ இன் பெறுமானத்தைக் காண்க.

(iv) O, T, Y, X ஆகிய புள்ளியினூடாகச் செல்லும் வட்டத்தின் ஒரு விட்டத்தைப் பெயரிட்டு, அதற்கு ஏதுவான தேற்றத்தை எழுதுக.

12) உருவில் உள்ள நாற்பக்கல் ABCD இன் பக்கம் CD மீது E, F என்னும் புள்ளிகள் CE = EF = FD ஆகுமாறு உள்ளன. நீட்டப்பட்ட AF, BE ஆகிய கோடுகள் G இல் சந்திக்கின்றன.

AF = FG , BE = EG எனின். இத்தகவல்கள் இடம்பெறும் ஒரு வரிப்படத்தை வரைந்து BCGF, ABCF ஆகியன இணைகரங்கள் எனவும் அவை பரப்பளவில் சமம் எனவும் காட்டுக.

▲▲▲




## க.பொ.த.(சா/தரம்) கணிதம் பகுதி -I மாதிரி வினாத்தாளுக்குரிய விடைகள்

1) $8^2 = 64$

2) $x = 50°$
$x + 90° + 40° = 180°$ அல்லது $x + 40° = 90°$

3) ரூ. 64 800
ரூ. 540 000 × 2/100× 6

4) $(x + 4)(x + 1)$
$x^2 + 4x + x + 4$

5) இரு சம பக்கங்கள் $WY, YZ$ ஆகும்.
$Y\hat{W}Z = 20°$

6) $L' \cap M$

7) 60°

8) 40
1/5= 8/n(S)

9) $Q_3 \quad Q_1 = 6$
$Q_1 = 3 \quad Q_3 = 9$

10) $\Delta PTS, \Delta QTR$
கோ.கோ.ப. சந்தர்ப்பம்

11) $x^2(x + 1)$

12) $r = 7$ cm
$2 \times 22/7 \times r = 44$

13) $x + y = 90°$
$2x + 2y = 180°$

14) 2/3x
3/3x-1/3x

15) 9

16) $A\hat{D}B = 40°$
$O\hat{A}D = 40°$ அல்லது $A\hat{C}B = 40°$


17) $B = \begin{pmatrix} -5 & 4 \\ 2 & 1 \end{pmatrix}_{2\times 2}$
$\begin{pmatrix} 6 & -4 \\ -2 & 0 \end{pmatrix}_{2\times 2} + B = \begin{pmatrix} 1 & 0 \\ 0 & 1 \end{pmatrix}_{2\times 2}$

18) $y = 70°$
$DE \parallel CB$ எனக் காட்டல் (நடுப் புள்ளித் தேற்றம்)

19) $y = -x + 3$
$m = -1$ அல்லது $c = 3$

20) $x = 120°$
$x + 60° = 180°$ (ஒரு வட்ட நாற்பக்கலின் எதிர்க் கோணங்கள் மிகைநிரப்புகின்றன.)


21)




22) $r = 2$
$24 = 3 \times r^{4-1}$

23) 9
வேலைக்குத் தேவையான மனித நாட்களின் எண்ணிக்கை = 8 × 9 = 72

24)




BC இற்குச் சமாந்தரமாகக் கோட்டினை வரைதல்
A இலிருந்து 3 cm ஐக் குறித்தல்.
D, E ஆகிய புள்ளிகளைக் குறித்தல்.

25) 60 $kmh^{-1}$
360 km/6 h அல்லது 240 km/ 4 h
அல்லது 120 km /2 h

கணிதம் I (பகுதிB)

1) (i) 1/8+ 2/3
= 19/ 24

(ii) எஞ்சிய கடிதங்கள் பின்னமாக = 5/ 24
கடுகதிக் கடிதங்கள் பின்னமாக = 5/24 × 1/5
= 1/ 24

(iii) வெளிநாட்டுக் கடிதங்கள் பின்னமாக = 4/ 24
கடிதங்களில் 4/ 24 = 520
கடிதங்களின் மொத்த எண்ணிக்கை = 520/ 4x24 = 3120
பதிவுக் கடிதங்கள் = 3120 × 1/8
= 390


(iv) சாதாரண கடிதங்கள் : கடுகதிக் கடிதங்கள்
=2/ 3: 1 / 24 = 16 : 1

2) (i) நீளம் $BE = 1/8 \times 2\pi r$
= 1 / 8 × 2 × 22/7 × 14
= 11 m
ABED இன் சுற்றளவு = (11 + 15 + 10 + 11) m
= 47 m

(ii) மணல் பரப்பப்பட்டுள்ள பகுதியின் பரப்பளவு
$= 1/8 \pi r^2$
= 1/8 × 22/7× 14 × 14 = 77 $m^2$

(iii) மணல் இல்லாத பகுதியின் பரப்பளவு =
$= \frac{(25 + 15) \times 10}{2} - 77$
= 200 – 77
= 123 $m^2$

(iv)




முக்கோணியை வரைதல்

4.1 m ஐக் குறித்தல்

3) (a)
(i)ஓர் ஆண்டிற்கு வரிப்பணம் = 1500 × 4
= ரூ. 6000
ஆண்டு வரிப்பணச் சத $= \frac{6000}{75000} \times 100\%$
= 8%

(ii) கழிவு = 6000 × 10/ 100
அனுகூலம் = ரூ. 600


(b)
(i) பங்கு எண்ணிக்கை = 270000/ 9
= 30 000
வருமானம் = ரூ. 30 000 × 2
= ரூ. 60 000

(ii)ஒரு பங்கின் இலாபம் = ரூ. 1.50
மூலதன இலாபம் = ரூ. 1.50 × 30 000
= ரூ. 45 000

4) (i)

| | |
|---|---|
| 40 – 50 | 14 |
| 50 – 80 | 12 |

(ii)





வலையுருவரையத்தைப் பூரணப்படுத்தல்.

(iii) மீடிறன் பல்கோணியின் இரு முனைப் புள்ளிகளையும் குறித்தல்.
நடுப் புள்ளிகளைக் குறித்தல்.
மீடிறன் பல்கோணியைப் பூரணப்படுத்தல்.


(iv) சதவீதம் = 12/ 60 × 100%
= 20%

5) (a)
(i)




(ii)
மர வரிப்படத்தை விரிவுபடுத்தல்.
ஒரு பிள்ளை ஆணாகவும் மற்றைய பிள்ளை பெண்ணாகவும் இருப்பதற்கான நிகழ்தகவு = 4/6×2/6 + 2/6×4/6
= 16/36

(b)
(i)




நெய்யரியில் வகை குறித்தல்.

(ii) நிகழ்ச்சியை நெய்யரியில் குறித்தல்
நிகழ்தகவு = 20/25 அல்லது 4/5

(மிகுதி நாளை தொடரும்)

# கொதலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் 26வது பட்டமளிப்பு விழா ஜனாதிபதி தலைமையில்





(கொழும்பு)

ஜோன் கொதலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தின் 26ஆவது வருடாந்த பட்டமளிப்பு விழா ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் நேற்று முன்தினம் பிற்பகல் கொழும்பு பண்டாரநாயக சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பட்டமளிப்பு விழாவில் 708 பட்டதாரிகளும் 166 பட்டப்பின்படிப்பு பட்டதாரிகளும் பட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

நிகழ்வில் 18 பட்டதாரிகளுக்கான பட்டங்களை ஜனாதிபதி வழங்கி வைத்தார்.

2016 ஆம் ஆண்டுக்கான சிறந்த இராணுவ மாணவ படை வீரர், சிறந்த கடற்படை மாணவ படைவீரர், சிறந்த விமானப் படை மாணவ படைவீரர் ஆகியோருக்கான விருதுகளையும் ஜனாதிபதி வழங்கிவைத்தார்.

படித்த சிறந்த பண்பாடும் முன்னுதாரணமும் மிக்க ஆளுமைகளை உருவாக்கும் ஜோன் கொதலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகத்தை எதிர்காலத்தில் ஒரு சிறந்த பல்கலைக்கழகமாக மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என இந்த நிகழ்வில் உரையாற்றிய ஜனாதிபதி தெரிவித்தார்.

பட்டம் பெற்றுக்கொண்ட அனைத்து மாணவர்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொண்ட ஜனாதிபதி தேசிய சர்வதேச அறிவு மற்றும் அனுபவத்துடன் இந்த உலகை வெற்றி கொள்வதற்கு அவர்களால் முடியும் எனத் தெரிவித்தார்.

அமைச்சர்களான விஜயதாச ராஜபக்ஷ. பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா. இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன. பாதுகாப்பு பணிக்குழாம் தலைவர், முப்படைகளின் தளபதிகள். கொதலாவல பல்கலைக்கழகத்தின் வேந்தர் தயா சந்தசிறி ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர். (இ-10)

# மாணவர் பாராளுமன்ற 3 ஆவது அமர்வு இன்று

யாழ்.கொக்குவில் இந்துக் கல்லூரியின் மாணவர் பாராளுமன்ற 3 ஆவது அமர்வு நிகழ்வானது இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் பஞ்சலிங்கம் கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

இந்நிகழ்வில் சிறுவர் மற்றும் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ-7)

# சேவையில் ஈடுபட்டுள்ளோர் தொடர்பான தொகைமதிப்பு

(கொழும்பு)

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற அரச மற்றும் அரச சார்பற்ற சேவையில் ஈடுபட்டுள்ளோர் தொடர்பான தொகை மதிப்பு, எதிர்வரும் 17ஆம் திகதி வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் நடத்தப்படும் என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் கலாநிதி ஏ.ஜே. சத்தரசிங்க தெரிவித்தார்.

பொதுவாக நான்கு வருடங்களுக்கொருமுறை நடத்தப்படும் இத்தொகைமதிப்பு. இம்முறை 11ஆவது தடவையாக நடத்தப்படவுள்ளது. தகவல் சேகரிக்கும் நடவடிக்கையை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் பொருட்டு, இத்தொகைமதிப்பு, சகல அரச மற்றும் அரச சார்பற்ற சேவையில் ஈடுபட்டுள்ளோரின் பங்களிப்புடன், குறித்த தினத்தன்று. காலை 9.30 மணி முதல் முற்பகல் 11.30 மணி வரையான நேரப்பகுதியில் மேற்கொள்ளப்படுமெனத் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்துள்ளது. தொகைமதிப்பு சம்பந்தமாக இங்கு உள்ளடக்கப்பட்ட தகவல்களைத் தொகைமதிப்புத் தினத்துக்கு முன் பரிசீலித்து. இத்தொகைமதிப்பை வெற்றிகரமாக மேற்கொள்ள ஒத்துழைக்குமாறு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம். சகல அரச மற்றும் அரச சார்பற்ற சேவையில் ஈடுபட்டுள்ளோர்களிடம் கேட்டுக்கொண்டுள்ளது. (இ 7 10)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 889

Nagendram Home

**சிந்து**

காயப்படுத்தியவர்கள்
மறந்து விடலாம்,
காயப்பட்டவர்கள்
என்றும் மறப்பதில்லை
காயங்களையும்
அதன் வலிகளையும்.

**சர்மி**




**தனு**




**லிங்கா**




**றெமோ**




**தர்சி**





நீங்கள் பார்த்த ஃபேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.




# ஏமாற்றி பிழைக்க நினைத்த நரி

ஒரு அடர்ந்த காடு ஒன்று இருந்தது, அந்த காட்டுக்குள், கரடி ஒன்று குடும்பத்துடன் வாழ்ந்து வந்தது. தாய்க்கரடி தினமும் குட்டிகளை விட்டு விட்டு உணவுக்காக வெளியே அலைந்து திரிந்து, மீன், தேனடை, பழங்கள் போன்றவைகளை, குட்டிகளுக்கு கொண்டு வந்து கொடுத்து தானும் உண்டு, மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்தது.

தாய்க்கரடி இவ்வாறு தினமும் வெளியே சென்று நிறைய தின்பண்டங்களை கொண்டு வருவதை அங்கிருந்த நரி ஒன்று பார்த்து வந்தது. அந்த நரிக்கு உழைத்து சாப்பிட வேண்டும் என்ற எண்ணம் இல்லை. எப்படியாகிலும் கரடி கொண்டு வருபவைகளை கவர்ந்துகொள்ள வேண்டும் என நினைத்தது. அதற்கு என்ன வழி என யோசித்து, குட்டிகளைப் பயமுறுத்தி வைத்துக் கொண்டால், எளிதில் கரடி கொண்டு வருபவைகளை கவர்ந்து கொள்ளலாம் என முடிவு செய்து, ஒரு நாள் தாய்க்கரடி வெளியே சென்றிருந்த போது கரடிக்குட்டிகள் தங்கியிருந்த குகைக்கு வெளியே வந்து நண்பர்களே! என அழைத்தது.



சத்தம் கேட்டு எட்டிப்பார்த்த கரடிக்குட்டிகள் வெளியே நரி ஒன்று நிற்பதை பார்த்தது. அவைகள் இதுவரை நரியை பார்த்ததில்லை, ஆகவே ஆச்சரியத்துடன் அதனை உற்றுப் பார்த்து நீ யார்? என்று கேட்டது. நரி நான்தான் இந்த காட்டுக்கு மந்திரி, இங்கு உள்ள அனைவரும் எனக்கு கட்டுப்பட்டவர்கள் என்றது. கரடிக்குட்டிகள் ஆச்சரியத்துடன் எங்கள் அம்மா இதுவரை உன்னைப்பற்றி சொன்னதில்லையே என்றன. உங்கள் அம்மா அதை சொல்ல மறந்திருக்கலாம், நீங்கள் இனிமேல் உங்களிடம் எது வைத்திருந்தாலும் அதை என்னிடம் கொடுத்து விட வேண்டும், அப்படி கொடுக்க மறுத்தால் உங்களை இப்படியே என் ஆட்களை வரச் சொல்லி தூக்கிக்கொண்டு போய்விடுவேன் என பயமுறுத்தியது.

கரடிக்குட்டிகள் பயந்து விட்டன. இப்பொழுது எங்களிடம் ஒன்றுமில்லை, சாயங்காலம் வா, எங்கள் அம்மா எங்களுக்கு சாப்பிட கொண்டு வருவார்கள் அதை உனக்கு தருகிறோம் என்றது. சரி நாளை காலையில் இதே நேரத்துக்கு வருகிறேன், நீங்கள் இருவரும் உங்கள் அம்மா கொண்டு வந்து கொடுப்பவைகளை எனக்கு எடுத்து வைத்து கொடுத்து விடவேண்டும். ஜாக்கிரதை, இதை உங்கள் அம்மாவிடம் சொன்னால் அடுத்த நாளே உங்கள் இருவரையும் தூக்கிக்கொண்டு போக ஏற்பாடு செய்துவிடுவேன் என்று பயமுறுத்திவிட்டு சென்றது.

அன்று அம்மா கரடி கொண்டு வந்தவைகளை கரடிக்குட்டிகள் பதுக்கி வைத்து சாப்பிட்டுவிட்டதாக தாயிடம் பொய் சொல்லிவிட்டன.

சொன்னபடியே மறுநாள் தாய்க்கரடி சென்றவுடன் நரி வந்தது. அதனிடம் அம்மாக் கரடி கொண்டு வந்து கொடுத்தவைகளை கொடுத்து விட்டன. நரியும் அவைகளை பெற்றுக்கொண்டு தினமும் இதே மாதிரி கொடுக்க வேண்டும் என பயமுறுத்தி விட்டு சென்று விட்டது.

(தொடரும்)

## 11.2016 04 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1333 - ஆர்னோ ஆறு பெருக்கெடுத்து வெள்ளம் பரவியதில் இத்தாலியின் புளோரென்ஸ் நகரில் பெரும் சேதம் ஏற்பட்டது.
- 1576 - ஸ்பானியப் படைகள் பெல்ஜியத்தின் ஆண்ட்வேர்ப் நகரை கைப்பற்றினர். மூன்று நாட்களில் இந்நகரம் பெரிதும் சேதப்படுத்தப்பட்டது.
- 1861 - வாஷிங்டன் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டது.
- 1869 - அறிவியல் இதழ் நேச்சர் முதற் தடவையாக வெளியிடப்பட்டது.
- 1914 - பிரித்தானியாவும் பிரான்சும் துருக்கியுடன் போரை அறிவித்தன.
- 1918 - முதலாம் உலகப் போர்: இத்தாலியிடம் ஆஸ்திரியா-ஹங்கேரி அரசு சரணடைந்தது.
- 1918 - 40,000 கடற்படையினர் கீல் துறைமுகத்தைக் கைப்பற்றியதை அடுத்து ஜெர்மானியப் புரட்சி தொடங்கியது.
- 1921 - ஜப்பானியப் பிரதமர் ஹரா தக்காஷி டோக்கியோவில் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 1956 - ஒக்டோபர் 23 இல் ஆரம்பமான ஹங்கேரியப் புரட்சியை முறியடிக்க சோவியத் படைகள் ஹங்கேரியை முற்றுகையிட்டன. ஆயிரக்கணக்கான ஹங்கேரியர்கள் கொல்லப்பட்டு லட்சக்கணக்கானோர் நாட்டை விட்டு வெளியேறினர்.
- 1966 - இத்தாலியின் புளோரென்ஸ் நகரத்தின் மூன்றில் இரண்டு பகுதி வெள்ளப்பெருக்கில் அழிந்தது. 113 பேர் கொல்லப்பட்டனர். பல பெறுமதியான ஓவியங்களும் நூல்களும் அழிந்தன.
- 1967 - எம்.ஜி.ஆர். கொலை முயற்சி வழக்கு: நடிகர் எம். ஜி. ராமச்சந்திரன் கொலை முயற்சி வழக்கில் நடிகர் எம். ஆர். ராதாவுக்கு ஏழு ஆண்டுகள் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.
- 1979 - ஈரானியத் தீவிரவாதிகள் டெஹ்ரானில் அமெரிக்கத் தூதராலயத்தை முற்றுகையிட்டு 53 அமெரிக்கர்கள் உட்பட 90 பேரை பணயக்கைதிகளாகப் பிடித்தனர்.
- 1984 - நிக்கராகுவாவில் இடம்பெற்ற தேர்தல்களில் சண்டினீஸ்டா முன்னணி வெற்றி பெற்றது.
- 1995 - இஸ்ரேலியப் பிரதமர் இட்சாக் ரபீன் தீவிரவாத வலதுசாரி இஸ்ரேலியரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.
- 2004 - ஐவரிகோஸ்டில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரில் 12 பிரெஞ்சுப் படையினர் மற்றும் 3 ஐ.நா. கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் உட்பட நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டனர்.

### பிறப்புக்கள்

- 1618 - அவுரங்கசீப், முகலாயப் பேரரசர். (இ. 1707)
- 1845 - வாசுதேவ் பல்வந்த் பட்கே, இந்தியப் புரட்சியாளர் (இ. 1883)
- 1897 - ஜானகி அம்மாள், இந்திய தாவரவியலாளர் . (இ. 1984)
- 1951 - திரையன் பாசேசுக்கு, ரோமானிய அரசியல்வாதி.
- 1957 - டோனி அபோட், ஆத்திரேலிய அரசியல்வாதி, பிரதமர்.
- 1972 - தபூ, இந்திய நடிகை.

### இறப்புகள்

- 1988 - கி. வா. ஜகந்நாதன், தமிழ் இதழாளர், எழுத்தாளர். (பி. 1906)
- 1988 - ஜேம்ஸ் இரத்தினம், ஈழத்து எழுத்தாளர். (பி. 1905)
- 1994 - கு. மா. பாலசுப்பிரமணியம், திரைப்பட பாடலாசிரியர். (பி. 1920)
- 1995 - இட்சாக் ரபீன், இஸ்ரேல் பிரதமர். நோபல் பரிசு பெற்றவர். (பி. 1922)

### சிறப்பு நாள்

- பனாமா - கொடி நாள்.
- ரஷ்யா - மக்கள் ஒற்றுமை நாள்.

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | கொடிகாமம் | சுன்னாகம் | சாவச்சேரி | கிளிநொச்சி | மருதனார்மடம் |
|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 100 | 70 | 80 | 60 | 80 | 60 |
| உருளைக்கிழங்கு | 120 | 140 | 90 | 120 | 110 | 120 | 120 |
| பச்சைமிளகாய் | 60 | 80 | 45 | 70 | 70 | 100 | 60 |
| தக்காளி | 80 | 80 | 45 | 60 | 60 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 80 | 40 | 60 | 70 | 60 | 60 |
| கோவா | 80 | 80 | 55 | 80 | 80 | 80 | 80 |
| கரட் | 120 | 120 | 65 | 100 | 80 | 120 | 70 |
| பூசணி | 40 | 40 | 30 | 40 | 40 | 40 | 30 |
| புடோல் | 80 | 60 | 30 | 60 | 40 | 80 | 70 |
| வாழைக்காய் | 60 | 60 | 40 | 60 | 50 | 80 | 50 |
| சின்ன வெங்காயம் | 100 | 140 | 100 | 100 | 120 | 120 | 90 |
| பெரிய வெங்காயம் | 90 | 120 | 80 | 100 | 90 | 100 | 100 |
| பாகற்காய் | 180 | 250 | 160 | 160 | 160 | 160 | 200 |
| வெண்டிக்காய் | 150 | 100 | 80 | 120 | 80 | 120 | 100 |
| கருணைக் கிழங்கு | 80 | 150 | 70 | 80 | 100 | 100 | 80 |
| பயற்றங்காய் | 150 | 200 | 100 | 160 | 150 | 120 | 160 |
| லீக்ஸ் | 100 | 200 | 100 | 120 | 100 | 120 | 120 |
| பீற்றூட் | 60 | 60 | 50 | 50 | 50 | 80 | 80 |
| கறிமிளகாய் | 150 | 200 | 100 | 160 | 80 | 160 | 120 |
| முருங்கைக்காய் | 80 | 60 | 20 | 60 | 50 | 80 | 60 |
| போஞ்சி | 200 | 250 | 150 | 180 | 160 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | 40 | 60 | — | 60 | 50 |
| கீரை - 1பிடி | 30 | 50 | 30 | 40 | 20 | 30 | 30 |
| தேசிக்காய் | 600 | 600 | 600 | 600 | 600 | 600 | 500 |
| தேங்காய் (ஒன்று) | 40 | 50 | 20-40 | 45 | 35 | 35-45 | 50 |
| இராசவள்ளி | — | — | — | — | — | — | 180 |
| வெங்காயப்பூ | 160 | — | — | 200 | — | — | — |
| முள்ளங்கி | 80 | — | 35 | 60 | — | 80 | 50 |
| பொன்னாங்காணி | 30 | - | 10 | 30 | 25 | 40 | 20 |
| வல்லாரை | 10 | — | 10 | 10 | 20 | 20 | 15 |
| ஈரப்பலா | 60 | 80 | — | — | — | — | — |

# 450 அரச நிறுவனங்களில் கோப் குழு விசாரணை!

(கொழும்பு)

**இலங்கை மத்திய வங்கி ஊழல், மோசடி தொடர்பான விசாரணையை நிறைவு செய்து அதன் அறிக்கையை நாடாளுமன்றில் சமர்ப்பித்துள்ள கோப் குழு மேலும் 450 அரச நிறுவனங்கள் தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ளவுள்ளது.**

விசாரணை நிறைவு செய்யப்பட்ட 34 நிறுவனங்கள் தொடர்பான விசாரணை அறிக்கையை டிசெம்பர் மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கவுள்ளது.

இது தொடர்பில் கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன் நெத்தி தெரிவிக்கையில்,

18 மாதங்களாக மிகவும் சிரமப்பட்டு மத்திய வங்கியில் இடம்பெற்ற மோசடியைக் கண்டுபிடித்துள்ளோம். இது தொடர்பான எமது கோப் குழுவின் அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். குற்றவாளிகளைத் தப்பிக்க விடக்கூடாது.

இந்த அறிக்கை அமைச்சரவைக் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு மத்திய வங்கி மோசடி தொடர்பில் அரசு அதன் நிலைப்பாட்டை தெரிவிக்க வேண்டும். ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர்கள் சிலர் குற்றவாளிகளைக் காப்பாற்றுவது போல் கருத்துக்களை வெளியிட்டு வருவதால் பிரதமரும் அவரது நிலைப்பாட்டை வெளியிட வேண்டும்.

மக்களின் கோடிக்கணக்கான பணம் மத்திய வங்கியில் மோசடி செய்யப்பட்டுள்ளது. அதனால் இந்த அறிக்கையை குப்பைத் தொட்டிக்குள் போடுவதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம்.

அதே போல் இன்னும் 34 நிறுவனங்கள் தொடர்பான விசாரணை அறிக்கைகள் டிசெம்பர் மாதம் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும். மேலும் 450 நிறுவனங்கள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படவுள்ளன என கோப் குழுவின் தலைவர் சுனில் ஹந்துன் நெத்தி மேலும் தெரிவித்தார். (இ-10)

# முதல்வர் ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்த எய்ம்ஸ் வைத்தியர்கள் குழு மீண்டும் வருகை



தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்கு சிகிச்சை அளித்த எய்ம்ஸ் வைத்தியர்கள் குழு, அப்பலோ வைத்தியசாலைக்கு நேற்றுக்காலை மீண்டும் வந்தனர்.

எய்ம்ஸ் வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர்கள் கில்நானி, நிதீஷ் நாயக், அஞ்சன் த்ரிகா ஆகியோர் கொண்ட குழுவினர் தமிழக முதல்வருக்கு சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இந்த நிலையில், நேற்றுக் காலை சென்னை அப்பலோ வைத்தியசாலைக்கு வந்த வைத்தியக் குழு, முதல்வருக்கு அளிக்கப்படும் சிகிச்சை குறித்து அப்பலோ வைத்தியக் குழுவினருடன் ஆலோசனை நடத்தினர். (இ-7)

# தமிழ் சினிமா வரலாறு

## வோட்ச்மேனாக இருந்து பட அதிபராக உயர்ந்த எம்.ஏ.வேணு

291

இதன் பிறகு சம்பூர்ண ராமாயணம் படத்தயாரிப்பை துரிதப்படுத்தினார் வேணு. 1958 ஏப்ரல் 14 தமிழ்ப்புத்தாண்டு அன்று இப்படம் வெளிவந்து மகத்தான வெற்றி பெற்றது.

குறிப்பாக பரதனாக நடித்த சிவாஜிகணேசன் ஒப்புயர்வற்ற நடிப்பினால் மெய்சிலிர்க்க வைத்தார். படத்தைப் பார்த்த ராஜாஜி உள்ளம் நெகிழ்ந்து பரதன் வாழ்க என்று வாழ்த்தினார்.

**வசூல் சாதனை**

இதன் பின் சம்பூர்ண ராமாயணத்தை தெலுங்கில் டப் செய்தார் வேணு. முதலாளி படம் தெலுங்கில் தயாரிக்கப்பட்டது.

இந்த இரண்டு படங்கள் மூலமாக தனக்கு ரூ.40 இலட்சம் இலாபம் கிடைத்ததாக வேணுவே அப்போது கூறியிருந்தார். ரூபா 40 இலட்சம் என்பது இன்றைய மதிப்பில் கிட்டத்தட்ட ரூபா 40 கோடியாகும்.

**கூட்டணி உடைந்தது**

சம்பூர்ண ராமாயணத்துக்குப் பிறகு எம்.ஏ.வேணு, ஏ.பி. நாகராஜன், கே.சோமு கூட்டணி உடைந்து போயிற்று. ஏ.பி.நாகராஜன் தனியாகப் படங்கள் தயாரிக்கத் தொடங்கினார்.

1959இல் பாஞ்சாலி என்ற படத்தை வேணு தயாரித்தார். மனோகர், தேவிகா, எல்.விஜயலட்சுமி, டி.கே.ராமச்சீந்திரன் ஆகியோர் நடித்த இந்தப் படம் தோல்வி அடைந்தது.


எம்.கே.தியாகராஜ பாகவதர் முத்தமிழ் பிக்சர்ஸ் என்ற படக்கம்பனியைத் தொடங்கி சிவகாமி என்ற படத்தை தயாரித்தார். எம்.ஏ.வேணுவின் கூட்டுறவுடன் இப்படம் தயாராகியது. படம் முடிவடைவதற்கு முன் பாகவதர் காலமானார். அதனால் கதையில் சில மாற்றங்கள் செய்து படம் திரையிடப்பட்டது. படம் ஓரளவு நன்றாக இருந்தும் சுமாராகவே ஓடியது.

இதன்பின் நாவலர் நெடுஞ்செழியனின் தம்பி இரா.செழியன் எழுதிய பணம் பந்தியிலே என்ற கதையை வேணு படமாக்கினார். எம்.ஆர்.ராதா நடித்த இப்படம் வெற்றிகரமாக ஓடியது.

ஆனால் இதன்பின் வேணு தயாரித்த தங்கவளையல், துளசிமாடம், பட்டணத்து சிப்பாய் ஆகிய படங்கள் வரிசையாய் தோல்வியைத் தழுவின.

எம்.ஏ.வேணுவின் அதிர்ஷ்ட சக்கரம் சுழல்வது நின்றது.

வெற்றிடப்படங்கள் மூலம் அவர் சம்பாதித்த பணத்தில் பெரும் பகுதியை தோல்விப் படங்கள் விழுங்கிவிட்டன.



எம்.ஏ.வேணு தயாரித்த "சம்பூர்ண ராமாயண"த்தில் சிவாஜிகணேசன், என்.டி.ராமராவ், பத்மினி தோன்றும் ஒரு காட்சி.

**குடும்பம்**

எம்.ஏ.வேணுவின் மனைவி பெயர் பார்வதி அம்மாள். இவர்களுக்கு ஐந்து மகள்களில் ஒருவர் பாட்னாவில் கணவருடன் வசித்து வந்தார். கணவர் அரசாங்கத்தில் வேலை பார்த்து வந்தார். பட உலகில் இருந்து விலகிய வேணு பாட்னா சென்று மகளோடு வசித்து வந்தார்.

சாதாரண நிலையில் இருந்து பட அதிபராக உயர்ந்து பல சாதனைகளைப் படைத்த வேணு சில ஆண்டுகளுக்கு முன் பாட்னாவில் காலமானார்.

தமிழ்த்திரைப்படங்களுக்கு 5 ஆயிரத்துக்கு மேற்பட்ட கருத்தாழம் மிக்க பாடல்கள் எழுதி சாதனை படைத்தவர் கவியரசர் கண்ணதாசன்.

சிறுகதை, நாவல், கட்டுரை, கவிதை என்று இலக்கியத்தின் பல்வேறு துறைகளிலும் முத்திரை பதித்தார்.

**குடும்பம்**

கண்ணதாசன் 1927ஆம் ஆண்டு ஜூன் மாதம் 24ஆம் திகதி ராமநாதபுரம் மாவட்டம் திருப்பதூர் தாலுகா சிறுகூடல் பட்டி என்ற கிராமத்தில் பிறந்தார். தந்தை பெயர் சாத்தப்ப செட்டியார். தாயார் விசாலாட்சி ஆச்சி.

இந்த தம்பதிகளுக்கு மொத்தம் 9 குழந்தைகள். அவர்கள் பெயர் விபரம் வருமாறு,

கண்ணம்மை, ஞானாம்பாள், முத்தாத்தாள், காந்திமதி, கண்ணப்பன், ஏ.எல். சீனிவாசன், சொர்ணம்பாள், முத்தையா (கண்ணதாசன்), சிவகாமி.

**ஏழ்மை**

9 குழந்தைகள் பிறந்த காரணத்தால் சாத்தப்ப செட்டியார் ஏழ்மையில் வாழ்ந்தார்.

(தொடரும்)

# சிறையில் 25 ஆண்டுகள் வெள்ளி முளைக்குமா?

## முதல்வர் அம்மாவுக்கு அறிவு அம்மா அற்புதம் அம்மாள் கடிதம்



# அன்புள்ள மக்களுக்கு... அற்புதம் பேசுகிறேன்!

"மனிதநேயமுள்ள மக்களுக்கு, வணக்கம். என்னுடைய பெயர் அற்புதம். யார் இந்த அற்புதம்? ஏன் நமக்குக் கடிதம் எழுத வேண்டும் என்று யோசிக்கிறீர்களா?

உங்களுக்கு என்னை யார் என்று தெரிந்து இருக்கும் என்று நினைக்கிறேன். ஆம், நான்தான் அற்புதம் அம்மாள். பேரறிவாளனின் தாய். ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தவறே செய்யாமல் கைது செய்யப்பட்ட அப்பாவிக் குழந்தையின் தாய்தான் நான்.

என் கணவர் ஒரு பள்ளி ஆசிரியர். என் குடும்பம் ஒரு பறவையின் கூடுபோல அழகான குடும்பம். எல்லோர் வாழ்க்கையிலும் இன்பமும் துன்பமும் வந்து வந்து போகும். எவ்வளவு பெரிய துன்பம் வந்தாலும் ஏதோ ஒரு காலகட்டத்தில் அனைவரும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவர். ஆனால், 25 ஆண்டுகளாக என் வாழ்க்கையில் 'இயல்பு வாழ்க்கை' என்பது திரும்பவே இல்லை. துன்பம் வரும் போது தூக்கம் தொலைந்துபோகும் என்பார்கள். 1991ஆம் ஆண்டு ஜூன் 10ஆம் திகதி நள்ளிரவு 12 மணிக்கு நான் தொலைத்த தூக்கம் எனக்கு இன்று வரை மீண்டும் வரவில்லை. என் மகன் சிறைக்கொட்டடிக்குப் போய் இன்றுடன் 25 ஆண்டுகள் முடிந்து விட்டன.

1991 ஜூன் 10 அன்று எங்கள் வீட்டில் சி.பி.ஐ. பொலிஸார் என் அப்பாவி மகனை விசாரிக்க வந்தனர். ஆனால், அவன் அன்று பெரியார் திடலில் தங்கி இருந்தான். 'இரண்டு நாட்களில் என் மகனை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டும்' என்று கூறிவிட்டுச் சென்றார்கள். என் கணவருக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. 'நாளைக்கே அவனை திடலில் சென்று சந்தித்து சி.பி.ஐ-யிடம் ஒப்படைக்க வேண்டும்' என்று கூறினார். எங்களது மகனைப் பற்றி எங்களுக்குத் தெரியாதா? அவன் சிறு எறும்புக்கும் தீங்கு விளைவிக்காதவன் ஆயிற்றே? மறுநாளே திடலுக்குச் சென்றேன். என் மகனிடம் செய்தியைக் கூறினேன். அவன் குழந்தை முகம் மாறாதவனாக, புன்னகையுடன் 'இப்போதே போகலாம் அம்மா' என்றான். தவறு செய்தவன்தானே பயப்படுவான்? நானும் என் மகனும் பொருட்கள் வாங்கச் சென்றோம். மீண்டும் திடலுக்கு வந்து பார்த்தபோது எங்களுக்கு ஒன்றுமே புரியவில்லை. என் கணவரும், சி.பி.ஐ பொலிஸாரும் இருந்தனர். என் கணவர் சி.பி.ஐ. பொலிஸாரிடம் என் மகனை அறிமுகம் செய்துவைத்தார். அந்த இருட்டிய நேரத்தில் என் 19 வயது மகனை அவர்களுடன் அனுப்பிவைத்தேன் 'மறுநாள் அனுப்பிவிடுவேன்' என்று சி.பி.ஐ பொலிஸாரால் அழைத்துச் செல்லப்பட்ட எனது மகன், இன்று வரை எனக்குக் கிடைக்கவில்லை.

ராஜீவ் காந்தி கொலை பல மர்மங்களைக் கொண்டது. எனது மகன் மீதான பிரதான குற்றச்சாட்டு, 'அவன்தான் வெடிகுண்டை வடிவமைத்தான்' என்பதுதான். ஆனால், 'வெடிகுண்டை வடிவமைத்தது யார் என்றே தெரியவில்லை' என்று இதை விசாரித்த ஓய்வுபெற்ற அதிகாரி தெரிவிக்கிறார். என் மகன் மீது வைக்கப்பட்ட எல்லாக் குற்றச்சாட்டுகளிலும் இருக்கும் பொய்களையும், குளறுபடிகளையும் அவனது 'தூக்குக் கொட்டடியிலிருந்து ஒரு முறையீட்டு மடலில்' தெளிவாக எழுதி இருக்கிறான். ஆனால், நிரபராதியான ஒருவருக்கு ஏன் தண்டனை வழங்க வேண்டும்? அவனுக்கு உடனடியாகத் தூக்கு என்று அறிவித்த போது ஐயோ... அது ஓர் உயிர்வலி. இந்த உலகில் இன்னும் எத்தனை பேர் தவறே செய்யாமல் இதுபோன்ற கொடுமைகளுக்கு ஆளாகிறார்களோ? நீதி மறுக்கப்படும் ஒவ்வொருவரின் முகத்திலும் நான் என் தங்கமான மகனின் முகத்தைப் பார்க்கிறேன்.

தூக்குத் தண்டனை நிறைவேற்ற போவதாக அறிவித்த உடனே தமிழகம் முழுவதும் போராட்டம் வெடித்தது. செங்கொடி என்ற பெண் தனது உயிரைக் கொடுத்து மூவரின் உயிரைக் காக்க தீபச்சுடர் ஏற்றினாள். அந்தப் பெண் இறந்து இருக்க வேண்டாம் என்ற குற்ற உணர்வு என்றுமே என்னையும் என் குடும்பத்தைச் சேர்ந்தவர்களையும் வாட்டி வருகிறது. அந்தப் பெண்ணின் மரணம் மிகப்பெரிய எழுச்சியை ஏற்படுத்தியது. என் மகன் உட்பட மூவர் தூக்குக் கயிற்றில் இருந்து விடுபட்டார்கள். ஆனால், ஒருவன் தவறே செய்யாமல் எத்தனை வருடங்கள்தான் சிறையில் வாடுவான்? யோசித்துப் பாருங்கள். 25 வருடங்களில் நானும், என் மகனும், என் குடும்பமும் இழந்தது எவ்வளவு? நீங்கள் உங்களது பிள்ளைகளுக்கு ஆசையாக புதுப் புது உணவுகளைச் சமைத்துத் தருவீர்கள். ஆனால், நான் என் ஆசை மகனுக்கு இத்தனை வருடங்களாக ஒன்றையும் சமைத்துத் தந்தது கிடையாது. குழந்தைகளுக்கு உடல் நிலை சரி இல்லை என்றால், ஒரு தாய் எப்படி பதறுவாள்? அவனுக்கு உடல்நிலை சரி ஆகும் வரை எவ்வளவு அக்கறையாகக் கவனித்துக் கொள்வாள்? என் மகனின் சிறுநீரகமே செயலிழக்கும் தருவாயில்கூட நான் அவன் அருகில் இல்லையே அவனது தலையை என் விரல்களால் கோத முடியவில்லையே அவனை என் மடியில் படுக்க வைக்க முடியவில்லையே.

என் கணவர் உடல்நிலை சரியில்லாமல் இருக்கிறார். அவரைக் கூட கவனிக்க முடியாமல் ஓடிக்கொண்டு இருக்கிறேன். இதை எல் லாம் விட மிகக் கொடுமையாக என க்கு இருந்தது என் மகனை விடு தலை செய்ய தமிழக முதல்வர் அம்மா ஜெயலலிதா முடிவு செய்த தன் பின், அதனை மத்திய அரசு தலையிட்டு முட்டுக்கட்டை போட்டது.

எட்டுக் கோடி மக்களின் அரசு, ஒருவரைத் தன் அதிகாரத்தைப் பயன்படுத்தி விடுதலை செய்யப் போவதாக அறிவித்தபின்னும் அதனை மத்திய அரசு தலையிட்டு நிறுத்திவைப்பது எப்படி? சிறையில் இருப்பவர்கள் அப்பாவிகள் என்பது பல்வேறு விடயங்களில் உறுதி ஆகியுள்ளது எனும்போது அவர்கள் ஏன் தடுக்க வேண்டும்? அப்படியென்றால், அவர்களுக்குத் தேவையானது உண்மையான குற்றவாளிகள் அல்லர்... குற்றம் சுமத்த சில அப்பாவிகள்.



ஜெயலலிதாவுடன் அற்புதம் அம்மாள்

நான் ஆரம்பத்தில் மனிதநேயமுள்ள மக்களுக்கு என்று குறிப்பிட்டதன் காரணம், தமிழகம் மட்டுமல்லாமல், பல்வேறு மாநிலங்களில் இருந்தும் நாடுகளில் இருந்தும் ஏழு தமிழர் விடுதலைக்கு ஆதரவு பெருகி வருகிறது. அவர்கள் அனைவருக்கும் நான் நன்றி கூற விரும்புகிறேன்.

ஏழு தமிழர்களும் விடுதலை ஆக வேண்டும். அவர்கள் ஒரு பாவமும் அறியாதவர்கள். இதற்கு தமிழக முதல்வர் அம்மா ஜெயலலிதா ஆவன செய்வார் என்பதை நான் நம்புகிறேன். ஒரு தாய்க்குத் தான் பிள்ளைகளுக்கு என்ன செய்ய வேண்டும் என்பது தெரியும். அவரைச் சந்தித்தது நான் சற்றும் எதிர்பாராத நிகழ்வு. ஆனால், எனக்கு அன்றில் இருந்து ஒரு நம்பிக்கை இருக்கிறது. என் மகன் வீட்டுக்கு வருவான். அவன் என் மடியில் படுத்துத் தூங்கும் நாள் வெகுதூரம் இல்லை. ஏழு குடும்பங்களின் வாழ்க்கையும் மாறும். மனித நேயமிக்க மக்களே, நீதிக்காகக் குரல் கொடுக்க, ஜூன் 11 ஆம் திகதி வேலூர் முதல் சென்னை வரை நடக்க இருக்கும் வாகனப் பேரணியில் இணைந்து கொள்ளுங்கள் என்ற கோரிக்கையுடன் இந்தக் கடிதத்தை முடிக்கிறேன். நன்றி."

**இப்படிக்கு,**
**அற்புதம் அம்மாள்**

'சிறையில் வாடும் தனது மகன் பேரறிவாளனின் விடுதலைக்காக ஏங்கித் தவிக்கும் அற்புதம் அம்மாள் கடந்த ஜூன் மாதம் எழுதிய திறந்த மடல் , **"சிறைக்குள் பேரறிவு"** என்ற தொடர் நாளை முதல் வெளியாவதை முன்னிட்டு இங்கு பிரசுரமாகியுள்ளது'.



(வலிகள் தொடரும்...)

கடமையைச் செய்ய துணிவுடன் இரு. அதுவே உண்மையான வீரத்தின் சிகரம்.

~ சிம்மன்ஸ்

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

# ஆவா குழுவின் உருவாக்கம்; ராஜிதவின் அதிர்ச்சித் தகவல்

இராணுவத்தின் ஒத்துழைப்புடனேயே ஆவா குழு இயங்குகிறது என வடக்கின் முதலமைச்சர் சந்தேகம் வெளியிட்டு 24 மணித்தியாலத்திற்குள் அதனை அமைச்சர் ராஜித சேனாரட்ன உறுதி செய்துள்ளார்.

ஆவா குழு என்பது முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும் மகிந்த ராஜபக்ஷவின் சகோதரருமாகிய கோத்தபாய ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட ஓர் இரகசிய ஆயுதக்குழு.

இந்த ஆயுதக்குழுவுக்கான நிதி கோத்தபாய ராஜபக்ஷ தரப்பால் வழங்கப்பட்டது என்றும் அமைச்சர் ராஜித சேனாரட்ன கூறியிருப்பது இங்கு கவனிக்கத் தக்கது.

வட புலத்தில் அதிலும் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இயங்குகின்ற அமைப்பு என இனங்காணப்பட்ட ஆவா குழு தொடர்ந்தும் இயங்குவதாக அமைச்சர் ராஜித சேனாரட்ன கூறியிருப்பது. ஆவா குழுவின் உருவாக்கம் தொடர்பில் ஒரு தெளிவை ஏற்படுத்தியிருக்கிற போதிலும் அதன் மறு பக்கம் பலத்த சந்தேகங்களையும் கேள்விகளையும் ஏற்படுத்தவே செய்கிறது.

அதாவது கோத்தபாய ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட ஆவா குழு என்பது நல்லாட்சியிலும் யாழ்ப்பாணத்தில் இயங்குகின்றது எனில் வடபுலத்தில் – யாழ்ப்பாணத்தில் இன்னமும் மகிந்த ராஜபக்ஷவின் அதிகாரம் படைத்தரப்பிற்குள் இருக்கிறதா என்ற கேள்வியை ஏற்படுத்துகின்றது.

படைத்தரப்பிற்குள் இன்னமும் மகிந்த ராஜபக்ஷ தரப்பின் அதிகாரம் செல்லுபடியாகுமாக இருந்தால், வடபுலத்தின் அமைதி என்பது எந்நேரமும் ஆபத்துக்குரியது என்பதில் மாற்றுக்கருத்திற்கு இடமில்லை.

அதேநேரம் கோத்தபாய ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட ஆவா குழு இன்னமும் இயங்கு நிலையில் இருப்பதாயின் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு – முற்றாக இல்லாது செய்வதற்கு நல்லாட்சி எடுத்த நடவடிக்கை என்ன? என்ற வினா தமிழ் மக்களிடம் எழுகை பெறுவதில் நியாயம் இருக்கவே செய்யும்.

அவ்வாறான வினாவின் மத்தியில் நல்லாட்சிக்குள் இருக்கக் கூடிய அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களில் சிலர் மகிந்த தரப்பின் ஆதரவாளர்களாக இருப்பதின் அடிப்படையில்,

படையினரின் ஆதரவு ஆவா குழுவுக்கு உண்டு என்றும், அதன் காரணமாக ஆவா குழு இன்னமும் இயங்கு நிலையில் உள்ளது என்றும் கருதுவதில் தவறில்லை.

இவை ஒருபுறம் இருக்க, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்திற்கு பின்னர் சுன்னாகம் பகுதியில் சிவில் உடையில் நின்ற இரண்டு பொலிஸாரை இனம் தெரியாதவர்கள் வாளால் வெட்டியிருந்தனர்.

இச்சம்பவம் ஓர் அச்ச சூழ்நிலையை ஏற்படுத்தியிருந்தது. இச்சம்பவம் நடந்த மறுநாள் ஆவா குழு என்ற பெயரில் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரத்தில் இரண்டு பொலிஸாரையும் வாளால் வெட்டியதை உரிமை கோரியதுடன் தமிழ் மக்களின் கலை, கலாசாரத்தை பேணுவதில் ஆவா குழு தொடர்ந்தும் செயலாற்றும் என்பது போன்ற வாசகங்கள் அந்த பிரசுரத்தில் பதிவு செய்யப்பட்டிருந்தன.

இப்போது ஆவா குழு என்பது கோத்தபாய ராஜபக்ஷவினால் உருவாக்கப்பட்ட இரகசிய அமைப்பு என்று அமைச்சர் ராஜித சேனரட்ன கூறியிருக்கையில்,

பொலிஸார் மீது தாக்குதல் நடத்தியது தாமே என்று ஆவா குழு உரிமை கோரியதை பார்க்கும் போது, வடபுலத்தில் ஒரு குழப்பத்தை ஏற்படுத்துவதால் – அதன் மூலம் தென்பகுதியில் தமிழ் மக்களுக்கு எதிரான போக்கை பாதுகாப்பது, தமிழ் மக்களுக்கான ஓர் ஆயுத அமைப்பாக ஆவா குழுவை காட்டுவதில் ஒரு பெரும் திட்டம் செயலாகுகிறதென்பது உணரப்படக் கூடியதாகும்.

ஆகவே, இதிலிருந்து தமிழ் மக்களைப்பாதுகாப்பது நல்லாட்சியின் தலையாகிய கடமை.

# வளர்ப்பு நாய்களுக்கு விசர்நோய்த் தடுப்பூசி

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குள் அமைந்த யாழ்.நகர் II பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்குவிசர் நோய் தடுபபூசி (ARV) கீழ்வரும் இடங்களில் வைத்து வழங்கப்பட திட்டமிடப்பட்டுள்ளது.

இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தங்களது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி தடுப்பூசியினை ஏற்றிக்கொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கினறோம். இவ்வளர்ப்பு நாய்களுக்கான உரிமக் கட்டணமாக ரூபா 30 செலுத்தப்பட வேண்டும்.

7 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை அத்தியடிப் பிள்ளையார் கோவிலடி, அத்தியடி, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை ஸ்ரான்லிவீதி பெற்றோலியக் கூட்டுத்தாபனம் முன்பாக பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை பருத்தித்துறை வீதி குருநாதர் சுவாமி கோவிலடி, 8 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் 11 மணி வரை நாவலர் மண்டபம் நாவலர் வீதி, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை ராசாவின்தோட்ட வீதி ஸ்ரான்லிவீதி சந்தி, பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை கோவில் வீதி, நக்காவீதிச் சந்தி, 9 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை மருதடிலேன் வைரவர் கோவிலடி, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை நல்லூர் தெற்கு சனசமூக கற்பகப் பிள்ளையார் கோவிலடி, பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை நக்காவீதி இளஞ சிங்கம் சனசமூக நிலையம், 10 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி சந்தி, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை குழந்தை யேசு ஆலயத்திற்கு முன்பாக கோயில் வீதி, பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை மடம் வீதி, திருவள்ளுவர் சனசமூக நிலையம், 11 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம் முற்பகல் 11 மணி வரை அருள்மாதா கோவிலடி ராசாவின் தோட்டம், முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை மாட்டின் வீதி சப்பல் வீதி சந்தி, பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரை 2ஆம் குறுக்கு வேம்படி வீதி, யாழ்ப்பாணம், 15 ஆம் திகதி காலை 9 மணி தொடக்கம 11 மணிவரை OLR தேவாலயம் 4ஆம் குறுக்குத் தெரு, முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை யாழ். புகையிரத நிலைய வீதி வைரவர் கோவிலடி, பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை 2 ஆம் ஒழுங்கை பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், 16 ஆம் திகதி காலை 9 மணியிலிருந்து முற்பகல் 11 மணி வரையும் முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரையும் பிற்பகல் 2.30 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணி வரையும் அனைத்துப் பகுதியும் நடமாடும் சேவை என யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி அறிவித்துள்ளார். (இ)

## முருகப் பெருமானின் மகிமை

கந்தசஷ்டியை முன்னிட்டு சின்மயா மிஷன் வதிவிட ஆச்சாரியார் பிரம்மச்சாரி ஜாக்ரத சைதன்யா வழங்கும் ஞான யக்ஞம், பஜனை என்பன இன்றும் இடம்பெறும். ஐந்தாம்நாளாகிய இன்று முருகப் பெருமானின் மகிமை எனும் தலைப்பில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 4.30 மணிவரை நல்லூர்க் கந்த சுவாமி ஆலய வடக்கு வீதியிலுள்ள மகேஸ்வரன் மணி மண்டபத்தில் ஞான யக்ஞம் இடம்பெறும். (இ-3)



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### ஆறு பகைகளை அழிக்கும் விரதம்!

சித்திரை நட்சத்திரக்காரர்கள் முருகனை வழிபட்டால் சகல போகங்களும் பெறலாம். தமிழரின் முதற் கடவுள் எனவும் முருகனை பகர்வதுண்டு. எம்மனிதனும் மிகவுயர்ந்த தெய்வமாகலாம் என்பதன் தெய்வக் காட்சியே முருகன் வடிவாகும். சூரபத்மனை அழித்து உலகை உய்விக்கும் பொருட்டு உருவானவன் முருகன். சிவனது ஐம்பொறிதளின்று உருவான ஐந்து ஒளிப் பிழம்பு மனத்தின் உருவான மற்றோர் ஒளிப்பிழம்பு இவை. ஆறினாலுமான ஒளித்திரந் சரவணப் பொய்கையில் பிரவேசித்து ஆறுமுகன் உருவானான் என்பது விளக்கம். முருகன் சிவசொரூபம் சக்தி சொரூபம் ஆகிய இரண்டு அமையப் பெற்றவன் முருகன். மூலாதாரம், சுவாதிஷ்டானம் முதலிய உடலில் உள்ள 6 தாரங்கலுக்கு ஒப்பானது முருகனது அறுபடை வீடுகள். ஆறுமுகப்பெருமானது சொரூப விளக்கமானது பல்வேறு தத்துவங்களை புகட்டுகிறது.

ஐயபுலன்களையறியும் ஐம்பொறிகளும் எண்ண உதவும் நல்ல மனதும் முருகனது ஆறுமுகங்களுக்கு ஒப்பானவை. முருகவழிபாட்டில் குறிஞ்சி நிலத் தெய்வமாக போற்றப்படுகிறான். இயற்கையின் வண் ணம் எல்லாம் கொண்ட குன்றுதோறும் விளையாடு கிறான் பால முருகன். மாதந்தோறும் வரும் கார்த்திகைத் திருநாள் முருகப் பெருமானுக்கு உகந்த தினமாகும். மேலும் ஐப்பசி மாத சுக்கில பட்ச பிரதமையன்று வரும் கந்தசஷ்டி நோன்பானது முருகப்பெருமானுடைய சிறப்பான நோன்பாகும். இவ்வாறான நாட்களின்போது மக்களின் மனதில உள்ள காமம், வெகுளி, ஈயாமை, செருக்கு, பொறாமை என்னும் ஆறு பகைகள் அழிக்கப்படுகின்றன.

# விமல் வீரவன்ச உள்ளிட்ட 17 பேருக்கு ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பாணை

முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்ச, முன்னாள் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய உள்ளிட்ட 17 பேருக்கு பாரிய நிதி மோசடிகள் குறித்த ஜனாதிபதி விசாரணைக் குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இன்று ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் உறுப்பினர்கள், தேசிய சுதந்திர முன்னணியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்கள், தற்போதைய உறுப்பினர்கள் உள்ளிட்டவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் கீழ் காணப்படும் வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் விற்பனை செய்யப்பட்டமை தொடர்பில் மூன்று கோடி ரூபா நிதி மோசடி இடம் பெற்றுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பொலிஸ் பாதுகாப்பு வழங்கக்கூடிய எவ்வித தகுதியும் அற்றவர்களுக்கு பொலிஸ பாதுகாப்பு வழங்கியமை குறித்து முன்னாள் பொலிஸ்மா அதிபரிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.

இவ்வாறு பொலிஸ் பாதுகாப்பு வழங்கியதனால் அரசாங்கத்திற்கு நான்கு கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயங்கள் தொடர்பிலான விசாரணைகளுக்காக ஜனாதிபதி ஆணைக் குழுவின் எதிரில் முன்னிலையாகுமாறு விமல் வீரவன்ச, முன்னாள் பொலிஸ்மா அதிபர் மகிந்த பாலசூரிய உள்ளிட்ட 17 பேருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-7-10)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து 6 மணி வரை **யாழ்.பிரதேசத்தில** கொத்தியாவத்தை, வாதரவத்தை, பெரிய பொக்கணை, அச்செழு, கோம்பையன் மணல் ஒருபகுதி, காக்கை தீவு ஒருபகுதி ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** டொன் பொஸ்கோ, வன்னிவிளாங்குளம், ஒட்டறுத்தகுளம், வடகாடு, பாலிநகர், அம்பாள்புரம், கொல்லவிளாங்குளம், ஐம்பது வீட்டுத் திட்டம், பாண்டியன் குளம், நட்டாண்கண்டல், கரும்புள்ளியான், தென்னியங்குளம், உயிலங்குளம், பாரதிநகர், மாங்காக் குடியிருப்பு, ஆலங்குளம், கல்விளான், பிள்ளையார் அரிசி ஆலை, 65ஆவது **Infantry** ஆலங்குளம், துணுக்காய் பல நோக்குக் கூட்டுறவு சங்கம், **TRC 1, 2 Signal medium work shop**, பனிக்கன்குளம், **CATIC** பனிக்கன் குளம், மாங்குளம், நீதிபுரம், டயலொக் தொலைதொடர்பு கோபுரம் ஒலுமடு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** வவுனியா நகரம், வவுனியா நகரத்திலிருந்து கண்டி வீதி ஊடாக கற்குண்டமடு வரை, **SLBC** ஈரப்பெரியகுளம், ஈரப் பெரிய குளம் இராணுவ முகாம், **Ribeco,** விமானப்படை முகாம், விசேட அதிரடிப்படைத்தலைமை அலுவலகம், **Hydramani** ஆடைத் தொழிற்சாலை, கார்கில்ஷ் பூட் சிற்றி, ஓமந்தை வீட்டுத்திட்டம், தொழில் நுட்பக்கல்லூரி, ஓமந்தை **Union Alliance LTD** ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும். (இ-9)



## ஸ்ரீஸ்ரீ ரவிசங்கர் சுவாமியின் சிந்தனையில் இருந்து

### இந்த அண்டத்தின் ஐந்து நிலைகள்

உன்னிடத்திலும் ஐந்து நிலைகள்

அவை அஸ்தி (இருப்பு), பாதி **(Bhati)** (வெளிப்படுத்தும் திறன்), பிரீதி (அன்பு) நாமா (பெயர்), ரூபா **Roopa** (உருவம்) என்பவை.

பொருட்கள் இரு நிலைகளையுடையது. அஸ்தி (இருப்பு) பாதி அறிதல்- வெளிப்பாடு, பிரிதி (அன்பு) இதுவே முழு அண்டத்தின் பரம இரகசியம்.

உன்னுடைய மெய்யறிவின் இருப்பு, இருப்பை வெளியே உணர்த்துதல், அன்பு எனும் மூன்று நிலைகளைப் பற்றிய விழிப்புணர்வு இல்லாமலிருப்பதும் பொருளின் பெயர் மற்றும் உருவத்தில் மட்டும் சிக்கிக் கொள்வதுதான் அறியாமை அல்லது மாயை ஆகும்.

**கேள்வி:** நாம் ஏன் குறைபாடுள்ளவர்களாக இருக்கிறோம்?

**ஸ்ரீஸ்ரீ:** அப்படியிருந்தால் தான் நிறைவைப் பெற, வளர முடியும். வாழ்க்கை என்பதே குறையிலிருந்து நிறைவை அடைய இயங்குவதுதான். ஒரு விதைக்குள் மரமே அடங்கியிருக்கிறது. ஆனால் மரமாக வளர வேண்டுமா னால் விதை அந்த நிலையை விட்டு மாற வேண்டும். வாழ்வில் நீ குறைகளையே ஒவ்வொரு அடியிலும் (நட வடிக்கையிலும்) பார்க்கலாம் அல்லது ஒரு நிறை விலிருந்து மற்றொரு நிறைவை அடையும் நிலையைப் பார்க்கலாம்.

எங்கெல்லாம் உன் கவனத்தைச் செலுத்துகிறாயோ அது கூடுதல் வளர்ச்சியடைகிறது. குறைவில் கவனம் செலுத்தினால் அந்தக் குறை அதிகமாகி விடும்.

## மைக்கல் உதைபந்தாட்டம்

# ஊரெழு றோயல்- ஞானமுருகன் மின்னொளியில் நாளை பலப்பரீட்சை



ஊரெழு றோயல்



மயிலங்காடு ஞானமுருகன்

(யாழ்ப்பாணம்)


மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் நடத்திவரும் மின்னொளியிலான உதைபந்தாட்டத் தொடரின் அரையிறுதிப்போட்டிகள் நாளை சனி, நாளை மறுதினம் ஞாயிறு , 7 ஆம் திகதி திங்கட்கிழமை ஆகிய தினங்களில் மாலை 7.30 மணியளவில் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் முன்னணி கழகங்கள் பங்குபற்றும் முதலாவது அரையிறுதிப்போட்டி நாளை சனிக்கிழமை கழக மைதானத்தில் இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ளது. இதில் ஊரெழு றோயல் அணியை எதிர்த்து மயிலங்காடு ஞானமுருகன் அணி மோதவுள்ளது.

இரண்டாவது போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 7.30 மணிக்கு இளவாலை யங்கென்றீஸ் அணியை எதிர்த்து பலாலி விண்மீன் அணியும் 7 ஆம் திகதி திங்கட்கிழமைமுதலாவதுபோட்டியில்வெற்றி பெற்ற அணியுடன் இரண்டாவது போட்டியில் தோல்வியடைந்த அணி மோதவுள்ளது.

8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இறுதிப்போட்டியும் பரிசளிப்பு நிகழ்வும் வடமாகாணத்தை பிரதிநிதித்துவம் செய்து தேசிய மட்டங்களில் சாதனை படைத்த வீர,வீராங்கனைகள் மற்றும் கல்வியியலாளர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். (கு)

# விளையாட்டுக்கழகங்களுக்கு டெனீஸ்வரனால் உதவித்திட்டம்



ஆண்டான்குளம் புனித தோமையார் விளையாட்டுக்கழகத்திற்கும் மன்னார் பெரிய கமம் அம்பாள் விளையாட்டுக்கழகங்களின் உதைபந்து மற்றும் கரப்பந்து அணிகளுக்காக அவர்களது கழகத்தை ஊக்குவிக்கும் நோக்கோடு அவர்களது கழகத்திற்கு ஒருதொகை உதைபந்துகள் மற்றும் கால்பந்துகள் ஆகியவற்றை வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் தனது 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை (CBG) நிதியில் இருந்து நிதியை ஒதுக்கி கொள்வனவு செய்து கழகத்தின் தலைவர்களிடத்தில் 02.11.2016 புதன்கிழமை மன்னாரில் உள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் வைத்து அமைச்சர் வழங்கிவைத்தார்.(கு-28)

# நட்சத்திரங்களின் உதைபந்தாட்டம் மானிப்பாய் இந்து ஹெற்றிக் வெற்றி



சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி தீபாவளி தினத்தை முன்னிட்டு ஆண்டுதோறும் நடத்திவரும் அழைக்கப்பட்ட பாடசாலைகளுக்கிடையிலான நட்சத்திரங்களின் உதைபந்தாட்டத் தொடரில் மானிப்பாய் இந்துக்கல்லூரி சம்பியனானது.

குறித்த போட்டியின் இறுதியாட்டமானது அண்மையில் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் கல்லூரியின் அதிபர் மு.செல்வஸ்தான் தலைமையில் நடைபெற்றது.

இதில் மானிப்பாய் இந்துக் கல்லூரியை எதிர்த்து மகாஜன கல்லூரி இறுதிப்போட்டியில் மோதிக் கொண்டது. இப்போட்டியில் மானிப்பாய் இந்துக்கல்லூரி 3:0 என்ற கோல்களைப் போட்டு வெற்றி பெற்றது. குறித்த பாடசாலையானது தொடர்ச்சியாக 3ஆவது தடவையாக வெற்றி பெற்றதனால் தொடருக்கான சுற்றுக் கேடயத்தை தனதாக்கிக் கொண்டது.

நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் ந.தயாபரன் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது. (கு)

# அரையிறுதிக்கு தகுதிபெற்றது கரவெட்டி ஞானம்ஸ் அணி

(யாழ்ப்பாணம்)

கைதடி யங்ஸ்டார் நடத்தும் அணிக்கு 8 பேர் கொண்ட 6 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இரண்டாவது மற்றும் காலிறுதிப் போட்டிகள் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டுவில் வளர்மதி மைதானத்தில் நடைபெற்றது.

முதலாவது சுற்றில் கொக்குவில் காமாட்சி அணியை வெற்றி கொண்ட கரவெட்டி ஞானம்ஸ் இரண்டாவது சுற்றில் சாவகச்சேரி நியூபவர் அணியுடன் மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் 6 ஓவர்களில் 2 விக்கெட் இழப்பிற்கு 105 ஓட்டங்கள் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜிவன் 58 ஓட்டங்களையும் ஜோனி 32 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நியூபவர் அணி 3.1 ஓவர்களில் 15 ஓட்டங்கள் மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது.

காலிறுதியில் கைதடிஐக்கிய அணியுடன் மோதியது கரவெட்டி ஞானம்ஸ். முதலில் துடுப்பெடுத்தாடிய ஞானம்ஸ் 6 ஓவர்களில் 6 விக்கெட்டினை இழந்து 59 ஓட்டங்கள் பெற்றது. வெற்றி இலக்கை நோக்கித் துடுப் பெடுத்தாடிய கைதடி ஐக்கியம் அணி 6 ஓவர்களில் 6 விக்கெட்டினை இழந்து 31 ஓட்டங்கள் மாத்திரம் பெற்று தோல்வி அடைந்தது. இதனால் கரவெட்டி ஞானம்ஸ் அணி அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது. (கு)

# மைலோ கிண்ண தீவக போட்டி இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட விளையாட்டு திணைக்களத்தால் நடத்தப்படும் மைலோ வெற்றிக்கிண்ணம் 2016 தீவக லீக் போட்டிகள் இன்று (04.11.2016) வெள்ளிக்கிழமை கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை ஏற்பாடாகி இருந்த மேற்படி போட்டிகள் காலநிலை சீரின்மையால் தீவகத்தில் நடைபெறவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (கு)

# மைலோ கிண்ணம்-2016 ஞானமுருகன் வெற்றி



மைலோ கிண்ணம் -2016 ஆம் ஆண்டுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற யாழ். லீக் அணிகளுக்கிடையிலான தெரிவுப் போட்டியில் தனது முதலாவது ஆட்டத்தில் எல்லாளன் அணியை எதிர்கொண்ட ஞானமுருகன் அணி 6-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குள் நுழைந்தது.

ஞான முருகன் அணி சார்பாக தீபன், வகி தலா இரு கோல்களையும் மதன்,கனுஜன் தலா ஒரு கோலினையும் போட்டனர். (கு)

# மகாஜன தேசிய சாதனை மங்கை அனித்தா விளையாட்டுத்துறை அமைச்சருடன் சந்திப்பு




பெண்களுக்கான தேசிய மட்ட கோலூன்றிப் பாய்தலில் சாதனை படைத்த மகாஜனக் கல்லூரியின் சாதனை மங்கை அனித்தா, அவரது பயிற்றுநரான ஆசிரியர் சி. சுபாஸ்கரன் ஆகியோரை விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜெயசேகர நேற்று முன்தினம் கொழும்பில் உள்ள அமைச்சின் அலுவலகத்தில் சந்தித்து கலந்துரையாடினார்.

இச் சந்திப்பில் கோலூன்றிப் பாய்தலுக்கான உபகரணங்கள் மற்றும் பயிற்சிகளுக்கான உபகரணங்கள் என்பவற்றைத் தந்துதவுவதாக உறுதியளித்தார். (கு)

# மாணிக்க மடுவிலுள்ள புத்தர் சிலையை அகற்ற பௌத்த பிக்குகள் மறுப்பு!

(அம்பாறை)

அம்பாறையில் தமிழ பேசும்மக்கள் செறிவாக வாழும் இறககாமம பகுதியில் மாணிக்கமடு கிராமத்தின் அருகே, மாயக்கல்லி மலை மீது அத்துமீறி வைக்கபபட்டுள்ள புத்தர் சிலையை அகறறுவதற்கு பௌத்த பிக்குகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர்.



கடந்த 29ஆம் திகதி சனிக்கிழமை திடீரென வந்த பௌத்த பிக்குகளைக் கொண்ட ஒரு குழுவினரால், தமிழ்க் கிராமமான மாணிக்கமடுவை அடுத்த மாயக்கல்லி மலை மீது புத்தர் சிலை ஒன்று நிறுவப்பட்டது.

அந்தப் பகுதியில் பௌத்தர்கள் எவரும் வசிக்காத நிலையில் புத்தர் சிலை நிறுவப்பட்டமையானது அந்தப்பகுதியில் வாழும் தமிழ் பேசும் மக்களிடையே அதிருப்தியையும் விசனத்தையும் ஏற்படுத்தியது.

இதுகுறித்து, அமைச்சர் ரவூப் ஹக்கீமுக்குத் தெரியப்படுத்தப்பட்டதுடன் அவர் அப்பகுதிக்கு வந்து பார்வையிட்டு, மக்களுடன் கலந்துரையாடியிருந்தார்.

இதனைத் தொடர்ந்து இந்த விவகாரம் தொடர்பாக, ஆராய்வதற்கு நேற்று முன்தினம் அம்பாறை மாவட்ட செயலகத்தில் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டது.

இந்தக் கூட்டத்துக்கு, இறக்காமம் பிரதேசத்திலுள்ள பள்ளிவாசல்களின் நிர்வாகிகள், இந்து ஆலய நிர்வாகிகள் மற்றும் புத்தர் சிலை விவகாரத்துடன் தொடர்புடைய பௌத்த பிக்குகளும் அழைக்கப்பட்டிருந்தனர்.

இந்தக்கூட்டத்தில்கலந்து கொண்ட தமிழ், முஸ்லிம் தரப்புகள் பௌத்தர்கள் அல்லாத இடத்தில் புத்தர் சிலை வைப்பது பொருத்தமற்றது என்றும், இதனால் எதிர்காலத்தில் பின் விளைவுகள் ஏற்படலாம் என்ற அச்சத்தை வெளிப்படுத்தியிருந்தனர்.

ஆனால், அதற்கு பௌத்த பிக்குகள் மறுப்புத் தெரிவித்துள்ளனர். இறக்காமம் பிரதேசத்தில் அகழ்வாராய்ச்சிக்குரிய 19 இடங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும், அவற்றை பாதுகாக்க வேண்டிய தேவை தமக்கு இருப்பதாகவும் தெரிவித்த பிக்குகள் புத்தர் சிலையை அங்கிருந்து அகற்ற முடியாதெனவும் உறுதியாக தெரிவித்துள்ளனர்.

இதனால், இந்த விவகாரத்துக்கு சுமுகத் தீர்வு காணும் நோக்கில், தமிழ், முஸ்லிம், பௌத்த பிக்குகள் மற்றும் சிவில் அதிகாரிகளை உள்ளடக்கிய 15 பேர் கொண்ட குழுவொன்று அரசாங்க அதிபரால் நியமிக்கப்பட்டுள்ளது. (செ)

## நேற்றிலிருந்து ஒருவார காலம்...

தனபுர வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்துள்ளார்.

1927ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 5ஆம் திகதி பிறந்த வயலின் வாத்தியக் கலைஞரும் பாடகருமான டபிள்யூ.டி.அமரதேவ இலங்கை இசைத்துறையின் மிகச் சிறந்த பாடகராக கருதப்படுகின்றார்.

மறைந்த இலங்கையின் பழம் பெரும் பாடகர் பண்டித் டப்ளியூ. டி.அமரதேவவின் பூதவுடல், இன்று முற்பகல் 10 மணி தொடக்கம் நாளை மாலை 3 மணிவரை பொதுமக்கள் அஞ்சலிக்காக, கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் வைக்கப்படவுள்ளது.

இவர் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 5 ஆம் திகதி இசை நிகழ்வொன்றில் வைத்து ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

அவரது இழப்பு குறித்து ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கையில்,

அமரதேவ, சிங்கள சங்கீதத்துக்கும் நாட்டுக்கும் சங்கீதத்தின் குறியீடாவார்.

வித்துவானாகிய அவர் மொழி வாண்மை, சமய, தத்துவங்களில் செழுமைபெற்ற அறிஞர்களின் நட்பும், தனது அறிவுசார் புலமையுடனும் வாழக்கையெனும் பாடசாலையிலும் அறிவை வளர்த்துக்கொண்ட அறிஞராவார்.

அமரதேவினது மதுரக்குரலானது சிங்கள கலாச்சார ஆன்மீகத்தின் அடித்தளத்திலிருந்து எழும் இராகமாகும்.

'சசர வசன துரு' 'ரத்னதீப ஜன்ம பூமி' போன்ற இரு பாடல்கள் அவரது உன்னத நிலையை எடுத்துக்காட்ட போதுமானதாகும்.

அமரதேவ் தனது பெரும் பணியை நிறைவு செய்து தேசத்திலிருந்து விடைபெற்றாலும் அவரது அதிசயமான சங்கீதக் கலை என்றும் நினைவுகூரப்பட்டுக் கொண்டே இருக்கும்.

எளிமையான, பெருமையில்லாத வாழ்வின் முன்னுதாரணம் அவராவார். எமது நாட்டை விழித்தெழச் செய்த தேசத்தின் குரல் மௌனித்தாலும் அது எதிர்கால தலைமுறையினரின் உயிராக இருக்குமென்பது திண்ணம் என ஜனாதிபதி தனது அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, நேற்று தொடக்கம் எதிர்வரும் ஒருவார காலத்தை தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்குமாறு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

மூத்த சிங்கள மொழிப் பாடகரும் இசையமைப்பாளருமான கலாநிதி பண்டித் டபிள்யூ.டி.அமரதேவவின் மறைவையொட்டியே ஒருவார காலத்தை பூரண் தேசிய துக்கதினமாக அனுஷ்டிக்குமாறும் அவரின். இறுதிக் கிரியைகள் பூரண அரச மரியாதையுடன் இடம்பெறுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## 91 இலட்சம் ரூபாய் பெறுமதி...

இந்தியாவில் இருந்து யாழ்ப்பாணம் மாதகல் கடற்பரப்பினூடாக கொண்டுவரப்பட்ட 91இலட்சம் பெறுமதியான 52 கிலோ கேரள கஞ்சாவினை கைப்பற்றியுள்ளதுடன் அதனை கடத்தி வந்த நபரொருவரையும் கைது செய்துள்ளதாக காங்கேசன் துறை பொலிஸ் பிரிவின் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.ஏ.ஆர மாசிங்க தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து மாதகல் கடற்பரப்பினூடாக யாழ்ப்பாணத்திற்கு கேரள கஞ்சா கடத்தல் இடம்பெறுவதாக இளவாலை பொலிஸாருக்கு இரகசிய தகவலொன்று கிடைத்துள்ளது.

இதனையடுத்து காங்கேசன் துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.ஏ.ஆர்.மாசிங்கவின் ஆலோசனையிலும் வழிகாட்டலிலும் அமைக்கப்பட்ட விஷேட பொலிஸ்குழுவானது கடற்படையினரது உதவியுடன் விசாரணை நடவடிக்கைகளை ஆரம்பித்திருந்தது. இதன்படி மாதகல் கடல்பகுதியில் சந்தேகத்திற்கு இடமான வகையில் பயணம் செய்திருந்த படகொன்றை சோதனையிட்ட போதே இக் கடத்தல் சம்பவமானது கண்டறியப்பட்டிருந்தது.

இதன்படி குறித்த படகில் கேரள கஞ்சாவானது பரல்களில் உள்ளே மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கொண்டு வரப்பட்டிருந்தமை கண்டறியப்பட்டிருந்தது.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த நிறை 52 கிலோ எனவும் இவற்றின் மொத்த பெறுமதி சுமார் 91 இலட்சம் இலங்கை ரூபாய் பெறுமதி எனவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்துள்ளார்.

மேலும் கைது செய்யப்பட்ட நபரை நீதிமன்றின் அனுமதியுடன் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் வைத்து விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் காங்கேசன்துறைக்கு பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் எம்.ஏ.ஏ.ஆர்.மாசிங்க தெரிவித்திருந்தார். (செ-4)

# இந்திய இராணுவத்தினர் எனது தந்தையை கொலை செய்தனர்

## இலங்.இராணுவம் காணியை அபகரித்தது; நாவலடி இளம் பெண் கண்ணீர்

(ஏறாவூர்)

என் தந்தையை இந்திய இராணுவத்தினர் இந்தக் காணியில் வைத்தே அடித்துக் கொன்றனர். அந்தத் துயரம் மறைவதற்குள் இப்பொழுது இலங்கை இராணுவத்தினர் எமது இடத்தைக் கைப்பற்றி எம்மை அகதிகளாக்கியுள்ளனர் என மட்டக்களப்பு கோறளைப்பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவு நாவலடிச் சந்தியில் தமது வீடு, காணிஎன்பனவற்றை இழந்துள்ள காசிம்பாவா பர்ஸானா தெரிவித்தார்.

மட்டக்களப்பு கோறளைப் பற்று மத்தி பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள கொழும்பு - மட்டக்களப்பு. திருகோணமலைச் சந்தி நாவலடியில் படையினர் நிலைகொண்டுள்ள தமது குடியிருப்புக்காணிகளைமீட்டுத் தருமாறு கோரியுள்ள அப்பகுதி காணியை இழந்த 16 முஸ்லிம் குடும்பங்களில் இந்த இளம் பெண்ணும் ஒருவர்.

இக்குடும்பங்கள் நேற்று முன்தினம் நாவலடி படைமுகாமுக்கு முன்னால் கொழும்பு மட்டக்களப்பு நெடுஞ்சாலை ஓரமாக கூடாரமிட்டு சத்தியாக்கிரகப் போராட்டத்தை முனனெடுத்தனர். அதன்போது பர்ஸானா தொடரந்து தெரிவிக்கையில்,

எனது பெற்றோரும் நானும் இப்பொழுது படையினர் ஆக்கிரமித்துள்ள காணிக்குள்தான் வாழ்ந்து வந்தோம்.

நான் பிறந்து வளர்ந்ததே இந்தக் காணியில்தான். நான் சிறு வயதாக இருக்கும்போது இங்கு யுத்தத்தில் ஈடுபட்ட இந்திய அமைதி காக்கும் படையினர் எனது தந்தையை அடித்தே கொன்று விட்டார்கள்.

அந்தத் துயரத்திலிருந்து நாம் இன்னமும் மீளவில்லை. அவ்வாறிருக்கும்போது இலங்கைப் படையினர் இந்த இடத்தில் வந்து இங்கு குடியிருந்தவர்களையெல்லாம் துரத்தியடித்து விட்டு இப்பொழுது முகாமிட்டுள்ளார்கள்.

இப்பொழுது எனது தாயும் மரணித்து விட்ட நிலையில் நான் அநாதரவாக வீடுமின்றி காணியுமின்றி இருப்பிடமில்லாது அகதியாக வாழ்ந்து வருகின்றேன்.

எமது துயரத்தை எங்கு போய் எடுத்துச் சொன்னாலும் அதனை அக்கறையோடு யாரும் கேட்டு நடவடிக்கை எடுக்கவில்லை.

எனது பெற்றோர் யுத்தத்தில் மிக மோசமான பாதிப்புக்குள்ளாகிய நிலையிலேயே எங்களைப் பராமரித்தார்கள். நாங்கள் வாழ்ந்த இடம் எப்படியாயினும் எங்களுக்குத் தருப்பித்தரப்பட வேண்டும் என்றார்.

இதேவேளை இங்கிருந்து 1990 ஆம் ஆண்டு யுத்தத்தின் காரணமாக விரட்டியடிக்கப்பட்ட மககள் தாங்கள் 1968ஆம் ஆண்டு முதல் மேற்படி பிரதேசத்தில் குடியேறி வாழ்ந்து வந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

அவர்கள் அங்கு வாழ்ந்தமைக்கான அனைத்து ஆவணங்களையும் கொண்டிருப்பதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (செ)

## அரசியல் தீர்வு இழுத்தடிப்பு...

கல்வியியற் கல்லூரிகளில் பயிற்சியைப் பூர்த்தி செய்துகொண்டுள்ள வேளையில் கிழக்கு மாகாணத்துக்கு வெளியே ஆசிரியர்களாக நியமிக்கப்பட்ட கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த ஆசிரியர்களை மீணடும் கிழக்கு மாகாணத்திலேயே நியமிப்பதற்கான நியமனங்கள் வழங்கும் நிகழ்வு மட்டக்களப்பு மஹாஜனக் கல்லூரியில் நேற்று நடைபெற்றது.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய முதலமைச்சர், பாரிய அழிவுகளைச் சந்தித்த இந்த நாடு, அதிலிருந்து பாடம் கற்று இனப்பிரச்சினைக்கான தீர்வை நோக்கிப் பயணிக்காவிட்டால், இந்த நாட்டின் எதிர் காலம் கேள்விக்குள்ளாகும்.

ஆகவே, எந்தவித தாமதமும் இல்லாமல் இனப்பிரச்சினைக்கான தீர்வு எட்டப்பட்டு அது அமுல்படுத்தப்பட வேண்டும். 13ஆவது அரசியல் சட்டத்திருத்தத்தை ஏற்றுக் கொள்ள முடியாதவர்களாக இந்த நாட்டில் எவரும் இருக்கமுடியாது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் எல்லோரும் 13ஆவது திருத்தத்தை ஏற்றுக்கொண்டு, சத்தியப்பிரமாணம் செய்துவிட்டு பின்னர் அதனை வழங்குவதற்கு மறுக்க முடியாது.

அரசியல் இழுத்தடிப்பு இந்த நாட்டுக்கு நல்லதல்ல. இனப்பிரச்சினைக்கான முன்னெடுப்பை உடனடியாக எடுக்க வேண்டும்.

13ஆவது திருத்தத்தின் மூலம் மாகாணசபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரம் உண்மையாகவே எங்களுக்கு இருந்திருந்தால் ஆசிரியர்களாகிய நீங்களும் வெளிமாகாணங்களில் அலைந்து திரிந்து இவ்வளவு சிரமப்பட்டிருக்க வேண்டிய அவசியமில்லை.

அதேவேளை, இந்த மாகாண சபையை முன்னர் நிர்வகித்தவர்களின் அசமந்தப் போக்கே ஆசிரியர்களை மேலும் சிரமப்பட வைத்தது.

தற்போது கடந்த ஒரு வருடகாலமாக நாம் தொடராக மேற்கொண்ட போராட்டத்தின் வெற்றியயைக் கொண்டு இன்று உங்களை கிழக்கு மாகாணத்திலேயே கிட்டிய இடங்களில் நியமித்திருக்கின்றோம்.

எமது நிர்வாகக் கால்த்திலே இந்த மாகாணத்தில் ஆசிரியர் பற்றாக்குறை இல்லாது நிவர்த்தி செய்வதற்குரிய அனைத்து முயற்சிகளையும் எடுத்து துரிதமாகச் செயற்பட்டு வருகின்றோம்.

கடந்த கால மாகாண சபை ஆட்சியாளர்களால் விடப்பட்ட நிர்வாகத் தவறுகள் எமது தோள்களை அழுத்தியுள்ளன.

பட்டதாரி ஆசிரியர் நியமனங்களை பரீட்சைகளின்றி வழங்கவும் நாம் உரிய ஒழுங்குகளைச் செய்துள்ளோம். கிழக்கு மாகாண எதிர்கால சந்ததியின் கல்வி, ஆசிரியர்களாகிய உங்கள் கைளிலேயே உளளது.

எனவே, உங்கள் கடமைகளைச் சிறப்பாகச் செய்து இந்த மாகாணத்தை கல்வியில் முன்னேற்ற உதவுங்கள் என கிழக்கு முதலமைச்சர் தெரிவித்தார். (செ)

## கஷ்டத்தில்...

கைக்கான சீன தூதுவர் அதிருப்தி வெளியிட்ட விடயத்தில் இருந்து இது தெட்டத்தெளிவாக தெரிந்து கொள்ள முடிகிறது.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஆட்சியின் போது; யுத்தத்தை நிறைவு செய்யவும், யுத்தத்தின் பின்னரான அபிவிருத்திக்கும், சீனா பெரும் உதவி செய்தது. முக்கியமாக அப்போதிலிருந்தே சீனாவுக்கு நிதி அமைச்சர் ரவி கருணாநாயக்க எதிர்ப்பு தெரிவித்து வந்தார்.

எனினும் உலகின் முன்னணி முதலீட்டு நாடுகளில் ஒன்றான சீனாவை பகைத்துக்கொள்வது சிறந்தது அல்ல. அதோடு உலக நாடுகளுக்கே இலங்கை முதலிடுவதற்கு சிறந்த நாடு இல்லை என்ற செய்தி சென்றுள்ளது. இதற்கு காரணம தனிப்பட்ட ரீதியில் பழி வாங்குவதற்கு பதிலாக நாடு களை பழிவாங்குவதுதான் என பந்துல கூறினார். (செ-11)

## நாடு திரும்பி...

நாடு திரும்பியுள்ளார்.

தனது நெருங்கிய நண்பர் ஒருவரின் புதல்வரின் திருமண வைபவத்தில் கலந்து கொள்வதற்காக அரஜுன மகேந்திரன் கடந்த 27ஆம் திகதி இந்தோனேசியாவிற்கு சென்றிருந்தார்.

அர்ஜுன மகேந்திரன் கலந்து கொண்ட திருமண விழா இந்தோனேசியாவின் தலைநகரான ஜகார்த்தாவில் நடைபெற்றது.

நாடாளுமன்ற பொதுக் கணக்காய்வு குழுவினர் (கோப் குழு) இலங்கை மத்திய வங்கி பிணைமுறி தொடர்பான அறிக்கையை நடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவிருந்த தினத்துக்கு முதல்நாள் அவர் நாட்டிலிருந்து சென்றார்.

அர்ஜுன மகேந்திரன் வெளிநாட்டில் திருமண நிகழ்வில் கலந்து கொள்ளவுள்ளதாக நான்கு வாரங்களுக்கு முன்பே தனது நண்பருக்கு உறுதி அளித்திருந்ததாக ஊடகங்களுக்கு கூறியிருந்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் ஏற்கெனவே இது பற்றி அறிவித்து இருந்ததாகவும் அர்ஜுன மகேந்திரன் கூறியிருந்தார்.

எவ்வாறாயினும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் பிணை, முறிகள் மோசடியில் குற்றவாளியாக கோப் குழுவின் அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

அர்ஜுன மகேந்திரன் நாடு திரும்பும் சந்தர்ப்பத்தில் விமான நிலையத்தில் வைத்தே கைது செய்யப்பட வேண்டும் என்று ஒன்றிணைந்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தி வருகின்ற நிலையில் நேற்று அவர் நாடுதிரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## குழந்தையின் உயிரைக்...

பட்டிருந்த நிலையில் இங்கிலாந்தில் நேற்று முன்தினம் மாலை காலமானார்.

இவர் பிரித்தானிய பிரஜையொருவரை திருமணம் செய்திருந்த நிலையில் அந்த நாட்டில் வாழ்ந்து வந்துள்ளார். 40 வயதான சஞ்சீவனி இந்திரா இரு பிள்ளைகளின் தாயாவார். புற்றுநோயால் பாதிக்கப்பட்டு போராடி வந்த நிலையிலேயே உயிரிழந்துள்ளார்.

கடந்த 2008ஆம் ஆண்டு சஞ்சீவனி புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் அதற்கான சிகிச்சையை மேற்கொண்டு குணமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் கடந்த 2014ஆம் ஆண்டு அவர தனது இரண்டாவது குழந்தையை 28 வாரங்களாக வயிற்றில் சுமந்திருந்த நிலையில் மீண்டும் அவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்தமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் மருத்துவர்கள் அவருக்கு முன்கூட்டிய சிசேரியன் மூலம் குழந்தையை பெற்றெடுக்க பழயும், அதனையடுத்து, புற்று நோய்க்கு சிகிச்சை பெறமுடியுமெனவும் தெரிவித்திருந்தனர்.

தனது வயிற்றில் வளரும் குழந்தையின் நலனுக்காகவும் குழந்தை நல்லமுறையில் பிறக்க வேண்டும் என்ற ஒரே காரணத்துக்காகவும் தாயான சஞ்சீவனி மருத்துவர்களின் ஆலோசனையை அப்போது ஏற்காது மறுத்து விட்டார்.

இதையடுத்து 33 வாரங்களின் பின்னர் குழந்தையை அறுவைச் சிகிச்சை மூலம் பெற்றெடுக்க அவர் சம்மதித்துள்ளார்.

இந்த நிலையிலேயே அவர் மாரபக புற்று நோயால் பாதிக்கப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் இங்கிலாந்தில் உயிரிழந்துள்ளார்.

சபாநாயகர் கரு ஜயசூரியவின் இளைய மகளான சஞ்சீவனி இந்திரா ஜயசூரியவிற்கு இறக்கும் போது வயது 40 ஆகும்.

செயின்ட் பிரிட்ஜெட் கல்லூரி மற்றும் தேவி பாலிகா வித்தியாலயத்தின் பழைய மாணவியான அவர், பிராட்போர்ட் பல்கலைக் கழகத்தில் பொருளாதாரத்திற்கான கற்கையில் இளங்கலை பட்டம் பெற்றதோடு லண்டன் பொருளாதார பல்கலைக்கழகத்தில் முதுகலை பட்டத்தை பெற்றுள்ளார்.

அவர் பல முன்னணி நிதி நிறுவனங்களில் சந்தைப்படுத்தல் பிரிவு சிரேஷ்ட பதவிகளில் பணியாற்றியுள்ளார்.

இந்நிலையில் அவரது மரண சடங்குகள் லண்டனில் இடம்பெறும் என அவரது குடும்பத்தினர் தெரிவித்துள்ளனர். (செ)

## ஆவா குழுவுக்கும்...

வுக்கும் தனக்கும் எந்த தொடர்பும் இல்லை எனவும் கூறியுள்ளார்.

அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தனக்கு எதிராக முன்வைத்திருக்கும் குற்றச்சாட்டை அடியோடு நிராகரித்த கோத்தபாய ராஜபக்ஷ, ஒட்டு மொத்த படையினரையும் அமைச்சர் கேவலப்படுத்தியிருப்பதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தில் செயற்பட்டு வரும் ஆவா குழுவை முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், முன்னாள் இராணுவ மேஜர், கேணல் தர அதிகாரி ஒருவரும் இணைந்தே உருவாக்கியிருப்பதாகவும், இதனை தாம் முன்னதாகவே அறிந்து வைததிருந்ததாகவும் அமைச்சர் ராஜித சேனாரத்ன நேற்று முன்தினம் கூறியிருந்தார்.

இந்த ஆவா குழுவை பயன்படுத்தி வடக்கில் அமைதியின்மையை ஏற்படுத்தி அதனூடாக ஆட்சியைக் கவிழ்ப்பதற்கு தற்போதும் முயற்சிகள் இடம்பெறுகின்றதா என்பது குறித்து உளவுப் பிரிவு ஊடாக விசாரணை செய்யப்படும் என்றும் அமைச்சர் ராஜித தெரிவித்தார்.

இந் நிலையில் அமைச்சர் ராஜித சேனாரதனவின் இந்தப் பகிரங்க குற்றச்சாட்டை கோத்தபாய ராஜபக்ஷ நேற்று மறுத்துள்ளார்.

அமைச்சர்களால் மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான அறிவிப்புக்களினால் தனக்கு அல்ல, ஒட்டு மொத்த இராணுவத்தினருக்கும் ஒரு இழுக்காகவே கருதுவதாகவும் அவர் கூறியுள்ளார்.

அரசியல் ரீதியாக தன்மீது மேற்கொள்ளப்படுகின்ற இவ்வாறான தாக்குதல்கள், நாட்டின் முழு இராணுவத்தினரையும் தாக்குவதாகவே அமைகிறது என்றும் தெரிவித்துள்ள கோத்தபாய ராஜபக்ஷ, இராணுவத்தினர் ஒரு போதும் இவ்வாறான சட்ட விரோத செயலை செய்ய வில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார். (செ)

## 80 சதவீதம்...

கக்கும் ஒரு ரூபாய்க்கு 80 சதம் கடனாக செலுத்தவேண்டிய நிலைமையில் இலங்கை உள்ளதாக நிதி பிரதியமைச்சர் லக்ஸ்மன் யாப்பா அபேவர்தன குறிப்பிட்டார்.

அதேபோல் இம்மாதம் பாராளுமன்றத்தில் முன்வைக்கவுள்ள வரவுசெலவு திட்டம் தொடர்பில் ஆராய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்கள் நிதி அமைச்சில் இன்று கூடவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் செய்தியாளர் சந்திப்பு நேற்று கட்சி தலைமை அலுவலகத்தில் நடைபெற்றபோது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

இம்மாதம் பாராளுமன்றத்தில் முன்வைக்கவுள்ள வரவுசெலவு திட்டம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி என்ற ரீதியில் நாம் சில முக்கியமான தீர்மானங்களை எடுக்கவேண்டியுள்ளது. அதேபோல் சில மாற்றங்களும் மேற்கொள்ளவேண்டிய தேவை உள்ளதாக நாம் கருதுகின்றோம். ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி எப்போதும் மக்களின் பக்கம் சிந்தித்து அதற்கமைய வரவுசெலவு திட்டம் அமைய வேண்டும் என கருதுகின்றது. ஆகவே நாளை (இன்று) நிதி அமைச்சில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பிரதிநிதிகள் நிதியமை ச்சருடன் விசேட கலந்துரையாடல் ஒன்றை நடத்தவுள்ளோம். வரவுசெலவு திட்டம் முன் வைக்க முன்னர் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் நடத்தப்படும் இறுதி கலந்துரையாடலாக இது அமையும். இந்த பேச்சு வார்த்தையில் முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படும். அதன் பின்னர் வரவுசெலவு திட்டத்தை முன்வைப்பது பொருத்தமானது என கருதினோம்.

மேலும் இலங்கை சர்வதேச நாடுகளுக்கு கொடுக்கவேண்டிய கடன்தொகை அதிகரித்துக்கொண்டு வருகின்றது என்பதையும் நாம் மறந்துவிடக்கூடாது. அடுத்த ஆண்டுக்காக இலங்கை 4.4 பில்லியன் அமெரிக்க டொலர் கடன் செலுத்தவேண்டியுள்ளது. எமக்கு வருமானமாக கிடைக்கும் ஒரு ரூபாய்க்கு 80 சதம் கடனாக செலுத்தவேண்டிய நிலைமையில் இன்று நாம் உள்ளோம். அவ்வாறான நிலையில் சர்வதேச நாடுகளிடம் இருந்து இனிமேலும் எம்மால் கடன்களை பெறமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. மாறாக முதலீடுகளை மட்டுமே வலியுறுத்த முடியும் அதற்கான வாய்ப்புகள் உள்ளது என லக்ஸ்மன் யாப்பா தெரிவித்தார். (செ-11)

## மத்திய வங்கி விவகாரம்...

றம் ஊடாகவே தீர்வை பெற்றுக்கொள்ள வேண்டும் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் புதிய அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ளும் ஆரம்பகட்ட நிகழ்வு நேற்று மஹரகமவில் நடைபெற்றது. இந்நிகழ்விலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த ஆட்சியில் தவறு செய்தவர்களுக்கு தண்டனை பெற்றுக் கொடுக்கவும் எனது ஆட்சியில் எவரும் தவறு செய்யாமல் இருப்பதற்குமே நான் மகிந்த ராஜக்ஷவின் அரசாங்கத்தில் இருந்து விலகி வந்தேன்.

எனது ஆட்சியில் தூய்மையான அரசியல் இருக்க வேண்டும். ஒவ்வொரு அரசியல்வாதிகளும் என்ன செய்கிறார்கள், என்ன உணவு உண்ணுகிறார்கள், எந்த வாகனத்தில் செல்கிறார்கள் என அனைத்தும் அறிந்திருக்க வேண்டும். இதன் மூலமே தாம் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதி மக்கள் சேவை செய்ய தகுதியானவரா அல்லது தகுதியற்றவரா என்பதை மக்கள் இனம் கண்டுகொள்ளமுடியும்

எனவே மத்திய வங்கியில்இடம்பெற்ற பிணை முறிகள் விவகாரம் தொடர்பில் நீதிமன்ற விசாரணைக்கு கொண்டு சென்று அதன் ஊடாக தீர்வை பெற வேண்டும்என்றார். (செ)

## மாணவர்கள்...

யாகியிருந்தனர். இச் சம்பவத்தை பொலிஸார ஆரம்பத்தில் விபத்தாக சித்திரிக்க முற்பட்டிருந்த போதும் மாணவர்களது போராட்டத்தையடுத்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கி பிரயோகத்திலேயே மாணவர்கள் உயிரிழந்தமை மருத்துவ அறிக்கை மூலம் உறுதி செய்யப்பட்டது.

தொடர்ந்து இப் படுகொலைச் சம்பவம் தொடர்பாக துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட பொலிஸ்உத்தியோகத்தர் உட்பட ஐந்து பொலிஸ் அதிகாரிகள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு யாழ்.நீதிவான் நீதிமன்ற நீதிவான் சதீஸ்கரன் முன்னிலையில் முற்படுத்தபட்டிருந்த நிலையில் குறித்த ஐவரையும் இன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அத்துடன் இவ் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணையானது குற்றப்புலனாய்வு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

இந்நிலையிலேயே இன்றைய தினம் இவ் வழக்கு விசாரணையானது யாழ்.நீதிவான் நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளது. இதேவேளை குறித்த வழக்கு தொடர்பான குற்றப்பத்திரிகையானது விரைவாக தாக்கல் செய்யவும் இச் சம்பவத்தின் உண்மை தன்மையானது ஒரு மாத காலத்தில் வெளிப்படுத்தப்படும் எனவும் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோர் யாழ்.பல்கலைகழக சமூகத்தினருடைய சந்திப்பில் உறுதியளித்திருந்தமை குறிப்பிடத்தக்கதாகும். (செ-4)








யாழ்ப்பாணம் 0768226241 | கிளிநொச்சி 0768226240 | நெல்லியடி 0776699892 | பருத்தித்துறை 0768226237 | வல்வெட்டித்துறை 0776697960

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

A/L 2017 2018
வர்த்தகப் பிரிவு
பொருளியல் S.ஜெயக்குமார்
கணக்கீடு S.தவா
வணிகக் கல்வி V.முரளி
சனி ஞாயிறு } 8.00 AM-2.00PM
DCM யாழ் நகர்
வினா விடை வகுப்புகளும்
(சி-6312)

அகரம் கல்வி நிலையம்
(6473)
மல்லாகம்
கே.கே.எஸ்.வீதி, காங்கேயன் வெதுப்பகம் முன்பாக
கொக்குவில்
கே.கே.எஸ்.வீதி, சம்பியன் வீதி அருகில்
06 - O/L வரையான ஆங்கிலமொழி, தமிழ்மொழி மூல வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
புதிய கல்வியாண்டு 2017
தரம் - 06ற்கான அனுமதிகள் 02.11.2016 இல் இருந்து வழங்கப்படுகின்றன அனுமதிகளைத் தினமும் மாலை 3.00 மணி தொடக்கம் 6.00 மணிவரை பெற்றுக்கொள்ள முடியும் வகுப்புக்கள் ஆரம்பமாகும் திகதியினையும், நேரத்தினையும் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுங்கள். "அகரம் எம்தேசக் குழந்தைகளின் ஏற்றமிகு எதிர்காலம்!" - நிர்வாகி

நீங்கள் தொழில் தேடுபவரா?
முன்னணி நட்சத்திர ஹொட்டேல்களில் Front Office, Restaurant, Room Service, Kitchen போன்ற பகுதிகளில் வேலைவாய்ப்புடன்
O/L உடன் Diploma in Hotel Management
CERTIFICATE - DIPLOMA - DEGREE
With FREE English Course
Up to 30% Discount
பயிற்சிக் காலத்திலேயே உழைக்கும் வாய்ப்பு
கற்கைநெறி நிறைவில் நிரந்தர வேலைவாய்ப்பு
வெளிநாடு செல்ல விரும்புவோருக்கு விசா ஏற்பா(
புதிய பிரிவுகள் ஆரம்பம் Week & Weekend Batch
அனுமதிகளுக்கு 077 3616 798
www.sikaram.lk
Sikaram Academy
021 222 0011
SIKARAM ACADEMY SCHOOL of HOSPITALITY
இல.17,5, 1ஆம் குறுக்குத்தெரு (வேம்படி வீதி), யாழ்ப்பாணம்.
(சி-6305)

காணி தேவை
இயக்கச்சியில் A9 பிரதான வீதியில் காணி தேவை.
தொடர்புகளுக்கு:-
0776146253
(6505) (சி-6315)

தற்போது தரம் 4 கற்கும் மாணவர்களுக்கான புலமைப்பரிசில் (2017) மாதிரிப் பரீட்சை
"புலமைச் சிட்டு"
ஆரம்பம்:06.11.2016
ஞாயிறு தோறும் பரீட்சை
விரும்பிய 6 நேரங்களில்
தொடர்புகளுக்கு:-
புதிய நாவலர் கல்வி நிலையம்
ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
T.P:0774598440
(சி-6311)

பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பண கூட்டம்-2016
இடம்:-பாடசாலை வளாகம்,
யா/சுன்னாகம் றோ.க.த.க.பாடசாலை.
காலம்:-06.11.2016 (ஞாயிற்றுக்கிழமை)
நேரம்:-பி.ப 3.00
1887இல் ஆரம்பிக்கப்பட்ட யா/சுன்னாகம் றோ.க.த.க.பாடசாலை தனது 130ஆவது ஆண்டை நோக்கி பயணித்துக் கொண்டிருக்கும் இந்த வேளையில் பாடசாலையில் கல்வி கற்று வெளியேறிய அனைவரும் ஒன்றிணைந்து பழைய மாணவர் சங்கத்தினை உருவாக்க வேண்டிய காலத்தின் கட்டாய தேவையில் உள்ளோம். பாடசாலையின் தாய்மடியில் தவழ்ந்து கல்வி பயின்று பல்வேறு துறைகளிலும் மிளிர்ந்து வரும் அனைத்து பழைய மாணவர்களும் குறித்த தினத்தில் குறித்த நேரத்தில் சமுகம் அளிக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம்.
நன்றி
அதிபர், பாடசாலை சமூகம்
யா/சுன்னாகம் றோ.க.த.க.பாடசாலை
(சி-6310)


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.11.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.